No. 1693. சிதம்பரச்செய்யுட்கோவை.

CIDAMBARACCEYYUṬKŌVAI.

Substance, palm-leaf. Size, 9⅞ × 1½ inches. Pages, 42. Lines, 10 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, new.

Begins on fol. 38*a*. The other works herein are Śalliyanūl 1*a*, Oṭṭiyanūl 26*a*.

Complete.

A eulogy on God Śiva, worshipped under the name of Naṭarāja in the sacred shrine at Cidambaram. The stanzas of this work are written with a view to illustrating the different kinds and classes of metrical composition in Tamil poetry. The author is Kumara Guruparasvāmigaḷ. The work has been printed. Each stanza is followed by explanation in prose of the metres, etc., illustrated by it.

Beginning:

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
வாங்கொன்றைக் கண்ணி யவர்.

இது, சீர்முழுதும் எதுகை யொன்றத் தொடுத்தமையாற் றலையாகெதுகை, 'பூங்கொன்றைக் கண்ணியான்' எ-ம் 'பொன்மன் றிறைஞ்சிடுக' எ-ம் வெண்சீர்வெண்டளையும் இயற்சீர்வெண்டளையும் விரவிவருதலின் இஃதொழுகிசைச்செப்பலோசைத்து; இதனானேவெண்பா இரண்டடிச்சிறுமை யுடைத்தென்பதூஉங் கொள்க.

இதனுட் கண்ணியவர் என்னும் ஒருமொழியைக் கண்ணி யெனவும் அவ ரெனவும் வகையுளி செய்து சீர்கொள்ளப் படுதலின் இது மலரென்னும் வாய் பாட்டான் முடிந்த ஒருவிகற்பக் குறள்வெண்பா. (க)

அறனன்று மாதவ னென்ப துலகெந்தை
தாள்காணுர் நாணுக் கொள.

இது இருவிகற்பக்குறள்வெண்பா. மோனை முதலியதொடையும் தொடை விகற்பமும் போலாது தொடுத்தமையால் இது செந்தொடை. (உ)

கண்ணுதல் காட்சி கிடைத்த விழிக்கில்லை
வெல்கூற்றின் ருேற்றங் கொளல்.

இதுவுமது.

அனுவெழுத்தால் இணைமோனை யலமைத்து எனைத்தொடையும், தொடை விகற்பமும்போலாது தொடுத்தமையால், இது செந்தொடை. (ங)

End:

அரசியல் கோடா தானடியார்ப் பேணு
முரசிய ருனைவேன் மன்னர்—பரசோன்
கழலிணை பொதுவில்காப் பாக
வழிவழி சிறந்து வாழியர் பெரிதே.

இது முன்னர் வெண்பாவும் பின்னர் அகவலும் புறநிலைவாழ்த்தாய் வருதலின் புறநிலைவாழ்த்துமருட்பா. வெள்ளடியும் ஆசிரியவடியும் சமமாகலின் இது சமநிலை. (அக)

(* * * *)

வம்பி னமரங்காண் மன்றுடையான் வார்கழல்கண்
டெம்பி னுறுதி பிறிதில்லை—மெய்ம்மொழிமற்
றென்மொழி பிழையாதாகும்
பின்வழி நுமக்குப் பெரும்பயன் றருமே.

இது வாயுறை வாழ்த்துமருட்பா. (அ௩)

வாழ்த்துமின் நில்லை நீளமின் மணிமன்றந்
தாழ்த்துமின் சென்னி தலைவற்கு—வீழ்த்த
புறநெறி யாற்று தறநெறி போற்றி
நெறியின் றொழுகுதிர் மன்ற
துறையறி மாந்தர்க்குச் சூழ்கட னிதுவே.

இது செவியறிவுறூஉ மருட்பா.

மருட்பா முற்றும். (அச)

Colophon :

சிதம்பர[ஞ்](ச்)செய்யுட்கோவை முற்றும்,

(கு-பு.)—

இது சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள நடராசப்பெருமான் விஷயமானது. குமரகுருபர சுவாமிகளாற் செய்யப்பட்டது. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் பாக்களையும், அவற்றின் இனமாகிய தாழிசை, துறை, விருத்தங்களையும் விளக்கும் செய்யுட்களையுடையது. ஒவ்வொரு பாட்டின்கீழும் அவ்வவற்றின் சீர், தளைப்பாகுபாடு முதலிய இலக்கணக்குறிப்பு எழுதப்பெற்றுளது. இந்நூல் அச்சிடப்பெற்றிருக்கிறது.

No. 1694. சிதம்பரச்செய்யுட்கோவை.

CIDAMBARACCEYYUṬKŌVAI.

Substance, palm-leaf. Size, $12\frac{1}{2} \times 1\frac{3}{4}$ inches. Pages, 46. Lines, 8—10 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1695. சிதம்பரச்செய்யுட்கோவை.

CIDAMBARACCEYYUṬKŌVAI.

Pages, 29. Lines, 10 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 86.

Wants 1 to 57 stanzas in the beginning.

Same work as the above.

(த-பு.)—

இது முன்பிரதி போன்றது. முதலில் 57 செய்யுட்கள் இதில் இல்லை.

No. 1696. சிந்தாமணீசர் துதி.

CINTĀMAṆĪŚARTUDI.

Pages, 6. Lines, 10 on a page.

Begins on fol. 90*a* of the MS. described under No. 270.

Complete.

A eulogy in ten stanzas on Cintāmaṇīśar, a form of God Śiva. The name of the author is not given.

Beginning:

வாழ்ந்தி டும்முயிர் காளின்னும் பேரின்ப
வாழ்வும்வேண் டிடினீவிர்
சூழ்ந்தி டுஞ்சிந்தா மணிச்சிவன் சினகரஞ்
சூழ்ந்தவன் றுணைத்தாளிற்
றாழ்ந்தி டுஞ்சிவ காமசுந் தரியுடன்
றவளமால் விடையேறிப்
போந்து பேரின்ப வாழ்வுமீந் தும்பவம்
பொடிபடுத் திடுவானே.

End:

அகலு மிவ்வுட னீர்க்குமி ழியெனை
வறிவுரு துடன்மெய்யாய்ப்
புகலு கின்றசத் தாதியாம் விடங்களைப்
புசித்திரு கின்றேனை
யிகல கன்றசிந் தாமணி யீச்சுர
னிலகுந்தன் னருளாலே
யுகல ரும்பர மானந்த வின்னமு
தூட்டிவாழ் வித்தானே.

Colophon:

சிந்தாமணீச்சுரன் ஸ்தோத்திரம் முற்றும்.

(கு.பு.)—

இந்நூல் சிந்தாமணீசர் விஷயமாகப் பாடப்பெற்ற பத்துப்பாடல்களை யுடையது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது. அச்சிடப்படவில்லை. இறுதியில் 'சிந்தாமணீச்சுரன் ஸ்ரோத்திரம்' எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. இஃதின்னதலத்தீசன் நாமம் என்பது தெரியவில்லை.

No. 1697. சிந்தாமணீசர் துதி.
CINTĀMAṆĪŚARTUDI.

Pages, 6. Lines, 10 on a page.

Begins on fol. 96*a* of MS. described under No. 270.

Complete

Same work as the above.

(கு.பு.)—

இது முன் நம்பர் பிரதி போன்றது. இதில் முற்றும் இருக்கிறது.

No. 1698. சிந்தாமணீசன் கழிநெடில்விண்ணப்பம்.
CINTĀMAṆĪSANKALINEḌILVIṆṆAPPAM.

Pages, 2. Lines, 9 on a page.

Begins on fol. 93*a* of the MS. described under No. 270.

A stanza of prayer addressed to Cintamaṇīśar with a view to confer the 4 Puruṣārthas, i.e., Dharma, Artha, Kāma and Mōkṣa on Śivasūrya, son of Muttukkālatti. At the end of the work there is a leaf containing, stanzas in praise of Ambalavānadēśikar and others.

Beginning:

ஏருரு சிந்தா மணிச்சிவன் கோவி விலங்குற விமையமீன் றெடுத்த
வெழி[ல](ற்)சிவ காம சுந்தரி யொடுநின் றிலங்குசிந் தாமணீச் சுரனே,

End:

சீருறுஞ் சிவசூ ரியனவன் றனக்குச் சிறந்துள வறம்பொரு ளின்பம்
செழித்திட நல்கி மேலும்பே ரின்பச் செல்வ நல் வாழ்வுமீந் தருளே.

சிவமயம்.

(கு.பு.)—

இது, சிந்தாமணீசுரரை நோக்கி (முத்துக்காளத்தி என்பவரது குமாரனை சிவசூரியனுக்கு) நாற்பொருளையுங் கொடுக்க வேண்டுமென்று விஞ்ஞாபனம் செய்துகொண்ட செய்யுளாதலின் இப்பெயர் பெற்றது.

95*a* ல் மீட்டும் இச்செய்யுள் எழுதப்பட்டுள்ளது.

இந்நூல் பூர்த்தியானவுடன் அம்பலவாண தேசிகர் முதலானோர் விஷயமான சில பாடல்கள் ஓர் ஏட்டில் உள்ளன.

No. 1693. சிவக்ஷேத்திரசிவநாமப்பஃறொடை. ŚIVAKṢĒTTIRAŚIVANĀMAPPAḤṚODAI.

Pages, 44. Lines, 9 on a page.

Begins on fol. 187*a* of the MS. described under No. 1123 wherein this work was omitted to be given in the list of other works.

A eulogy on God Śiva and Goddess Pārvatī worshipped in the various recognized Śaiva shrines, mentioning the different names by which they are called there. The author of the work is Koṟṟavangudi Umāpatiśivācāriyar. Both in the beginning and in the end, and in the introductory stanza the work is said to belong to the Paḥroḍai kind of composition, but the work has been printed under the name of Śivakṣētrśivanāmakkaliveṇbā.

Beginning:

சேத்திர[ஞ](நா)மப் பஃறொடை.

நன்மை மிகுந்தசிவ நாமப் பஃறொடையைச்
சொன்மொழியி னாலே துதிப்பதற்குப்—பன்மைத்
திருப்பதிக டோறுந் திகழ்களிற்றின் றாளை
விருப்பதிக மா[க]நெஞ்சே வேண்டு.

சிவசுத கணபதி திருவடி சரணம்.

பொன்னி வ(டகரையி)ற் பொன்னம் பலக்கோயின்
மன்னுசிவ காமி மகிழ்ந்தேத்த—நன்னடன
மாடுஞ் சபாபதியே யம்மையுமை கண்குளிர
நாடுந் திருமூல நாயகா—நீடுதிரு
வேட்கள மாநகரின் மேவுநல்ல நாயகிக்கு
வா[ட்](ழ்க்)கைபுரி பாசுபத மன்னவா—வாக்கமிகு

End:

எண்ணிலாக் கால மிசைந்துன் றனைமறந்து
கண்ணிலார் போலக் கலங்கினேன்—பண்ணுதவ
மில்லாக் கொடும்பாவி யேயெனினு நன்னெறியா
னில்லாக்கல் லாப்பொல்லா நெஞ்சுடைய—புல்லனே
யாகினுமென் மீது மருட்கிருபை வைத்தனது
போகசிவா னந்தமலர்ப் பொற்பாதத்—தேகமாய்ப்
பந்த மறவிணையும் பாக்கியமும் பேரன்புந்
தந்தருளு[ந் தா](ன்று)ளே சரண்.

திருச்சிற்றம்பலம்.

சரணமென் றுன் றண்மலரைச் சாருமெளி யேற்குன்
னருளையன்றி வேறுமர னுண்டோ—கரணங்
கடந்தபர மானந்தக் கண்ணுதலே யுன்பே
ரடைந்தசொற்பா மாலையுங்கொண் டாள்.

திருச்சிற்றம்பலம்.

Colophon:

சேத்திரநாமப் பஃறொடை முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் சிவதலங்களையும் அவ்வத்தலங்களில் சுவாமிக்கும் தேவிக்கும் உள்ள திருநாமங்களையுங் கூறித் துதிப்பது. கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியராற் செய்யப்பட்டது. சிறந்த நடையுடையது. அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் ஈற்றிலுள்ள 6 கண்ணிகள் அச்சுப்பிரதியினின்றும் வேறுபடுவதோடு, 'சரணமென்றுன்' என்னும் வெண்பா அச்சுப்பிரதிகளிலில்லை.

இந்தப் பிரதியின் முதலிலும் இறுதியிலும் 'சேத்திரநாமப் ப∴றொடை' என்றும், காப்புச் செய்யுளில் 'சிவநாமப் ப∴றொடை' என்றும் இந்நூல் குறிக்கப்பட்டுள்ளது. அச்சுப் பிரதியில் 'சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா' எனக் குறிக்கப்பட்டுள்ளது.

No. 1700. சிவப்பிரகாசச்சிவவீரபத்திரர்துதி.
ŚIVAPPIRAKĀŚACCIVAVĪRABADDIRARTUDI.

Pages, 6. Lines, 8 on a page.

Begins on fol. 33*a* of the MS. described under No. 82.

Complete in twelve stanzas.

In praise of God Vīrabhadra, also called Śivaprakāśa, worshipped in the Vīraśaiva Mutt at Tuṟaiyūr or Tuṟaiśai.

Beginning :

நீர்மலி வேணி யிறைவனைப் பரவ
நெடியமா லயன்புரு கூத
னிகரில் வானவர்க ளெண்டிசைப் பாலர்
நிகழ்முடித் தக்கனே முதலோ
ரேர்பெறப் பணியுங் காலையிற் றக்க
னிறையழைத் திலனெனக் கறுவி
யெழின்மக மியற்றத் தேவிமே வுதல்கண்
டிழித்துரை யவன்சொல விறைவி
யாரழ லதனிற் குளித்திட வதுகேட்
டர(ன்) சினங் கொளச்சினத் துதித்தங்
கண்டகோ ளகையிற் றனிமுடி யறைய
வாயிரஞ் சிரத்தொடும் வருவோய்
சீர்திகழ் துறையூர்த் திருமட மீது
சிறந்தசிங் காதனத் தமர்ந்த
சிவப்பிர காச மெனப்பெயர் படைத்த
சிவவீர பத்ரசின் மயனே.

End :

சைவமே முதல சமயமா றினுக்குந்
தலைமைய தாகுநல் வீர
சமயமென் றியாரு முலகிலோ தரிக்கத்
தரித்தனை சிவனேநின் றலையின்

மெய்வகைச் சமய விதியெலா மெடுத்து
விளம்பினை யிச்சம யத்தோர்
வேண்டிடுங் கரும மனித்தனை யுனையே
விரும்பினோர் தமைவிரும் பினவை
யையனு மெமது சிவப்பிர காச
னனுதினம் வினவுகா ரியத்தை
யருளியே பக்கத் துணையதா யமரு
மங்களங் காங்கவை போகா
செய்யதார் துறைசைத் திருமடமதனிற்
சிறந்தசிங் காதனத் தமர்ந்த
சிவப்பிர காச மெனப்பெயர் படைத்த
சிவவீர பத்ரசின் மயனே. (யஉ)

சிவப்பிரகாசன் றிருவடிவாழ்க.

(கு-பு.)—

இது துறையூரிலுள்ள வீர சைவ மடத்திலிருக்கும் வீரபத்திரக் கடவுள் விஷயமான துதி. இப்பாடல்களால் இம்மூர்த்திக்குச் 'சிவப்பிரகாசம்' என்ற ஒரு பெயருண்டென்று தெரிகிறது. இந்தப் பிரதியிலுள்ள செய்யுட்கள் 12. இதில் இந்நூல் பூர்த்தி உள்ளது. செய்புள் நடை நன்றாயிருக்கிறது.

No. 1701. சிவபெருமான்துதி. ŚIVAPERUMĀNTUDI.

Pages, 5. Lines, 7 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1426.

Contains seven stanzas, of which the last four stanzas are taken from the Tiruviḷayāḍaṟpurāṇam.

A eulogy on God Śiva.

Beginning:

கையார் மழுவெம் படையாய் சரணம்
கருணைக்கடலே சரணஞ் சரணம்
பையா டரவத் தணியாய் சரணம்
படர்செஞ் சடையாய் சரணஞ்சரணம்
மையார் கலிவந்தற நொந்திட வான்
மழைமஞ் செனவே வருநஞ்[ை]சயினு
மையா சரணஞ் (சரணம்) மெனையா
ளமலாவிமலா சரணஞ் சரணம். (க)

(* * * *)

தொத்தாரி தழிச் சடையாய் சரணம்
சுருதிப் பொருளே சரணஞ்சரணம்
சத்தாகிய சிற் குணனே சரணஞ்
சமனுக்கொரு வெஞ்சமனேசரணம்

முத்தா ரிளவெண் ணகையம் பிகை தன்
முறுகுந் தவசிந் தனைகண் டருளு
மத்தா சரணஞ் சரண(ம்) மெனையா
ளமலாவிமலா சரணஞ் சரணம். (௩)

திருச்சிற்றம்பலம்.

பெரியாய் சரணஞ் சிறியாய் சரணம்
கரியாகிய வெங்கணனே சரணம்
அரியா யெளியா யடிமாறி நடம்
புரிவாய் சரணம் புனிதாசரணம். (௧)

End:

இருளாய் வெளியாய் சரணம் மெனையும்
பொருளா கநினைந் துபுரந் தயன்மால்
தெருளா தநடந் தெரிவித் தெனையா
ளருளா சரணம் மழகா சரணம். (௭)

(கு-பு.)—

இது சிவபெருமான் விஷயமான துதி. இதில் 7 செய்யுட்கள் இருக்கின்றன. இவற்றுள்; பின்னுள்ள 4 செய்யுட்கள், திருவிளையாடற் புராணத்து மாறியாடின படலத்துள்ளவை; முதன் மூன்று செய்யுட்களின்னவிடத்துள்ளவையெனத் தெரியவில்லை.

No. 1702. சுந்தரானந்தமூர்த்திபதம்.
SUNDARĀNANDAMŪRTTIPADAM.

Pages, 3. Lines, 6 on a page.

Begins on fol. 7*a* of the MS. described under No. 1074.

Complete.

A eulogy on God Śiva written in a kind of rhythmic composition called Padam.

Beginning:

சுந்தரானந்த மூர்த்தியே ஓம்
அரகரசிவசிவ—ஆதிபராபர
சுந்தரானந்த மூர்த்தியே
சுந்தரானந்தசிவ—சந்திராதித்தகுரு
மந்திரா மூலமணி—மந்திரா யோகமுயர்
சுந்தரனே சிவ—சந்திர சேகர
மந்திரமாமணி மந்திர மூலனே—சுந்தரா

End:

சங்கரானந்த மயமே—சிவ சங்கரலிங்க . . . . .
பொங்கமாயின்றருள்—சிங்கம்வேல் சுப்பிரமணியனும்.
(* * *
எங்குங் காணுமதுவை யிகபர முழுமுத
லென்னை மகத்துவ பெவ . . . . . ர பரமறக ? சிவவஸ்துவே—சுந்தரா

(கு-பு.)—

இது சிவபெருமான் விஷயமான தோத்திரம். 'பதம்' என்னும் ஒருவகை இசைப்பாவாலாயது. நடை சாதாரணமானது. பிழைகள் மிகுதியாகவுள.

No. 1703. சொக்கநாதர்வெண்பா.

SOKKANĀTARVEṆBĀ.

Pages, 10, Lines, 8 on a page.

Begins on fol. 12 *a* of the MS. described under No. 1390.

Incomplete.

A eulogy on Sokkanātar, a form of God Śiva, worshipped in Madura. Each stanza ends with the word Sokkanāta in the end. The name of the author is not given. The work is printed.

Beginning:

நீயே பரமசிவ னுனக்கால் நின்மலனே
நாயே னுளமகிழ நன்றாகப்—பேயேன்
கருத்தடங்க நின்கருணை காட்டியின்ப வெள்ள
மருத்திடுவை சொக்கநா தா. (க)

புண்கட்டு தோலைப் புதுக்கி மயக்கமுறக்
கண்கட்டு வித்தைபோற் காட்டுவாய்—பண்கட்டுப்
பூணுவேன் றன்னையினிப் பூ(ர)ணத்திற் பூணவருள்
தாணுவே சொக்கநா தா. (உ)

End:

அடியார் பரிபாக மெல்லா மறிந்த
படிகீழ்ப் பரமேற் பரத்திற்—கொடுபோ'
யிருத்திடுவை . . . சொலினு மேலாய போக
மருத்திடுவை சொக்கநா தா. (சஙு)

வாழை மலத்தில் வருந்தி மிகவுடைந்த
வேழையே[ர]ற் கையோ விரங்குவாய்—கோழையனாய்ப்
போனேன் புல . . . . , ...
. . . .

(கு-பு.)—

இது, மதுரையில் எழுந்தருளி யிருக்கும் சொக்கநாதக் கடவுள் விஷயமான துதி. தம்மை நல்வழிப் படுத்தி யாட்கொண்டு கிருபை செய்யுமாறு சொக்கரை வேண்டிப் பாடப்பெற்றுளது. வெண்பாவாலாயது. செய்யுள் நடை நன்றாக விருக்கிறது. ஒவ்வொரு வெண்பாவும் இறுதியிற் "சொக்கநாதா" என்னும் விளியை யுடையது. இந்தப் பிரதியில் இந்நூல் அபூர்த்தியா யிருக்கிறது. இது அச்சிடப்பெற்றிருக்கிறது.

No. 1704. சோதிப்பத்து.

ŚOTIPATTU.

Pages, 5. Lines, 7 on a page.

Begins on fol. 20*a* of the MS. described under No. 314.

Complete.

Same work as that described under R. No. 302 (*g*) which was copied from this MS.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 302 (g) நம்பர் பிரதியின் மூலப் பிரதி. இதில் இது முற்றும் உள்ளது.

No. 1705. தக்ஷிணாமூர்த்திதுதி.

DAKṢIṆĀMŪRTTITUDI.

Pages, 3. Lines, 14 on a page.

Begins on fol. 121*a* of the MS. described under No. 270.

Complete in ten stanzas.

In praise of God Dakṣiṇamūrti or Śiva as worshipped in a place called Agaram. The name of the author is not known.

Beginning:

திருக்காஞ்சி நகர்வயி னென்றுஞ் சிறந்த செல்வப்
பெருக்காம கரத்தைக் கைலைப் பிறங்கலென்றே
தருக்கா யுறைந்தாலடி நீழலிற் றங்கிநால்வர்க்
கிருக்கோதி யருளிய வெந்தையை யே[ற்று](த்து)வாமே. (க)

End:

விளங்குந் திருக்காஞ்சி யின்மேவகரம் பதியா
யுளங்கொண் டுறைதக்ஷிணா மூர்த்தி யொருவனே நங்
களங் கந்தவிர்த்தாள் பவனுமெனவே கசிந்து
விளங்கு மனனே நினைவேறிலை மேற்றிருவே. (௰)

திருச்சிற்றம்பலம்.

Colophon:

அகரப்பதி தக்ஷிணாமூர்த்தி தோத்திரம் முற்றும்.

(கு-பு.)—

இது காஞ்சீபுரத்து அகரமென்னுந் தலத்தி லெழுந்தருளியிருக்கும் தக்ஷிணாமூர்த்தி விஷயமான தோத்திரம். நடுத்தரமான வாக்கமைந்த பத்துப் பாடல்களாலாயது. இந்தப் பிரதியிற் பூர்ணமாக விருக்கிறது. இயற்றிய வர் பெயர் தெரியவில்லை.

No 1706. தருமேசன்தோத்திரம்.
DARUMĒŚANTŌTTIRAM.

Pages, 8. Lines, 10 on a page.

Begins on fol. 63*a* of the MS. described under No. 270.

Complete in ten stanzas.

A eulogy in Andadi form of composition on Darumēśan, a form of God Śiva, as worshipped in a shrine at Conjeeveram.

Beginning:

மதிபுனவார் பொற்சடையும் விழிமூன்றுங்
கறைமிடறும் வளர்திண் டோளுங்
கதிர்மழுமா னபயவா தம்பொருந்து
கரநான்குங் கவின்முந் நூலுந்
துதிபெருகு மகிலாண்ட நாயகியா
ளிடப்புறமுந் துகளில் காஞ்சிப்
பதிமருவு தருமேசன் பரிபுரப்பா
தமுமுளத்துப் பதித்து வாழ்வாம். (க)

End:

இசைபெருகுந் திருக்காஞ்சி யிடத்தொளிருந்
தருமேசத் தெந்தா யுன்ற
னசையெனையுன் றிருவடிக்கீ ழுறநினைதன்
மலத்தினசை நவிவித் தென்னை
யிசைதருகா மாதிகளி லியக்கியரும்
பவக்கடற்கே யிழிப்ப தென்றால்
வசைதரும்ம மலமறுத்துன் னசை . டிய
வெனையடிக்கீழ் மதித்தாட் கொள்ளே. (க0)

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இது, காஞ்சிபுரத்திலுள்ள தருமேசனென்னும் சிவபெருமானுடைய துதி. செய்யுள் நடை நன்றாக இருக்கிறது. செய்யுள் பத்தும் அந்தாதியாக அமைந்திருக்கின்றன. இந்தப் பிரதி பூர்த்தி உள்ளது; சில ஏடுகள் செல்லரிக்கப்பட்டிருக்கின்றன.

No. 1707. தருமேசன்தோத்திரம்.
DARUMĒŚANTŌTTIRAM.

Pages, 4. Lines, 9 on a page.

Begins on fol. 423*a* of the MS. described under No. 1272.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இதன்கண் இப்பாடல்கள் பத்தும் உள்-

No. 1708. திகிரிவனப்பத்து.

TIGIRIVANAPPATTU.

Pages, 4. Lines, 8 on a page.

Begins on fol. 11*a* of the MS. described under No. 314.

Complete in ten stanzas.

Same work as that described under R. No. 302(*c*) of the Triennial Catalogue of Tamil MSS., which work was copied from this one.

(கு-பு.)—

இது, மூவருடத்திய காட்லாக் 302 (c) நம்பரில் வந்துள்ள பிரதியின் மூலப் பிரதி. இதில் இந்நூற் பத்துச் செய்யுளும் உள்ளன.

No. 1709. தியாகராசர்துதி.

TIYĀGARĀŚARTUDI.

Pages, 7. Lines, 6 on a page.

Begins on fol. 51*a* of the MS. described under No. 257.

Complete.

A treatise in ten stanzas eulogizing the greatness of God Śiva, worhipped under the names, Tiyāgarājar in Tiruvoṟṟiyūr near Madras. The work has not been printed. Each stanza ends with one and the same attributes of God Śiva.

Beginning:

திருவணி புவியி லறிவொடு சனனஞ்
சேர்ந்திடத் தீவினை யகற்றிச்
சிரமுனை வணங்கக் கதைசெவி கேட்கச்
சிந்தையிற் சந்தத நினைக்கக்
கரங்களாற் பூசை பண்ணிட நாவாற்
களிப்புறத் தோத்திரஞ் செய்யக்
கண்களாற் காணக் கால்வலம் புரியக்
கருணையாற் காப்பதுன் கடனே
சிரத்துடன் மாலை கொன்றைவெள் ளெருக்குச்
சிறந்திடு மதிநதி புலித்தோல்
செங்கையின் மழுமான் பாசமங் குசமுஞ்
செழித்திடச் செஞ்சடர் முடியு
மருவுரு வாகி யெழுத்தறி வித்த
வையனே யொற்றியூ ரமர்ந்த
வரகர சிவனே த்யாகவை போகா
வத்தனே பத்மதாண் டவனே, (க)

End:

வேடனு யுதைத்து மெச்சிலைக் கொடுத்தும்
விளங்கவே கல்லினு லெறிந்தும்
வில்லினு லடித்து மோர் பிழை செய்தான்
மிகத்தய வளித்தருள் புரிந்தாய்
மூடனு யடியேன் செய்பிழை யநேக
முற்றுமே பொறுத்தெனை யாள்வாய்
முதுமறை புகழத் திருவருள் பரவு
முத்தனே முடிவிலா முதலே
தேடரி தாக மாலயன் றனக்குச்
சித்தசன் றன்னையே வென்று
திகழுமுப் புரத்தை யெரித்திட நகைத்துச்
செங்கைமான் மழுவினைத் தரித்து
ஆடர வணிந்து மதிநதி புனைந்து
மன்புட னொற்றியூர் தனில்வா
ழரகர சிவனே த்யாகவை போகா
வத்தனே பத்மதாண் டவனே. (௪௦)

முற்றும்.

திருவொற்றியூர் தியாகராயர் . . . . . . ரக்ஷிக்கவும்.

(கு-பு.)—

இது, "அரகர, சிவனே, த்யாக, வைபோகா, அத்தனே, பத்மதாண்டவனே" என்ற விளிகளை ஒவ்வொரு செய்யுளின் ஈற்றிலும் மகுடமாகப் பெற்றுள்ள ஒரு பதிகம்; திருவொற்றியூர்த் தியாகராஜமூர்த்தியினது துதி; செய்யுள் நடை நடுத்தரமானது. இந்தப் பிரதியில் பூர்த்தியாகவுள்ளது. அச்சிட்டதன்று.

No. 1710. தியாகேசர் திருவிளையாட்டகவல்.
TIYĀGĒŚAR TIRUVIḶAIYĀṬṬAGAVAL.

Pages, 4. Lines, 6 on a page.

Begins on fol. 78*a* of the MS. described under No. 1125.

Complete.

A eulogy on Tiyagēśar, by referring to the various miraculous deeds of God Śiva narrated in the Tiruviḷaiyāḍarpurāṇam. The composition of the work is not of the Agaval kind but of the nature of the Kaliveṇbā.

Beginning:

தியாகேசர் திருவிளையாட்டகவல்.

கனங்குழை (திருக்க)ச்சூர் கருணை கஞ்ச னுட்சியார்க்குத்
தினங்களிக்க ஞானமூர்தத் தியாகேசர் - மனங்களிக்க
மதுரை யாண்ட வித்தகர் பாண்டியர்க்குக்
குதிரை பிடிக்க மனங்கொள்வாரோ - யெதிரெதிரே

பெருத்த திருப்பள்ளியிலே பெண்ணுக்குத் தாயாய்
மருத்துவமுஞ் செய்ய மனம் (வை)[ய்]த்தீர் - பொருத்தமுடன்
பெண்ணை செய்தகுறை போதாதோ வைகையிலே
மண்ணை சுமக்கவுனை வைத்தாரோ - அண்ணே(ர்)ன்
கண்ணனிடு கறிக்கு(க்) காலாளுதையுண்டீர்
ப[ண்ணி](ன்றி)க் குட்டிக்குந் தாயாய்ப் பால் கொடுத்தீர் - எள்ள (ள)வும்

End :

நெஞ்ச மிரங்காதா னீயே கெதியென்றால் -
வஞ்சமென்ற சொல்லுமக்கு வராமோ - தஞ்சமென
நீரே கெதியென்று நி[ட்](ச்)சயமாய் நம்புவோர்க்கு(க்)
கூரேதா யென்று யெ (?) னை விடலாமோ - வேறேயொரு
திக்கா ரெனக்குமூர்த தியாகேசா
தற்காரு முன்பாதஞ் சரணம்.

(கு-பு.)—

இது திருக்கச்சூர்த் தியாகராஜர் விஷயமான துதி; நடை தாழ்ந்தது. பிழைகள் மிகுதியாகவுள. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றும் உளது.

இதன் முதலில் 'தியாகேசர் திருவிளையாட்டகவல்' என்று இதற்குப் பெயர் குறிக்கப்பட்டிருப்பினும், பாடல் கலிவெண்பாவாகவுளது; அகவல் அன்று.

No. 1711. திருமேற்றளித்தோத்திரம். TIRUMĒṞṞAḶITTŌTTIRAM.

Pages, 4. Lines, 13 on a page.

Begins on fol. 67*a* of the MS. described under No. 1229.

Complete in ten stanzas.

A eulogy on God Śiva as worshipped in Tirumēṟṟaḷi in Conjeeveram. The name of the author is not given. The work has not been printed.

Beginning :

தேவேதிரு மேற்றளி மேவிய தெய்வமேநின்
பூவாரடி யைத்தொழு தன்பொடு பூசைசெய்யே
னுவார வழுத்திலே னெஞ்சினு ணட்டகில்லே
னுவாவடி யேனுய்யு மாறென்னருள் செய்வாயே. (க)

End :

காட்டாயுனைக் காட்டியபின் னெனைக் காட்டிநின்றே
கூட்டாயுன்றன் னோடெனைக் கூட்டிநற் கோதில்பேரின்
பூட்டா யெனை யுன்னுளுறக்கி நீ யோங்கி நில்லாய்
சேட்டார் மதில் சூழ் திருமேற்றளித் தேவதேவே.
திருமேற்றளித் தோத்திர முற்றும். (ய)

(கு-பு.)—

இது காஞ்சீபுரத்திலுள்ள திருமேற்றளி என்னுந் தலத்தெழுந்தருளி யிருக்கும் சிவபெருமான் விஷயமான துதி. 10 பாடல்களாலாயது. செய்யுள் நடை சிறந்தது. அச்சிடப்படவில்லை. இயற்றியவர் பெயர் தெரியவில்லை இத்தப் பிரதி பூர்த்தியுடையது.

No. 1712. திருமேற்றளித்தோத்திரம்.
TIRUMĒṞṞAḶITTŌTTIRAM.

Pages, 6. Lines, 9-10 on a page.

Begins on fol. 60*a* of the MS. described under No. 270.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இதில் ஷை பத்துப் பாடல்களும் உள.

No. 1713. திருமேற்றளித்தோத்திரம்.
TIRUMĒṞṞAḶITTŌTTIRAM.

Pages, 6. Lines, 5 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 337.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இதிற் பத்துப் பாடல்களும் இருக்கின்றன.

No. 1714. திருமேற்றளித்தோத்திரம்.
TIRUMĒṞṞAḶITTŌTTIRAM.

Pages, 3. Lines, 9 on a page.

Begins on fol. 422*a* of the MS. described under No. 1272.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இதன் கண் இந்தப் பாடல்கள் பத்தும உள்ளன.

No. 1715. திருவிளையாடற்கருணைத்திருவிருத்தம்.
TIRUVILAIYĀḌARKARUṆAITTIRUVIRUTTAM.

Pages, 8. Lines, 6 on a page.

Begins on fol. 180a of the MS. described under No. 304.

Complete in twelve stanzas.

A poem extolling the grace and mercy of God Śiva by referring to His 64 miraculous deeds done as a matter of sport in Madura.

Beginning :

திருவிளையாடல் கருணை(த்) திருவிருத்தம்.

திருவாலவாயர் சவுந்தரநாத ரங்கயற்கண் செல்வி
பாகர்
விரிவாகச் செய்த வெண்ணெண் விளையாடல் தனைச்
சுருக்கி விருத்தப்பாவா[ர்](ற்)
பரிவாகச் செய்வதற்குப் பொற்பதும(ம)லர்க் -
கரையிற்[ப்] பண்பால் வைகும்
மருவார்ந்த பிறை மவுலிச் சித்தி வி[ளு](நா)யகன்
மலர்த்தாள் வழுத்தல் செய்வாம்.
பொன்னுலகத் திடையவர்கோன் பழி நீக்கி
வெள்ளானைச் சாபம் போக்கி
மன்னுகடம் பாடவியை மாமதுர புரமாக்கி
மகம் புரிந்த
தென்னவற்கு மகளாகி மூன்று முலையுடன் திக்கு
விசயஞ் செய்[து](த)
கன்னிதனை மணம் புணர்ந்து முடிதரித்து
நடம் புரிந்[து] (த)கருணை வாழ்வே. (க)

End :

இத்தகைய லீலைதனை யடியருக்கா[ய்]ச் செய் தருளு
மிறைவர் யாங்கண்
மூத்த நகை மீன விலோசனையாள் (தன்)பொற்[ப்]
பாத முழுது (ந)ம்புங்
கொத்தடிமை(ப்) பரம்பரையா மடிச்சேரி
யாதவி[நா](ளு)ற் கருணைகூர்ந்து
சித்தமிரங்கிக் காத்தல் கடனுகும் தென் -
மதுரைத் தேவதேவே. (௧௨)

திருச்சி[த்த](ற்ற)ம்பலம்.

(த-பு.)—

இந்நூல், மதுரையில் அறுபத்துநான்கு திருவிளையாடல்களை யியற்றிய சிவபிரானது கருணையைப் புகழ்வது. அத்திருவிளையாடல்கள் இன்னின்ன வென்றும், அவை அவரது கருணையானே நிகழ்ந்தனவென்றும் கூறுவது. காப்புச் செய்யுளுடன் 12 பாடல்களையுடையது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை.

No. 1716. திருவிளையாடற்கருணைத்திருவிருத்தம்.

TIRUVIḶAYĀḌAṚKARUṆAITIRUVIRUTTAM.

Pages, 8. Lines, 6 on a page.

Begins on fol. 180*a* of the MS. described under No. 304.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப் பிரதி பூர்த்தி யுடையது.

No. 1717. திருவுசாத்தானத்தோத்திரம்.

TIRUVUŚĀTTĀNATTŌTTIRAM.

Pages, 5. Lines, 14 on a page.

Begins on fol. 77*a* of the MS. described under No. 335.

Complete.

The work described under R. No. 310(*c*) of the Triennial Catalogue of MSS., Vol. II, Part 2, was copied from this one.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 310 (c) நம்பர் பிரதிக்கு மூலப்பிரதி இதில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1718. திருவுளப்பத்து.

TIRUVUḶAPPATTU.

Pages, 5. Lines, 8 on a page.

Begins on fol. 13*a* of the MS. described under No. 314.

Complete.

The work described under R. No. 302(*d*) of the Triennial Catalogue of MSS., Vol. II, Part 2, was copied from this work.

(கு-பு.)—

இந்நூல் மூவருடத்திய காட்லாக்கின் 302 (d) நம்பர் பிரதிக்கு மூலப் பிரதி. இதில் இது முற்றும் உள்ளது.

No. 1719. நமச்சிவாய மாலை.

NAMACCIVĀYAMĀLAI.

Substance, palm-leaf. Size, $14\frac{5}{8} \times 1$ inches. Pages, 18. Lines, 6 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 1*a*. The other works herein are Mūvarammānai 1*a*, Vaḍivuḍaiyammai navarattinamālai 20*a*, Tiruvāmāttūrkalambakam 39*a*.

Complete.

A eulogy on God Śiva in 104 stanzas, each of which begins with the successive letters of the alphabet and ends with the expression Namaccivāya. The name of the author is not given. The work has been printed but the present MS. contains some additional stanzas and variations in the readings. The author of the work appears to be Gurunamaśivāya Dēvar of Cidambaram.

Beginning :

அறைகடலயனு[ம்] (மா)லும மாரு முனிவர்தாமு
முறை முறை வணங்கியேத்து முதல்வனே நமச்சிவாய. (க)
ஆதியாய் வேதநான்கு மடிமுடி தெரியாவண்ணஞ்
சோதியா[யவொ](யொ)ளியாய் நின்றதுணைவனே நமச்சிவாய. (உ)

End :

[வு]உறுவன பலவுயி[ற்](ர்க்)கு முயி[ற்](ர்க்) குயிரான சோதி
வேறுரு வுருவுங் காணேன் விமலனே நமச்சிவாய. (க0௩)
[ஞூ]ஊணுவர்[ண](ந)ன் புலத்தில் ஓமென்று நின்ற மூர்த்தி
காணுவார் காண நீண்ட கடவுளே நமச்சிவாய. (க0௪)

(கு-பு.)—

இந்நூல் சிவபெருமானுடைய தோத்திரமாக வமைந்தது. அகரமுதலாக, மொழிக்கு முதலில்வரும் எழுத்துக்களை முறையே ஒவ்வொரு செய்யுட்களின் முதலிலும், 'நமச்சிவாய' என்பதை இறுதியிலும் அமைத்து இயற்றப்பட்ட நூற்றுநான்கு செய்யுட்களாலாகியது. சிதம்பரம் - குருநமசிவாய தேவர் இதை இயற்றினாரென்று தெரிகிறது. இப்பிரதியில், அச்சுப் பிரதிகளில் இல்லாத பாடல்கள் சிலவும், பல பாடபேதங்களும் காணப்படுகின்றன.

No. 1720. பொய்யாமொழீசர் அஷ்டகம்.
POYYĀMOḺĪŚAR AṢṬAKAM.

Pages, 4. Lines, 4 on a page.

Begins on fol. 79*a* of the MS. described under No. 372.

Complete.

A work in eight stanzas in praise of Poyyāmoḻīśar, a form of God Śiva, worshipped in Poykaipākkam. The name of the author is not given.

Beginning :

கன்னல்வில்லியும் வன்னமாமலர்க் கணைகளேவியே யனுதினு
னுன்னையே கதியென்றுவாடி மெயுருகுமு ளினிமருவுவாய்
புன்னைமத்தமுங் கொன்றைதும்பையும் பூணும்வேணி புராணனே
யின்னிலத்திற் பொய்கைப் பொய்யாத மொழீசனே சருவேசனே. (க)

End :

ஆறுமாறு மேனூறுபத்தி தழம்புயத்துனே நம்பினேன்
வேறுமாறி லேத்தேற வென்னேயாள்வேத நாதவிநோதனே
நீறுமாறு மெய்வீறுகம்புனே நித்தனே பரிசுத்தனே
யேறிவேறும் பொய்கைப்பொய்யாதமொழீசனேசருவேசனே. (அ)

Colophon :

அஷ்டகம் முற்றும்.

(கு-பு.)—

இது, பொய்கைப்பாக்கமென்னும் ஊரிலெழுந்தருளியிருக்கும் பொய்யாமொழீசர் என்னும் சிவபெருமான் விஷயமானது. எட்டுச் செய்யுட்களாலாயது; ஆதலின் அஷ்டகமெனப் பெயர்பெற்றது. இயற்றிவர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப்பிரதியில் முற்றுமிருக்கிறது.

No. 1721. பொய்யாமொழீசர்கலித்துறை.

POYYĀMOḺĪSARKALITTUṞAI.

Substance, palm-leaf. Size, 10 × 7/8 inches. Pages, 92. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Similar to the work described above.

Beginning :

(* * * *)

நா(ளு)மையாற் செய்ததென்பர் சுகத்தினிலட்டமுற
ஆளுனுடலயர் வுற்றிடிற் முனென வோருடலைத்
தாளுடினன்கும மாட்டாப் பேர்தெய்வத்தாழ்வென்பர் புல
வீனுமதியதென்றோ பொய்கைப் பாகையிலீசுரனே. (சு)

பல்லுயிரும் படைத்தானளிப்பா னென்மை பண்பறிந்த
நல்லவரா யறிவுற்றது குடும்ப[ற்றை](த்தை) நாடிமெலிந்
தல்லவர்கொள்வார்சிகரிப் ? பொம்மைபோலறி யாமையன்றோ
யெல்லவரும் புகழும் பொய்கை(ப்) பாகையிலீசுரனே. (கo)

* * * *

வருந்திடு மாசையினால் வைத்தவேடன்வலேயிற்பட்ட
பருந்துதன் வாய்ப்பன்னகந் தேரைநொய்ய பறவைமது
வருந்திடும் பாரவிசாரச் சுகமொப்ப தாங்குடும்பத்
திருந்திடும் புன்சுகமே பொய்கைப் பாகையிலீசுரனே. (கரு)

End :

பொருரு(ளு)டலாவியுலகமை(ம்)பூததியற் கைமெய்பொய்
யருளுணர் ஞானஞ்சுவர்க்க நரகமதாயிருந்தும்
பொருளாரணுகியிருந்தனே யொன்றிரு போதமுமாய்
இருளொளியாகி நின்றாய் பொய்கைப் பாகையிலீசுரனே. (கஅ)

ஒன்றுகக்லபபலமமாது மனனுடலுக்கு மொண்பொருட்டு
. . . . பெருத்தசைவற்
றென்றைக் கியானிருப்பேன் பொய்கைப்பாகையிலீசரனே. (கூஅ)

(கு-பு.)—

இது பொய்கைப்பாக்கமென்னும் ஊரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் விஷயமான துதி; இதை இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை, முதலிலும் இறுதியிலும் சில ஏடுகள் இல்லை. இடையிடையே பலஏடுகள் முறிந்துள்ளன. இது தாழ்ந்த நடையாலாயது. பிழை அதிகம்.

No. 1722. போற்றித்திருவிருத்தம்.

PŌṞṞITTIRUVIRUTTAM.

Pages, 2. Lines, 6 on a page.

Begins on fol. 9*a* of the MS. descrided under No. 1074

Contains only a few stanzas. Apparently a eulogy on God Śiva. The name of the author is not given.

Beginning:

வள்ளலே மலரேபோற்றி மண்சுமந்தருள்வாய் போற்றி
யுள்ளமே யொளியேபோற்றி யும்பர்கள்தலைவா போற்றி
தெள்ளுசெந்தேனேபோற்றி தீவினைதவிர்ப்பாய் போற்றி
யெள்ளிலுமென்னையாள்(வா)யிறைவனே போற்றிபோற்றி. (க)

End:

சங்கராபோற்றிபோற்றி தயாபரா போற்றி (போற்றி)
மங்கைபங்காளா போற்றி வானவர்க்கரசே போற்றி
* * * *
சுந்தரத்தோளாபோற்றி தொல்வினையறுப்பாய்போற்றி
அந்தரவாணோர் போற்றியாதியே போற்றிபோற்றி.

(கு-பு.)—

இது சிவபெருமான் விஷயமான துதி. இந்தப் பிரதியில் முதற்பாட்டு மட்டும் ஒழுங்காக இருக்கிறது. ஏனைய பலவாறிருக்கின்றன. ஆகலிற் பாடலித்துணையெனக் குறிக்கக்கூடவில்லை. இயற்றியவர் பெயர் முதலியன தெரியவில்லை.

No. 1723. வீரபத்திரசுவாமிபதிகம்.

VĪRAPATTIRASVĀMIPADIGAM.

Substance, palm-leaf. Size, 17 × 1⅞ inches. Pages, 20. Lines, 4 on a page. Character, Tamil. Condition, good. Appearance, new.

Begins on fol. 11*a*. The other works herein are Sāmaḷaiyammai Navrattinam 1*a*, Padivaṭṭammaipadikam 21*a*, Mārkavalammaipadikam 30*a*, 43*a*.

Complete.

A poem in ten stanzas in praise of God Vīrabhadra as worshipped in a place called Anumantapuram; by Svāminatha Pillai of Payyanūr.

Beginning:

சிற்பரா சத்தியின் புத்ர பரவஸ்துவாந்
தீனரக்ஷக காரண
சின்மயானந்த வைபவ குணநிதி சர்வ
ஜீவாத்ம கோடிக்கெலாம்
தற்பர தற்குண நிட்கள நிர்வாக
தடவிகட காத்ரரூப
சண்டப்பிரசண்ட கோலாகல தெய்வீக
சாட்சாத்து பரமபுருட
சற்சனவிவேக சம்பன்ன யானைக்கிளைய
சற்புத்ர தீரகோர
சனகன்முதல் முனிவர்புகழ் கனகமணி பரவுபய
சாம்[பி]ராச்ய பிரபுடீகனே
விற்பனமிகுத்த பெரியோர்திருடி யாதிபர்கள்
வீறுமனுமந்த புரிவாழ்
வீரருத்திராவமிசதீரபுத்ராய வோம்
வீரபத் திராய நமவே. (க)

End:

அஞ்ஞான விருளறவு மெ(ய்)ஞ்ஞான வரமுறவு
மனுக்கிரகஞ் செய்வதென்றன்
னுதரவி னுற் பிரம மாதியாண் டினிவிதை
யாக்கிஞேன் சீர்கருணனும்
மஞ்சார் பொழிற்சூழ்ந்து வளமைமெ.. று பையநகர்
வாழ் சாமிநாத கவிஞன்
வகுத்ததமிழ் நவரத்தின மாலை யொன்பானிவை
வாடா தொளிர்ந்து திற்கும்
கஞ்சாசனத்தனும் பஞ்சாயுதத்தனுங்
கடவுளர் தமக்கரசனுங்
கைக்கட்டி யுனதுக்ர கெம்பீர ப்ரதாபத்தை(க்)
கட்டியஞ் சொலிவாழ்த்தவும்
வெஞ்சூர் திடுக்கிட வெற்றிலைக் காப்பணியும்
வீறுமனு மந்தபுரிவாழ்
வீரருத்திராவம்சதீரபுத்திராய வோம்
வீரபத்திராய நமவே.

(கு-பு.)—

இது, அனுமந்தபுரத்தில் இருக்கும் வீரபத்திரர் துதி; இயற்றியவர் பையனூர் - சாமிநாதபிள்ளை என்பவர். இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது. சிறந்த நடையதன்று.

No. 1724. வேதகிரீசர்துதி.
VĒDAGIRĪŚARTUDI.

Pages, 8. Lines, 7—10 on a page.

Begins on fol. 43*a* of the MS. described under No. 271.

Complete.

Same work as that described under R. No. 293 (j) of the Triennial Catalogue of MSS., Vol. II, Part 2. After the end of the work there are two leaves containing some unconnected stanzas.

(த-பு.)—

இது, மூவருடத்திய காட்லாக் 293 (j) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இந்நூல் பூர்த்தியானவுடன் 2-ஏட்டில் வேறு சில பாடல்கள் காணப்படுகின்றன.

No. 1725. வேதபுரீசர் துதி.
VĒDAPURĪŚARTUDI.

Substance, palm-leaf. Size, 15 × 1 inches. Pages, 11. Lines, 4 on a page. Character, Tamil. *Condition*, injured. Appearance, old.

Begins on fol. 15*a*. The other work herein is Vēdapurīsvar andādi with commentary 1*a*.

Complete in eleven stanzas.

Similar to the work described above. In praise of God Śiva, as worshipped in Puduvai.

Beginning:

சீதளடகி(ரதி) நிலாவணி சடாதர த்[ரி]ரிலோசன
    வியோமருயிரைத்
    தேடிவரு நீலநிற வாலகள கோடிரவி சிரிகுவார் குழையனே
போதன்முதலோர்கள்சிர மாலையரவாவெயிறு
    யோகியுபவீதகுலனே
    பூணுகலைமான்மழு கபாலதி[ரி]சூலகர போர்வைமத மாவுரியனே
காதியெதிர் பாயும்வய மாவினதள் மேவரைய
    காளியுட னடவிசையே
    காணவணி நூபுரச ரோசபதமாதவர்கள் காணவரிதான பொருளே
வேதமொரு நாலுமலர் தூவிமிகு பூசைசெய
    மேன்மைதரு மூலமுதலே
    மேடைமலரோடை கடலாடை மதின்சூழ்புதுவை வேதபுரிநாத
சிவனே. (க)

End:

ஆனையணி தேர்புரவி சேனையுலகாளு மதிகாரதிதி.
    சேரவருமே
ஆசுமுதனாலுகவி பாடவருமே யதிக
    வாண்மைமதுதிவாய் மைவருமே

மானமிசை தானநிறை வானைகிசை நீதிபொறை
. . குமதிபூகம் வருமே
மானே நிகரான விழிமாதர் சுதராதரவு மாமகிழ்வு பூணவருமே
ஞானநிறை வானசிவ யோகவனு போககுரு நாதனருள்
போதம்வருமே [தோ
நாளுமிருதாளிணையின் மீதுமலர் தூவியுனை நாடிடில் வராது மூள
. . . . . . நானிலமும் வானவரும் மானவரும் மேன்மை
பெறுவாழ்வுபெறவே
மேடைமலரோடை கடலாடை மதிள்சூழ் புதுவை வேதபுரிநாத
[சிவனே. (க)

Colophon:

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் " மேடைமலரோடை கடலாடை மதிள்சூழ் புதுவை வேதபுரிநாத சிவனே " என்பதை மகுடமாகப் பெற்ற பதினொரு செய்யுட்களாலாகியது. நூலாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. செய்யுள்நடை சாதாரணமானது. வடமொழிப்பதங்கள் மிகுதியாக விரவிவந்துள்ளன. இந்தப் பிரதியில் 11 பாடல்களும் பூர்த்தியாகவுள்ளன. பிரதிமிகச் சிதிலமாயிருக்கிறது.

No. 1726. வேதபுரீசரந்தாதி, பதவுரையுடன்.
VEDAPURISARANDADI WITH COMMENTARY.

Pages, 28. Lines, 5 on a page.

Begins on fol. 1a of the MS, described under No. 1725.

Incomplete.

Similar to the work described above and with meaning word by word.

Beginning:

" வளத்தாரணிபுகழ் . . . . . குஞ்சரமே " என்பது : வள்-வளவிய தாரணி-பூமியிலுள்ளார்கள், புகழ்-புகழாநின்ற, வேதபுரீசர்-வேதபுரியையுடைய[வீ]சுரர், வணங்கும்-தம்மை வணங்காநின்ற, அன்பர்-அடியார்களுடைய, உளத்தார்-உள்ளத்திலே யிருக்கின்றவர், அணி-அலங்காரம், வளர்-மிகுந்த அந்தாதி-அந்தாதி யென்னும் பிரபந்தத்தை, உவந்துகாக்க-மகிழ்ந்து காப்பயாக, பரிமள - (வாசனை)பொருந்திய, தார்-மாலைகளும், அணி-ஆபரணங்களும், திகழும்-பிரகாசியாநின்ற, தனவல்லபை-தனத்தையுடைய வல்ல(பை யை) . . . . . . இ[ை]டப்பாகத்துடையவனே, மணற்குளத்து-மணற்குளத்திலே, ஆர்-பொருந்தாநின்ற, படை-ஆயுதமா . . . . சத்தை, அணி-தரிக்காநின்ற, ஐங்கரக்குஞ்சரமே-ஐந்து கரத்தையுடைய வாரணமுக விநாயகனே, என்றவாறு. (க)

End :

சிவனேயவரவர் செய்வினை யூட்டுந்திறமையில் வல்
லவனே யவரறியாதவனே யஞ்சமஞ்சவென்ற
தவனே யவன்பர்புகழ் வேதபுரந்தழைக்க மகிழ்
பவனே யவளவளதவை முன்புன்றன் பணிதிலேயே. (மஅ)

எ-து ' சிவனே-பரமசிவனே, அவரவர் அவரவர்கள், செய்வினை-செய்த நல்வினை தீவினைக்குத்தக்கதாக, ஊட்டுந்திறமையில்-ஊட்டுதலைச் செய்யுந்திறத்தில், வல்லவனே-வல்லமையுடையவனே, அவரறியாதவனே-அவர்களு மறியக்கூடாதவனே, அஞ்சும்-பஞ்சேந்திரியங்கள் விடயமாய் வாராநின்ற ஐந்தவாவினையும், அஞ்ச-பயப்படும்படியாய்,வென்ற-செயித்த,தவன்-தவத்துக்கு, எய்இசைந்த, அன்பர்-அடியார்கள், புகழ்-புகழாநின்ற, வேதபுரம்-வேதபுரி, தழைக்க-செழிக்க, மகிழ்பவனே-மகிழ்ச்சி கொள்ளப்பட்டவனே, அவன்-உயர்திணையாண்பாற் (படர்க்கை யொருமை) யாகவும், அவள்-உயர்திணைப் பெண்பாற் படர்க்கையொருமையாகவும், அது-அஃறிணையொருமையாகவும், அவை-அஃறிணைப்பன்மையாகவும், முன்பு-முற்காலத்திலே, உன்றன்-உன்னுடைய, பணிதிலே-செய்கைதிலையல்லவா ; என்றவாறு. (மஅ)

(கு-பு)—இது வேதபுரீசரந்தாதியின் பதவுரை. செய்தவர்பெயர்முதலியன தெரியவில்லை. இந்தப்பிரதியில் இந்நூலின் 18 செய்யுட்களே உரையுடன் இருக்கின்றன. உரைநடை சாதாரணமானது.

No. 1727. வேதபுரீசரந்தாதி.

VEDAPURIŚARANTÂDI.

Substance, plam-leaf. Size, 12 × 7/8 inches. Pages, 102. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete in 105 stanzas including the introductory and benedictory stanzas.

Same text as that described under the previous number.

Beginning :

வளத்தாரணி புகழ் வேதபுரீசர் வணங்குமன்ப
ருளத்தாரணி வளரந் தாதிகாக்கவு வந்துபரி
மளத்தாரணி திகழுந்தன வல்லபை வாமமணாற்
குளத்தாரணி படையங்குச வைங்கரக் குஞ்சரமே.

போதவனத் தத்தன் வச்சிரபாணி பொதியவரை
மாதவனத் தத்தன் மெய்யருள்வேற் கந்தவாவிமையச்
சீதவனத் தத்தன் செந்திரு நற்கல்வி(ச்) செல்விமன்னும்
வேதவனத் தத்தன நந்தாதியான் சொல்லமெய்த்துணையே.

உருவை யருவை யொளியை வெளியை யுயிர்க்கண்மல
மருவை நீகர்மன்னும் வேதபுரீசரை வாழ்த்துதற்குத்
திருவை மெய்ஞ்ஞானத் தெளிவையுதவுஞ் சிவசமைய
குருவைப் பரவிப்பதத்தை மனத்திற் குடிவைப்பனே.

மணிக்காவியம்புய வாவி கடுயவளை வயல்க
ளணிக்காவியம்பு(தம்)போல முழங்கும் பொன்னுலையங்க
ளணிக்காவியம்புகழ் வேதபுரீச வெனதுளத்தி
னணிக்காவியம்புந் தமிழியல்பான நலனெய்தவே. (க)

End:

புரந்தர ன்றேவல மேதாதிசூர் முப்புரத்தசுரர்
இரந்தர னேயுன் பதந்துணை யென்ன விணிதிரங்கும்
நிரந்தர னின்மலனிற் குணனித் தனிமலனெற்கு
வரந்தர வந்தவன் வேதபுரன் செம்மணி வண்ணனே. (௱க)
முன்னவர் வேதபுரீசரந் தாதிமொழியென் றன்பாய்ச்
சொன்னவர் வாழி துதித்தவர் வாழி சுருதிவல்லோன்
றன்னவர் வாழி தருமமும் வாழி தரணியை யாள்
மன்னவர் வாழி மனுநீதி வாழி வளம்பெறவே.

(கு-பு.)—

இது வேதபுரீசர் விஷயமான துதி. இதை இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை. செய்யுள் நடை நன்றாகவிருக்கிறது. காப்பும் வாழ்த்துந் தவிர 101 பாடல்களிருக்கின்றன. இந்தப் பிரதி பூர்த்தியுடையது.

PĀRVATĪ.

No. 1728. அகிலாண்டேசுவரிதோத்திரம்.

AHILĀṆDĒŚUVARITŌTTIRAM.

Pages, 10. Lines, 5 on a page.

Begins on fol. 159*a* of the MS. described under No. 1074.

Incomplete, containing only six stanzas.

A metrical eulogy on Ahilāṇḍēśvari, a form of Goddess Pārvatī, worshipped in the shrine at Kāvai.

Beginning:

தாயார்வயிற்றிலே [செ]கர்ப்பந்தரித்த பின்தற்காத்து ரட்சித்தவளுநீ
தரணியிற்பிறந்தபின் மதலையெனவே யழுதசத்தமுங் கேட்டவளுநீ
ஆயுமெனக்கினி நோவுபிணிமற்றதும் அணுகாமற் காத்தவளுநீ
அஞ்சுவயதானபின் பள்ளிக்[கு]கூடத்திலே அரியதமிழ்தெரியவேணு
[மென்று வைத்தவளுநீ. (?)
ஆதலால் உந்த[னிட](னுடை) கிருபா கடாட்சத்தினு
லரிவரிமுதற்கொண்டு திவாகரம் வரைக்குமே
அன்பாய்ப படித்துவந்தேன்
பொற்றாமரைக் கண்ணி பொன்கா வையிற்குள் வாழ்வே
பொன்னி நதியிருபுறம் தன்னையென
வந்தவள் பொன்னி னகிலாண்டவுமையே. (க)

End:

குழையிட்ட காதினில் மூக்குத்தி முத்தும்
கொஞ்சகிளி மதுரமொழியும்

கோகர்ண மானவிழி சந்தி ரோதையம்போற்
குளிர்ந்தமுக சே[ர்]வையழகும்
வளையிட்டகையு மிருமார்பிற் பதக்கமும்
வாகானபூத தயவும்
வையகந்தன்னிலே சூரனைக் கொல்லமால் மருகனைப்பெற்ற வயிறும்
இழையான விலைபெற்ற நவரத்தின மிழைத்திட்ட
வேகாந்தப்பட்டு உடையும்
எள்ளள[வுயர்]வாகிலு முந்த[னிட](னுடை) தெரிசனம்
எளியெனுக் கீயுமம்மா
என்னபிழை பொருத்தருளும் பொற்றாமரைக்
கண்ணிபொன் காவையிற்குள் வாழ்வே
பொன்னிநதி யிருந்தனை யெனவந்
தவள் பொன்னி[ந](ன)கிலாண்டவுமையே. (௬)

நன்றாக.

(கு-பு.)—

இது காவைப் பதியில் எழுந்தருளியிருக்கும் அகிலாண்டேசுவரி விஷயமான துதி. இந்தப் பிரதியில் 6 பாடல்களே இருக்கின்றன. செய்யுள் நடை மிகத்தாழ்ந்தது, பிழைகள் மிகுதியாகவுள. இயற்றியவரின்னாரெனத் தெரிவில்லை.

No. 1729. அங்காளம்மைபதிகம்.
AṄGĀḶAMMAIPADIKAM.

Substance, palm-leaf. Size, 10⅝ × 1 inches. Pages, 10. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on foll. *a*. The other works herein are Ñānasambandartudi 7*a*, Ñānasambandarkīrttanai 8*a*, Ñānasambandartudi 13*a*, Kapālisarkīrttani 18*a*.

Wants the fourth folio containing the fifth and sixth stanzas.

A eulogy in 11 stanzas on the goddess Angālammai, as worshipped in a place called Mahiṣapuri.

Beginning:

அங்காளம்மன்பேரில் பதிகம்.

காப்பு : வெண்பா.

சீரார் மகிஷபுரிச் செல்வியங்கா ளம்மையின்மேற்
பேரார்திரு ப்பதிகம் பேசவே—யேரார்
குணமதியி னற்புதமே கொண்டவருட் செல்வக்
கணபதியின் பொற்பதமே காப்பு

(. . . . . மட்டு . விருத்தம்.)
அணியேய திகழுங் கருங்குழலு மமிர்த கிரணவொளி முகமும்
பணியே சிறந்த திருத்தனமும் பவளவாயு மலர்க்கரமும்

[யெ](எ)ணியே துதிக்கும் பொற்பதமு மெளியேன்காண
[வந்தருள்பொன்
மணியே கொழிக்கு மகிஷபுரி வாழ்வேயெனது மனத்துணையே. (க)

End:

ஆழிக்கர னு மெண்கணனு மயிராவதத்தில் வருவானுங்
கோழித்துவசப் பெருமானுங் குசைமாநதியும் வயல்வளமு[ம்]
மேழிப்படையு நினேப்பரவும் விரதத்தவரு மறையவரும்
வாழிக்கவிஞர் மகிஷபுரி வாழ்வே யெனதுமனத் துணையே. (கக)

(கு-பு.)—

இது மகிஷபுரியிலுள்ள 'அங்காளம்மை' என்னும் தேவி விஷயமான துதி. 'மகிஷபுரி வாழ்வே யெனது மனத்துணையே' என்னும் மகுடத்தை யுடைய 11 பாடல்களாலாயது. இந்தப் பிரதியில் 4-வது எண்ணமைந்த ஏடு இல்லாமையால் அதிலுள்ள 5, 6-வது பாட்டுக்கள் இல்லை. பிரதி சிறிது சிதிலமாயிருக்கிறது.

No. 1730. கற்பகவல்லிதுதி.
KARPAKAVALLITUDI.

Pages, 2. Lines, 7 on a page.

Begins on fol. 119*a* of the MS. described under No. 445.

Contains the first three stanzas and a portion of the fourth stanza.

A eulogy on Goddess Karpakavalli, a form of Pārvatī, as worshipped in the Śaiva shrine at Mylapore. The name of the author is not given.

Beginning:

மயிலைக் கற்பகவல்லியம்மன்பேரில் விருத்தம்.

கொண்டலை நிகர்த்தபைங் கூந்தலழு கும்றுதற்
குலவுநற் சுட்டி(யழகுங்)
(கு)ணிசிலை நிகர்த்தபுரு வத்தினழ கும்மலர்க்
குவளையிரு விழியினழகும்
கண்டு மகிழிருகுழைக் காதினழகுங் குமிழ்க்
கடிமலரினுசி யழகுங்
கதிர்மதி முகத்தழகு முத்துநகை யழகுங்
கழுங்கணி (க)ரத்தி னழகும்
செண்டுநிகர் கனதனத் தழகுமிடை யழகுமொளிர்
செந்தா மரைக்கு நிகர் நின்
செஞ்சிலம் பணிபாதசேவை யழ குங்கண்டு
தெரிசிக்கவருள் புரிகுவாய்
வண்டுமது வுண்டுகளி கொண்டிசைகள் பயில்சோலை
மயிலைமா நகரின்வாழ்வே
மதுரமுற் றிடுசொல்லி நளினபொற் பதமெல்லி
வனிதை கற்பகவல்லியே. (க)

End:

அருவ மோரு(நான்கிலோ) வருவநான்கத
னிலோ அருபரூபமொன்றிலோ வறையுத . . . .

(கு-பு.)—

இந்நூல் மயிலாப்பூர்க் கற்பகாம்பிகையின் தோத்திர ரூபமாகவுள்ளது. "மயிலைமாநகரின் வாழ்வே, மதுரமுற்றிடு சொல்லி நவின பொற்பத மெல்லி வனிதை கற்பகவல்லியே" என்பதை மகுடமாக வைத்துப் பாடப் பட்டுள்ளது. இந்தப் பிரதியில் முதல் மூன்று பாடல்களும் நான்காவது பாடலில் சிறிது பாகமும் உள்ளன. செய்யுள் நடை நன்றாகவிருக்கிறது. நூலாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை.

No. 1731. கௌரிப்பத்து.
GAURIPPATTU.

Pages, 6. Lines, 7 on a page.

Begins on fol. 17*b* of the MS. described under No. 314.

Complete.

This is the original, from which the work described under R. No. 302 (f) was copied.

(கு-பு.)—

மூலருடத்திய காட்லாக் 302 (f) நம்பர் பிரதியின் மூலப்பிரதி. இதில் இது முற்றும் உள்ளது.

No. 1732. சாமளையம்மைநவரத்தினம்.
ŚĀMAḶAIYAMMAINAVARATTINAM.

Pages, 18. Lines, 4 on a page.

Begins on fol 1*a* of the MS. described under No. 1723.

Complete.

Nine stanzas in praise of the goddess Śyāmalādēvi, a form of Pārvatī, worshipped in Paiyānūr. The author is Svāminātha Piḷḷai of Kanakkar caste. The composition of the work is of a very inferior order.

Beginning:

சாமளையம்[மன்](மை) நவரத்தின விருத்தம்.

செகத்தோர் துதிக்கின்ற சரணவிர லாழியுஞ்
சிறுகிறு வெண்சி லம்புஞ்
சிறந்தநுண் ணிடையினிற் பீதாம்ப ரத்தின்மேற்
றிகழுமே கலையி னொளியும்
புகலரியமார்பினிற் பொற்பின்னலா(ர)ங்கள்
பூண்டகண் டத்தில் பொட்டும்

புவியிலுள வடியருக் கஞ்சலெனு மபய(ா)ஸ்தம்
புகலுகிளி யன்னங்களும்
முககமல மதிவிரு நயனகுளிர்பார்வையு
மூக்குத்தி முத்தி னொளியு
மொழியுந்திரு முடியுட னடியனுடைகண்காண
முன்வந்து கிருபைபுரிவாய்
அகிலலோ கத்திதற் கொப்பிடா வளமைநிறை
யளகைநிகர் பையநகர்வாழ்
அருமறைகள் புகழுமலை யரையனருள் புதல்விநிலை
யானசாமளை வல்லியே. (௧)

End:

செந்தமிழ்ப் பாமாலை சொல்லத்துணிந்தவிச்
சீர்கருணசாமிநாதன்
செப்பினன் பாசுரந் தொகையொன்ப தாகச்
சிறந்த நவரத்னமிதனை
உந்த[ணிட](னுடை) மார்பினி லாரமாய்ப் பூண்பதற்
குரைத்தன னதிலேயொரு
உற்றபிழை யாகி னுங் கற்றபே ரிகழார்க
ளுனதுதி யாகையாலே
பந்தமாயு[ந்த](ன்ற)னை நினைத்தவர்கள் பிணி[கழ](தீ)ரப்
பரிவாக(ச்) சேவைதந்து
பார்மீது(உ)ன்னைவிட வேறுதுணை யாரெனப்
பட்சம்வைத் தாள நினைவாய்
அந்தெங்கு கதலிமா கன்னல்செஞ் சாலிவள
ரளகைநிகர் பையநகர்வாழ்
அருமறைகள் புகழுமலை யரையனருள் புதல்விநிலை
யானசாமளை வல்லியே. (௯)

(கு-பு.)—

இது, பையனூரில் எழுந்தருளியிருக்கும் சாமளாதேவியின் துதி; இதை இயற்றியவர் கணக்கர் சாதியிற் பிறந்த சாமிநாத பிள்ளை யென்பவர். செய்யுள்நடை தாழ்ந்தது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. இது அச்சிடப்படவில்லை.

No. 1733. சிவகாமியம்மை துதி.
ŚIVAKĀMIYAMMAITUDI.

Pages, 13. Lines, 4 on a page.

Begins on fol. 4*a* of the MS. described under No. 225.

Contains 1–13 stanzas.

A eulogy on Śivagāmiyammai, a form of Goddess Pārvati, worshipped in the temple at Cidambaram. The name of the author is not given.

Beginning:

நித்யகல் யாணசுப மங்கள சவுந்தரி
நிரந்தரி யனந்தரூபி
நிக்ரகி யனுக்ரகி நிரஞ்சனி தயாலதனி
நிர்மலி செயாட்சகி
சுத்தபரி பூரணி க்ருபாகரி சதாநந்தி
தூலசூக் குமகாரணி
சூலிகுண சாலிபரி பாலியென் றனுதினந்
துதிசெய்து கதிபெறுவனே
புத்தமுத மொத்தவச னத்திம யத்தரசி
பொற்புட னளித்தபுதல்வி
பொங்குபாற் கடலில்வளர் செங்கண்மால் சோதரி
புராந்தகர்க் கினியமனைவி
சத்தமறை யாகம புராணசாத் திரவொலி
தழைத்திடும் புலியூரில்வாழ்
சலசமக லாதவல்லி கலையினிரு வாகவல்லி
தலைவிசிவ காமவல்லியே. (க)

End:

இன்னமிப் பாழுட லெடுத்துழல வைப்பையோ
வீனர்பின் செலவிடுவையோ
வில்வாழ்க்கை யென்னுமொரு பொல்லாப்பி லேசற்று
மெண்ணம லுழல்விப்பையோ
நன்னய மிலாக்கொடும் புல்லரொ டிணங்கிவீ
ணுள்கழித் திடவைப்பையோ
நச்சுவிழி யார்கண்மே லிச்சைகொடு பித்தனாய்
நரகெய் திடச் செய்வையோ
அன்னமுத லானமுக் களியெனுஞ் சனிபித்த
ரடலைப் படச்செய்வையோ
அடுபிணி யெனும்பெருங் கொடுமைக டொடர்ந்ததி
லைக்கழித் திடவைப்பையோ
தென்னனரு மைப்புதல்வி யெப்படிசெய் தாலுமுன்
சித்தமென் பாக்யமம்மா
தில்லைநட ராயர்நேயி புல்லரைய டாதமாயி
செல்விசிவ காமியாயியே. (கங)

(கு-பு.)—

இது சிதம்பரம் சிவகாமியம்மையின் தோத்திரம். செய்யுள்நடை சாதாரணமானது; இதில் 13 பாடல்கள் இருக்கின்றன. முதலிலுள்ள 8 பாடல்கள் "சலசமகலாத . . . சிவகாமவல்லியே" என்ற மகுடத்தையும் இறுதியிலுள்ள 5 பாடல்கள் "தில்லைநடராயர் . . . சிவகாமியாயியே" என்ற மகுடத்தையும் உடையன. இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை.

No. 1734. சிவகாமியம்மைதுதி.

SIVAKĀMIYAMMAITUDI.

Pages, 14. Lines, 16-17 on a page.

Begins on fol. 144*a* of the MS. described under No. 1629.

Contains 1 to 13 stanzas.

Same work as the above, being a copy made from it.

(கு.பு.)—

இது முன் பிரதியைப் பார்த்தெழுதப்பெற்றது. அதில் உள்ள அளவே இதிலும் இருக்கிறது.

No. 1735. சிவகாமியம்மைதுதி.

SIVAKĀMIAMMAITUDI.

Pages, 2. Lines, 5 on a page.

Begins on fol. 120*a* of the MS. described under No. 445.

Contains the latter half of the 11th and the whole of the 12th stanza which are herein numbered as the 9th and 10th stanzas.

Same work as the above.

(கு-பு.)—

இதில் முன் பிரதியிலுள்ள 11-வது செய்யுளின் பிற்பாதியும் 12-வது செயுளும் இருக்கின்றன. அவை முறையே 9, 10-வது செய்யுட்களாக இந்தப் பிரதியிற் குறிக்கப்பட்டிருக்கின்றன.

No. 1736. சௌந்தரியலகரி.

SAUNDARIYALAHARI.

Substance, palm-leaf. Size, 13¼ × 1⅛ inches. Pages, 110. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

A Tamil rendering by Vīraikkavirājā Paṇḍitar from the oral translation made to the author by Piramātarāyan of the Sanskrit Saundaryalaharī of Śaṅkarācārya. It is in praise of Śakti and is considered to represent the Śaktimantra called Śrīvidyā. The work has been printed.

Beginning.

மொழிந்தமறை நூலியற்று முகபடா மணிந்து
முது ஞானந் தானம்
பொழிந்தகன இணைமணிபெயன் றிருசுட ரும்
புனைகளிற்றைப் போற்றல் செய்வாம்

வழிந்துபெரும் புனல்பரந்து வடவரையிற்
    றுலகேழு மே[ா]ழு மொக்க
வழிந்திடினு மழியாத வபிரா[மை](மி) பாடல்வள
    மளிக்க வென்றே.

* * * *

இன்ன தன்மைய நூலி னைக்கவி ராச ராசவ ரோதய
மன்ன னம்பிர மாதி ராயன்வ குத்த ரும்பொருள் கூறவே
கன்ன வஞ்சிலை வேளெ னுங்கவி ராச பண்டிதன் வீரையான்
சொன்னயம்பெறு காவி யக்கவி சொல்ல வென்று [து](தொ)டங்குவான்.

சிவமெனும் பொருளும·(ா)தி சத்தியொடு
    சேரிலெத்தொழி லும் வல்லதா
மிவள் பிரிந்திடிலியங்குதற்கு மரிதரிதெனு மறை
    யிசைக்குமால்
நவ . . . . புவனமெ . . . . . கைத்தொழி
    னடத்தியாவரும் வழுத்துதா
ளவனியின் கணொருதவமிலார் பணிய
    லாவதோபரவ லாவதோ. (க)

End:

ஆதவனுக் கவன்கிரணத் தங்கியைக்கொ டாலத்தி
    சுழற்ற லென்கோ
சீதமதிக் கவனிலவுக் குருகுசிலைப் புனல்கொடுப
    சரிப்ப தென்கோ
மோதியமைக் கடல்வேந்தை யவன்புனலா
    முழுகாட்டு முறைமை யென்கோ
நீதருசொற் கவிகொடுனைப் பாடியுன தருள் பெறுமென்
    னீதி யம்மே. (ளஅ)

வேதநுண்பொருளாயசுந்தரி வீறடங்கலு மோதலே
யீதயர்ந்து விடாசொலுங்கவிராசபண்டித வீரையா
னுதரஞ்சகி தாள்பெறுந்திருநாம மென்பது நூறுமே
யோதனன் பலபோகமுஞ் சிவலோகமும் பெறுவார்களே. (ளசு)

Colophon:

முற்றும்.

(கு-பு.)—

இது சக்தியின் விஷயமான தோத்திரம். சக்தியின் அருளைப்பெறுதற்குரிய மந்திரம் போன்ற பெருமைவாய்ந்தது. வடமொழியில் ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் செய்த செளந்தரியலகரியின் மொழி பெயர்ப்பாகும். இது பிரமாதராயன் என்பவர் மொழி பெயர்த்துச் சொல்ல வீரைக்கவிராச பண்டிதரென்னும் புலவர் இதனை இயற்றினரென்ப. இதிலுள்ள செய்யுட்கள் நடை சிறந்தவை. இந்நூல் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்தப் பிரதியில் இது பூர்ணமாகவிருக்கிறது.

No. 1737. சௌந்தரியலகரி, உரையுடன்.

SAUNDARIAYALAHARI WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 9⅜ × 1⅝ inches. Pages, 168. Lines, 9 on a page Character, Tamil. Condition, injured. Appearance, very old.

Complete.

Same work as the above and with a commentary by Ellappanāyinār of Tāḻainagar.

மொழிந்தமறை நூலியற்று முகபடா மணிந்துமுது
ஞான தானம்
பொழிந்துதன திணைமணியென் றிருசுடரும்
புனைகளிற்றைப் போற்றல் செய்வாம்
வழிந்துபெரும் புனல்பரந்து வடவரையிற்
றுலகேழு மேழு மொக்க
வழிந்திடினு மழியாத வபிராமை பாடல்வள
மளிக்க வென்றே.

எ-து. இக்கவிமுதல் 6 கவியும் பாயிரம் கூறப்பட்டன. "தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்ப் பெனத்தகு நூல்யாப் பீரிரண் டென்ப." என்பதுகொண்டு தேவியுடைய சரித்திரத்தையும் வைபவத்தையும் எடுத்து வட மொழியினால் முற்காலத்துச் சொல்லப்பட்ட பனுவலை மொழிபெயர்த்துத் தமிழ்மொழியில் இறக்கிச்சொல்லப்படும் பனுவல் இதுவாகலானும், தமிழ் வழங்கு மெல்லையளவும் இது நடத்தலானும், கற்போர் நாவிற்கு இனிய மொழிபடச் செய்தமையானும் இகபரமிரண்டினும் நல்வழிப்படுத்து மென்பதனாலும் உரையெழுதவேண்டிப் பிற்காலத்திற் சொல்லப்படும் பனுவல் இதுவென்பதுகருதி இதற்கு முற்காலத்தினும் பிற்காலத்தினுங் கூறிய இலக்கண இலக்கியங்களுள் சில எடுத்துக்காட்டி யானறிந்த அளவினால் எழுதினேனாகலான் இவ்வாறெழுதிய உரைகொண்டும் தேவியுடைய சரித்திரங்களைச் சொல்லும் பிறநூல்கொண்டும் அந்தணர்முதலிய அறிவுடையோர் சொல்லு முபதேசங் கொண்டும் இதன்விரிவெல்லாம் தெரிந்துகொள்க.

(இதன் பொருள்) கடல்களெல்லாம் தத்தம் எல்லைகடந்து மகாப்பிரளய சலமாகப்பரந்து வடமேருகிரியும் இறுதலையடைந்து அம்மேருவால் நிலைபெற்ற கீழேழுலகமும் மேலேழுலகமும் அழிந்திடினும் அழியாத அபிரா[ை]மியுடைய பனுவலாக யான்சொல்லும் பாடலுக்கு வளந்தருக வென்று சிவனாற் சொல்லப்பட்ட வேதமாகிய நூலினால் இயற்றப்படு முகபடாத்தை யணிந்து முற்றுப்பெற்ற ஞானமாகிய மதத்தைப் பொழிந்து சந்திரசூரியராகிய இருசுடரையும் தனது இரண்டுமணியாகப் புனைந்த யானையைப்போற்றுதல் செய்வாம். . . . . . .

(* * * *)

இன்ன தன்மையி னூலி னைக்கவி ராச ராசவ ரோதயன்
மன்ன னன்பிர மா(தி)ராயன் வருத்த ரும்பொருள் கூறவே
கன்ன லஞ்சிலை வேளெ னுங்கவி ராச பண்டிதன் வீரையான்
சொன்ன யம்பெறு காவி யக்கவி சொல்ல வென்றுதொ டங்குவாம.

எ-து. கவிவேந்தர்க்கும் கவிவேந்தராயிருப்பார்வணங்க வரத்தினால் உதயஞ் செய்த . . . . . கவிராசபண்டிதனென்னும் சிறப்புப்பெயரையுடையான் . . . ஆரம்பிப்பானென்றவாறு . . . . 5.

End:

ஆதவனுக் கவன்கிரணத் தங்கியைக்கொண் டாலத்தி
 சுழற்ற லென்கோ
சீதமதிக் கவனிலவி னொழுகுசிலைப் புனல்கொடுப
 சரிப்ப தென்கோ
மோதியமைக் கடல்வேந்தை யவன்புனலான்
 முழுகாட்டு முறைமை யென்கோ
நீதருசொற் கவிதொடுத்தனைப் பாடியுன தருள்
 பெறுமென் னீதி யம்மே.

எ-து. தாயே நீதந்தசொல்லால் தொடுக்கும் கவிகொண்டு உன்னைப் புகழ்ந்துபாடி உனதருளைப்பெறும் என்னீதி . . . . வருணனை அவனுடைய புனலினால் முழுகச் செய்யும் முறைமையென்று சொல்லுவேனோ நீ சொல்வாயாக எ-று.

நான்கடியுருபை இரண்டனுருபாகச்கொள்க. முழுக ஆட்டு மென்பது முழுகாட்டு மெனக் கடைக்குறை விகாரம். . . . . . கூறினன். (103

(* * * *)

பிறைபுனைந் தருளுஞ் சிவன்றன துவகைப்
 பெருக்கென வடமொழிக் கலைவ
ளறைசவுந் தரிய கரியைத் தமிழா
 லருள்கவி ராசபண் டிதன்றன்
னிறைமனங் கருதித் தாழைமா நகரா
 னிலைபெறு வாழ்கவி யெல்லவ
னிறையன வெனினுந் தவறிலா துரைசேர்த்
 தெழுதின னெழில்விளக் கெனவே.
 சவுந்தரியலகரி உரையுடனெழுதி முடிந்தது.

(கு-பு.

இது மேற்குறித்த சௌந்தரியலகரியின் உரை. இதனை யியற்றியவர் தாழைநகர் 'எல்லப்ப நயினார்' என்னும் புலவர். உரை நடை சிறந்தது. அச்சிடப்பட்டுளது. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

No. 1738. சௌந்தரியலகரி, உரையுடன்.

SAUNDARIYALAHARI WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $16\frac{1}{2} \times 1\frac{1}{4}$ inches. Pages, 147. Lines, 6-8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as the above.

At the end of the work there are two leaves containing some of the stanzas of the Uttarabōdaka.

(கு-பு.)—

இது மூன் பிரதிபோன்றது. முதலிலிருந்து 11 ஏடுகளில் மூலமும் 61 ஏடு களில் உரையும் உள்ளன. இவை இதில் முற்றும் உள்ளன இந்நூல் பூர்த் தியானவுடன் 2 ஏடுகளில் உத்தரபோதகச் செய்யுட்கள் சில தொடர்பில்லா மல் எழுதப்பெற்றுள்ளன.

No. 1739. சௌந்தரியலகரிச்சக்கரங்கள்.

SAUNDARIYALAHARICCAKKARAṄGAḶ.

Substance, palm-leaf. Size, 8¾ × 1⅝ inches. Pages, 35. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Contains 130 diagrams relating to Saundaryalaharī and Ānandalaharī, with the respective Mantras and the manner of repeating them.

(கு-பு.)—

இதில் சௌந்தரிய லகரி ஆனந்த லகரிக்குரிய சக்கரங்கள் 130 இருக்கின் றன. சக்கரங்களுக்குரிய மந்திரங்களும் அவற்றைச் செபிக்கும் விதமுதலி யனவுங் குறிக்கப்பட்டிருக்கின்றன. இது நிரம்ப உபயோகமானது.

No. 1740. சௌந்தரியலகரி, சக்கரங்களுடன்.

SAUNDARIYALAHARI WITH DIAGRAMS.

Substance, palm-leaf. Size, 9¾ × 1¼ inches. Pages, 118. Lines, 6 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 54*a*. The other work herein is Śriraṅgamāhātmyam 1*a*.

Complete.

Same work as the above and with the addition of the mystic diagrams appertaining to the Mantra conveyed in each stanza.

(கு-பு.)—

இதில் சௌந்தரிய லகரி முற்றும் ஒவ்வொரு பாடலுக்கும் சக்கரங்க ளோடு இருக்கிறது. இது மிகப் பயன் படத்தக்கது, பிரதி மிகச் சிதிலமா யிருக்கிறது.

No. 1741. தேவியகவல்.
DĒVIYAGAVAL.

Pages, 4. Lines, 8 on a page.

Begins on fol. 121*a* of the MS. described under No. 251.

Complete.

A eulogy on Goddess Dēvi written in a kind of composition called Agavaṟpā. The name of the author in not given.

Beginning:

தேவ தேவி திரிலோக[ஞ](நா)யகி
கனக [றப](பன்)மா சனத்தாளே
சிவந்த மேனியு முயர்ந்த முடியும்
மூன்று கண்ணும் நா[ங்](ன்)கு தோளும்
முடிமேற் பிறையும் முற்றின கொண்டையும்

*   *   *   *

ஈசனு மங்கோ ரிஷபமதேறி
நேசமாகவே நின்றடிபணியப்
பரமனு மங்கோரனைம மேதறப
பெய்வளைக் கலைகள் பேணிநின்றெலிப்பத்
திருமாலு மங்கோர் கருடனிலேறி
யொருமா மலர்கொண்டு லகினின்றே[ற்ற](த்த)க்

End:

நினைத்தவையெல்லாம் நீயே மு[கி](டி)த்தருள்
போற்றி போற்றி புவன நாயகியே போற்றி.

திருச்சிற்றம்பலம்.

அவசீறியுங் குறியுங் குறெங்கோதண்ட வயிரவா சிவகா.

ஹரி: ஓம் நன்றாக குருவே துணை.

(கு-பு.)—

இது, உமாதேவியின் தோத்திரமாக அமைந்தது. அகவற்பாவாலாகியது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் இது பூர்ணமாகவுளது.

No. 1742. நெல்லைவடிவுடையம்மைபதிகம்.
NELLAIVAḌIVUḌAIYAMMAIPAḌIKAM.

Pages, 6. Lines, 7 on a page.

Begins on fol. 5*a* of the MS. described under No. 314.

Complete.

The work described under R. No. 302(*b*) of the Triennial Catalogue of MSS., Vol. III, Part 2, has been copied form this one.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 302(b) நம்பர் பிரதியின் மூலப்பிரதி. இதில் இது முற்றும் உள்ளது.

No. 1743. படைவேட்டம்மை துதி.

PAḌAIVĒṬṬAMMAITUDI.

Pages, 18. Lines, 4 on a page.

Begins on fol. 21*a* of the MS. described under No. 1728.

Complete in nine stanzas.

A eulogy on the goddess Paḍaivēṭṭammai, worshipped in Paiyanūr near Tirupporūr. The author appears to be one Snāminathappiḷḷai.

Beginning:

திருமருவுஞாபுரத்தாளிறெளியும் முழந்
　　தாளுஞ்சிரந்தொண்டையும்
,திரண்ட மணியிடையினிற்றங்கு பீதாம்பரத்
　　திவ்வியமே கலையினழகும்
பெருமைசேர் பரசுராமனைத் தன்றொரு
　　பிரபல வயிற்றினழகும்
பேசரிய மார்பினிலாபரணமும்
　　பிறங்கிய[க்] கந்தரத்தின்
இரவியொளிபோல் பொட்டு மங்கையிற்றமருகமு
　　மெழுமணிச்சூல வொளிவும்
இசைந்த செவ்வாய் நாசிபதும முகமலர் விழியு
　　மெண்டிசை[னய] காக்குமுடியும்
பரிவாகவேயடியர் சேவிக்கவே யிந்த(ப்)
　　பையநகர்வந்தமர்ந்தாய்
பட்சம்வைத்தடியர்தமை ரட்சித்து கீர்த்தியமை
　　ப(டை)டவேட்டெல்லம்மையே. (க)

End:

கன்னனூர் ப(டை)டவேடு கடம்பாடி கஞ்சனூர்
　　கண்கண்ட ஆற்றுக்காடு
கள்ளழகர் பதிபெரிய பாளயம் சேர்க்காடு
　　கனத்தகொல்லூர் தன்னிலும்
இன்னமும் பலதேச சஞ்சாரமாயிருந்
　　தேற்றவர்க் குதவியாகி
யெள்ளுக்குளெண்ணெய்போலெங்கும் நிறைந்த நீ
　　யென்னுவிலுமமர்ந்தாய்

சொன்னதொரு நவரத்ன விருத்தத்திலே பிழை
    தோற்றினு மங்கீகரித்து(ச்)
சொற்பொருள லங்காரவகைகள் பிசகாமலே
    தொடுப்பதுன் கடனம்மணி
பன்னுமொழி கிளிகளுமன்னமுங் கொஞ்சுகிற
    பையநகர் வந்தமர்ந்தாய்
பட்சம்வைத்தடியர்தமை ரட்சித்து(க்) கீர்த்தியமை
    ப(டை)டவேட்டெல்லம்மையே. (௯)

(கு-பு.)—

இது, பையனூரில் உள்ள படைவீட்டம்மையின் விஷயமானது. இதை இயற்றியவர் சாமிநாத பிள்ளையா யிருக்கலாமென்று தோற்றுகிறது. 9 பாடல்களாலாயது. இதில் முற்றுயிருக்கிறது.

No. 1744. பெரியநாயகியம்மை பதிகம்.
PERIYANĀYAKIYAMMAI PADIKAM.

Substance, palm-leaf. Size, $6\frac{1}{4} \times 1$ inches. Pages, 7. Lines, 6 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 8*a* The other work herein is Anumantappattu 1*a* and 14*a*.

Breaks off in the 5th stanza.

A eulogy on Goddess Periyanayakiyammai, a form of Pārvatī, worshipped in Vālikōṇḍapuram in Trichinopoly, where the monkey warrior Vāli is said to have worshipped God Śiva called Vālināyagar.

Beginning:

அரிபிரமாதி தேடுதற்கரிதே
    யன்னபூரணி சதா நந்தி
யந்தரி கௌரி சுந்தரி யகோரி
    யம்பிகை, துரந்தரி மாரி,
திரிபுரதகனி மயிடசங்காரி
    தேவர்கள் பணித்த சிங்காரி
திங்களஞ்சடைச்சி யிங்கித நடைச்சி
    செங்கண் மீனாட்சி செம்படைச்சி,
சொருகு(குந்)தளச்சி யழகுகண் சுழிச்சி
    திர்க்கையா மலிதுடியிடைச்சி
துங்கமா மறைச்சி விபூதி ருத்ராக்ஷி
    துரந்தரமான சொல்லாட்சி,
மருமலர்ச் சோலை வரநதி சூழும்
    வாழ்ந்திடும் வாலிமா நகரில்
வாலி பூசித்த வாலிநாயகரை
    மருவிய பெரியநாயகியே. (௧)

End:

அண்டையிற்றினமு மணிதுணையாக
வாட்சியாயிருந்துகொண்(டெ)டன்னை
யலையவிட்டிருந்தா லடுக்குமோ வுனக்கு
அடைவல்ல அசட்டையாயிராதே,
யுண்டிலையென்று சொல்வதெந்நேர
மூமையோ பேசு நீயம்மா
வுத்தரப் பிரதியில்லாமலிருந்தா
லுனைத்தெய்வமென்று நான் வணங்கேன்
விண்டுபோகாமல் மனஞ்சலியாமல்
வெறுப்புவந்திடாமலே

* * * *

(கு-பு.)—

இது திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள 'வாலிகொண்டபுரம்' என்னும் ஊரில் எழுந்தருளியிருக்கும் பெரியநாயகியம்மை விஷயமான துதியென்று தோற்றுகிறது. செய்யுள் நடை சாதாரணமானது. இந்தப்பிரதியில் நான்கு செய்யுளும் ஐந்தாவது செய்யுளிற் பாதியுமேயுள. நூலாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை.

No. 1745. பெரியநாயகியம்மை பதிகம்.
PERIYANĀYAKIYAMMAI PADIKAM.

Pages, 3. Lines, 8 on a page.

Begins on fol. 438*a* of the MS. described under No. 1272

Contains only 1 to 5 stanzas.

A eulogy in ten stanzas on Goddess Pārvatī worshipped under the name Periyanāyagi Ammai in Vṛddhācalam: by Kumāradēvar, disciple of Śāntaliṅgasvāmi.

Beginning:

அறிபொருளறிவோன்றீ வினை[க்] கெடுப்போ
னுமுப் பொருளுமோர் வி[டை]டயம்
பொறியுறப் பிடித்தா லுளவிதை விடுத்தோர்
பொருளைநா டுதன்முன ரிடையே
பிறிவறத் தோன்றுஞ் சொரூபமிங் கிதனிற்
பேசுமுப் பொருள்களு மிலவாங்
கிறியற வறிதி யென்றனள் விருத்த
கிரியமர் பெரியநா யகியே. (க)

End:

சொரூபமே தானென் றுணர்தரிற் பரனுந்
தகளுறு சீவனுஞ் சகமு
மருவுதன் னினைவி லெழுந்தமித் தைகளாய்
வந்திடும் பந்தம்வீ டிலவா

மொருவுயிர் தானென் றுணரினம் மூன்று
முள்ளவாய்ப் பந்தம்வீ டுளவாம்
விரகுற வறிதி வைதிகஞ் சைவம்
விளம்புவ திம்முறை யென்றுள்
கிரிதவப் பயனும் வருமொரு விருத்த
கிரியமர் பெரியநா யகியே. (௫)

(கு-பு.)—

இந்நூல், விருத்தாசலத்தில் எழுந்தருளியிருக்கும் பெரியநாயகியம்மையின் துதியாகும். சாந்தலிங்கசுவாமிகளின் சிஷ்யராகிய குமாரதேவர் இயற்றியது. செய்யுள் நடை சிறந்தது. இந்நூலின் 10 பாடல்களில் இந்தப் பிரதியில் 5 பாடல்களே உள. இதன் இறுதிப் பாடலில் 5 அடிகள் காணப்படுகின்றன. இந்தப் பிரதிக்கும் அச்சுப்பிரதிக்கும் மிக்க வித்தியாசமுண்டு.

No. 1746. பார்வதி பதிகம்.
PĀRVATI PADIKAM.

Pages, 17. Lines, 5 on a page.

Begins on fol. 10*a* of the MS. described under No. 1074.

Complete.

A eulogy on the Goddess Pārvatī in eleven stanzas.

Beginning:

மதியொத்த முகவழகுஞ் சிலையொத்த புருவமும்
வரிசை பெறுகுமிழ் நாசியும்
வாகான குழையதனில் கொந்தல வோலையுடன்
வயிரமணி கொப்பி யழகும்,
கோதியே முடிக்கின்ற கூந்தலிற் பிறை மின்னக்
குப்பியின் தொங்க லழகும்
குடமாலை பதக்கமுங் கோதம்பை கட்டுவட
கொத்துசர மார்பி னழகும்,
சோதிபெறு கரங்களிற் கங்கண வளையலுஞ்
சூல கபாலத்தி னழகும்
துய்யவிடை மீதிலணி சரிகை பாவாடைமேல்
துலங்கு மொட்டியாணவழகும்,
பதங்களிற் சிலம்பொலி புலம்பிட நந்தியூர
பரமர் நஞ்சுண்டர் தனையே
பாசமுடனே மருவும் பூசை நிறைந்திடு செல்வி
பராபரி பார்வதி யம்மையே. (க)

End:

கலங்காத வீரமுங் கல்வி நல்லாண்மையுங்
கனமான சொற் பெருமையுங்
கைப்பொருளாண்மையு முறமுறையார் பந்துவுங்
கவிவாணர் புகழாண் மையும்,

செல்வமுடனே மாது சீர்மையுந் தனதானிய
  தீர்க்கா யுசுங் கொடுத்து(ச்)
செயமாக(க்) காக்கின்ற காரணி நாரணி
  சித்திரா லங்கார விமலி,
நலமான வயிரவ மகாரிஷி [தன்] கோத்திர நாம
  நாகரி கவுரி மகிபன்
. . . . னருள் சுப்பராயன் . . . பரவுதன் மனதிலே
  நன்மையா யிருந்து ரக்ஷி
பலமைபெறு நந்தியூர் தன்னிலே குடிகொண்ட
  பரமர் நஞ் சுண்டர் தனையே
பாசமுடனே மருவும் பூசை நிறைந்திடு செல்வி
  பராபரி பார்வதி யம்மையே. (௰௧)

ஆறுமுக குருவே துணை.

(கு-பு.)—

இது பார்வதி விஷயமான தோத்திரம். "பாசமுடனே மருவும் பூசை நிறைந்திடு செல்வி, பராபரி பார்வதி யம்மையே" என்பதை மகுடமாக வைத்துப் பாடிய பதினொரு பாடல்களையுடையது. செய்யுள் நடை தாழ்ந்தது. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

No. 1747. மாரியம்மை தாலாட்டு.
MĀRIYAMMAI TĀLĀṬṬU.

Pages, 10. Lines, 6 on a page.

Begins on fol. 17*a* of the MS. described under No. 306.

Complete.

Lullaby songs in praise of the Goddess Māriyammai, a manifestation of Śakti.

Beginning:

கன்னனூர் மாரிமுத்தைக் கனங்குழைகூயத் தாலாட்ட
வண்ண முகமுடைய மதகளிறே மு(ன்)னடவாய்
பேழைத் திருவயிற்றிற் பெரிய விநாயகரை
ஏழை முகமாக விளையாடி வந்தாளோ. (௧)

கந்தன் கணபதியைக் (கை)தொழுது தாலாட்ட
எந்தன் வினைதீர வெழுந்தருளி வந்தாளோ. (௨)

பூலோகமெங்கும் புகழ்பெரிய நாயகியாள்
மாலோகம் போற்றும் மகமாயி வந்தாளோ. (௩)

End:

தீண்டாப் பிசாசுகளுந் திட்டவே தானழைத்துக்
கொண்டாடப் பெற்றதொரு கோகநகமே மாரிமுத்தே. (௫௪)

எங்கும் புகழ வெல்லோருந் தாம்பணிய
மங்களமாக மாரிமுத்து வந்தாளோ. (௫௫)

மங்களம் பாட மனாசோபனம் பாட
மங்களம் மங்களமோ மாரிமுத்து வந்தாளோ. (௫௬)

Colophon:

மாரியம்மன்பேரில் தாலாட்டு முற்றும்.

இ[வை](து), பொய்லைகப்பாக்கத்தில் எழுதினது. இராக்ஷஸஹூ புரட்டாசிமீ ௰௨௨.

(கு-பு.)—

இது, சக்தியின் மூர்த்தி பேதங்களில் ஒன்றாகிய மாரியம்மையின் மீது பாடப்பட்டதொரு தாலாட்டு. நடை தாழ்ந்தது. பிழைகளும் மிகவுள்ளன. இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

No. 1748. மாரியம்மை துதி.
MĀRIYAMMAI TUDI.

Substance, palm-leaf. Size, 16 × $1\frac{1}{8}$ inches. Pages, 34. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

A song of praise on the Goddess Māriyamman commonly sung by Pūśaris or priests.

Beginning:

முந்தி முந்தி விநாயகரே முக்கணார் தம்மகனே
கந்தருக்கு முன்பிறந்த கணபதியே முன்னடவாய்
வேலவற்கு முன்பிறந்த விநாயகனே முன்னடவாய்
கன்னனூர் மாரிமுத்தைக் கைதொழுது யான்பாட
எனக்கு ஏடுதாறும வெழுத்தாணி சாயாமல்
நாவு தவறாமல் நல்லோசை தாருமையா.

End:

காக்கக் கடனுனக்குக் கட்டழகி மாரிமுத்தே
மாரி கதையுரைக்க மண்ணுள்ளோர் மிகவாழ்க
தேவி கதையுரைக்கத் தேசமெங்கு மிகவாழ்க
அம்மை கதையுரைக்க வல்லவரு மிகவாழ்க
ஆல்போற் றழைத்து அறுகுபோல் வேரோடி
மூங்கில்போல் சுற்ற முசியாமல் வாழ்ந்திருப்பார்.

Colophon:

செகச்சனனி ரக்ஷிக்கவும். திரிபுரசுந்தரி ரக்ஷிக்கவும். குங்குமாங்கித வர்ணா (யா)குந்தேந்து தவள(ஸ்மிதா). மாரியம்மன் தாலாட்டு முற்றும். சுபமஸ்து. இராக்ஷஸஹூ மார்கழிமீ ௧௮௨ சோமவாரம் நிறைவேறினது.

(கு-பு.)—

இது மாரியம்மை மீது, பூசாரிகள் குறி சொல்லும்பொருட்டுப் பாடும் உடுக்கைப் பாட்டு. நடை மிகத் தாழ்ந்தது. இந்தப் பிரதியில் பூர்ணமாக இருக்கிறது.

No. 1749. மாரியம்மை துதி.

MĀRIYAMMAI TUDI.

Pages, 10. Lines, 4 on a page.

Begins on fol. 3*a*. of the MS. described under No. 856.

Complete.

A eulogy on the Goddess Māriyamman, worshipped in a place, called Kōliyanallūr.

Beginning:

கோவியநல்லூர் மாரியம்[மன்](மை) பேரில் விருத்தம்.

பூமேவு மேகநிக ரளகமுங் கோட்டுமதி போன்றநுத லுஞ்பசுந்தாட்
பொற்கமல நிகரான வதனமு மூவரைப் புதல்வரென வருளுதரமு
மாமேவு பொற்றுகிலு மேகலா பரணமணி மருங்குவா லழுத்தண்டு நேர்
மன்னிய கவானுஞ் சிவந்த பஞ்சுட்டி நலமான நூபுர பாதமுங்
காமேவு மயிலன்ன சாயலுந் தமியனேன் கண்டு களிகூ[ற](ர) வென்றன்
சன்மவினை நீக்கியே யடியேனை யனுதினங் காத்து ரட்சித்தருளுவாய்
தேமேவு மலர்வாவி சூழ்ந்திடச் செல்வஞ் செழித்தளகை தன்னை நிகராஞ்
சிங்கபுரி மேவுமக மாயியே யெக்கலா தேவி புத்திலாயி யுமையே. (௧)

End:

வங்கைவா ரஞ்செய்யுங் காட்டேரி மோகினி மகாபூத வேதாளமும்
வழியதனில் மாந்தரை மருட்டிடுங் குறளிகளை வருகொள்ளி வாய் பேய்
[களும்
வெங்கண் சிவந்திடு சடாமுனிக ளிலையுந்தன் வேம்பின்மா லிகை யணிந்தே
விபூதியிட் டவர்தமைக் காணுமிவ் வுலகம் விட்டோடுமிது மிசமதாம் ?
சங்கரி சமையபுரி கன்னனூர் படைவீடு தக்க வூற் றுக்காட்டினில்
சந்ததமு மேவிவளர் சத்தி யேந[த்த](ற்ற)வர்க டன்னிடத் திலகு
[பரையே
திங்கண் மும்மாரி பெய்தேயதிக செல்வஞ் செழித்தளகை தன்னை நிகராஞ்
சிங்கபுரி மேவு மகமாயியே யெக்கலா தேவி புத்திலாயி யுமையே. (௰)

முற்றும்.

(கு-பு.)—

இது, கோவியநல்லூரிலுள்ள மாரியம்மை விஷயமான துதி; இதை இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை. நடை தாழ்ந்தது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது. இதுவும் 1746 நம்பரில் வந்துள்ள பார்வதி பதிகமென்னும் நூலும் வாக்கு ஒத்திருத்தலின் இவ்விரண்டும் ஒருவராற் பாடப்பெற்றன வென ஊகித்தற்கிடமுண்டு.

No. 1750. மாரியம்மை பதம்.

MĀRIYAMMAI PADAM.

Pages, 4. Lines, 6 on a page.

Begins on fol. 32*a* of the MS. described under No. 806.

Complete.

A kind of rhythmic song in praise of the Goddess Māriyammai.

Beginning :

ஏனம்மா - உன் திருவிளையாட்டுக்கு
ஆளல்ல நாங்களம்மா
அம்மாவுன் திருவுளம்பார்த்து நீ
யென்பிணி தீருமம்மா
வர்மமோ முத்துக்கன்னனூர் வாழும்
மாரியம்மைத் தாயே ஏனம்மா.

(* * * *

கள்ளர் கவடர் மனதில் நில்லா[ளே]யே
கற்றவர் பங்கில் தினமுமிருப்பாயே
எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்கு நிறைந்தாயே
ஏழையடியாரை யீடேற்றுந்தாயே.
மாயச் சிலந்தி தலையிலே வந்தல்லோ
வஞ்சகஞ் செய்யுதம்மா
தாயற்ற பாவிபோல் நானுந் தவிக்கலே
தர்மமோ வுன்ற[னு](ன)க்கு
பூதல புவனமெல்லாந் தேடியே வந்தேன் உன்
பாதமே கதியெனக் கொண்டாடியே நின்றேன்
ஏனம்மா . . . . தீருமம்மா.

End:

வண்டு வுண்ணு மலர்கள்போலவே தேகமெல்லாம்
வருந்தியே மிகநொந்து வாடுதே
மண்டலங்கள் துதிக்குந் தேவியே கீர்த்திபெற
வளருங் காத்தவராய தீரனே
உனக்கு எதிரி யாருமில்லையே பூலோகத்தி
லுன்னைப்போலே தெய்வ மில்லையே
கலியுகத்தில் மிஞ்சின தேவிநீ காமாக்ஷி நீதான்
கனத்த வரம் பெற்ற தேவியே
சினத்தபேற்கு(ச்) சிங்கராயனே நாகமுத்து(த்) துணைவன்
காத்தவராய தீரனே.
தந்தானத் தினத் கானத் தந்தனுத் தானத் தான.

சிவமயம்.

Colophon :

முற்றும்.

(த-பு.)—

இது மாரியம்மை விஷயமான துதி. பதமென்னும் ஒருவகை இசைப் பாட்டாலாயது. மிகத் தாழ்ந்த நடையுடையது. பிழைகள் அதிகம். இதில் மாரியம்மையின் பரிவார தேவதைகளான வீரன், காத்தவராயன் முதலியோர் விஷயமும் இடையே வந்துளது.

No. 1751. மாரியம்மை பதிகம். MĀRIYAMMAI PADIKAM.

Pages, 11. Lines, 4 on a page.

Begins on fol. 34*a* of the MS. described under No. 306.

Complete in ten stanzas.

In praise of the goddess Māriyamman, worshipped in Uṟṟukkāḍu. The composition is of a very inferior order.

Beginning:

மாமேவு மச முபொழ்யு முகில்வெருவு மளகமும்
    ஒன்ன மணியுறு மவுலியும்
மதிநுதற் சுட்டியு மிருவிழியின் மையழகும்
    வச்ரமூக் குத்தி யழகும்,
காமேவு மிருகுழையி விலகு பொன்ஞேலையுங்
    களம தனின் மங்கலியமுங்
கனகவா பரணமு மஞ்சணு விலகவுங்
    கனதன [றவு](ரவி)க்கை யழகும்,
பூமேவு கரமதி லுடுக்கையுஞ்சூலமும்
    பொன் வளையலும் பிரம்பும்
புதுமைசெறி பத்திரியு மிடையி லொட்டியாணமும்
    பொற் பதத்திற் சிலம்பும்,
தேமேவு மலரடியை யான்கண்டு களிகூர(த்)
    தெரிசனந் தரவருகுவாய்
திகழ்பரஞ் சோதியே யூற்றுவன மேவிவளர்
    செகமாயி மகமாயியே.

End:

பத்துமொரு பதிகமது எல்லம்மை யுன்றன்மேற்
    பரிவுடனுரைத்தே னம்மா
பாலன்]மொழிகின்ற தமிழதை வினவியான்செய்த
    பாவங்களைப் போக்கியே,
நித்தமென்னிட முற்றுவித்தகியே யெற்குநீ
    நிசதெரிசனந் தருகுவாய்
நீளுலகிற்றிங்கண்மும்மாரியது பொழியவு
    திருப ர்செங்கோல் வாழவும்,
புத்திரர்கள் மீதிலருள முத்துகள் சிதருமற்
    பொற்புட னிரங்கிநாளும்
பூதலந்தனில்வாழ்க மேன் மேலுநின் கிருப
    போதுகா[ற்ற](த்த)ருளு மம்மா,
சித்தமகிழ் கொடுகொத்த முத்தாண சூரனைச்
    செயமுடனளித்த வுமையே
திகழ்பரஞ் சோதியே யூற்றுவனமேவி வளர்
    செகமாயி மகமாயியே.

திருச்சிற்றம்பலம்.
சோதிப்பிரகாசமாகிய புவனேசுவரியே ரட்சிக்கவும்.
முற்றும்.

(கு-பு.)— இது ஊற்றுக்காட்டிலுள்ள மாரியம்மை விஷயமான துதி. தாழ்ந்த நடையுடையது. பதினொரு கழிநெடிலாசிரிய விருத்தத்தாலாயது. பாடினோர் பெயர் முதலியன தெரியவில்லை. இந்தப் பிரதியில் இது பூர்த்தியாயிருக்கிறது.

No. 1752. மேற்காவலம்மை பதிகம்.

MĒṞKĀVALAMMAI PADIKAM.

Pages, 25. Lines, 4 on a page.

Begins on fol. 30*a* of the MS. described under No. 1732.

Complete.

A eulogy on the Goddess Mērkāvalammai, as worshipped in Kaḍalūr, a place on the banks of river Pālār. From the concluding stanza of this work it is made out that the author may be Payyanūr Sāminātha Piḷḷai.

Beginning:

கடலூர் மேற்காவ(ல)ம்மன் பத்தும் பதிகம்.

நீர்கொண்ட கந்தரங் கண்வளராநின்ற
 நீளுத்தியானம் வளர்கடலூர் வாழும்
சீர்கொண்ட மேற்காவலு(ய்)ச்சியார்க்கு(ச்)
 சிந்தை மகிழ்வாய்ப் பத்தும் பதிகஞ்சொல்ல(க்)
கூர்கொண்ட மருப்பதனாற் பாரதத்தைக்
 குவட்டிலெழுதிய வீர விக்கினேசன்
தார்கொண்ட கோகனக வுபைய[ச்]செய்ய
 சரணமதை(ச்) சந்ததமும் பணிகுவாமே.

அருமறை யொலிக்கின்ற கீதகிண் கிணியுமென்
 லகத்தி ருளகற்றுபாதத்
தழகுற்ற சங்கத்தின ருகு சா னுவுமுருக்
 கமைந்திடு மருங்குதுத்த
மொருமையுட் பட்டாடை யுந்திரோ மக்கொடி
 யுரம்பெறும் மார்பு தனிலே
யுவமைசொல் லரியவிரு பயோதரஞ் சிலீமுக
 மொருநான்கு வத்தமதனில்
தருவுற்ற வங்குயிலின் மீதினிற் றுங்கிய
 டமருகத் திரிசூலமுஞ்
சங்கத்தை யொத்தகந் தரமதிற் றுவியுந்
 தரளதில முகவிழிகளும்
திருமுடிப் பின்னலுஞ் செஞ்சடா டவியுடன்
 சிறந்தகடலூரில் வளரும்
தேசுபா லாற்றருகில் வாசமுறு கின்றசெக
 தீசமேற் காவலுமையே. (க)

End:

கலியுக நாலாயி ரத்தொன்ப தாஞ்சகங்
கண்ட வெழு பத்தேழினிற்
காணரிய யுவவருட மதனிலிக் கவிதையைக்
கற்பித்த கருணர்திலகன்
சலியாத விரதனுஞ் சாமிநாதக் கவிஞன்
சாற்றினன் றமிழிலிதனைத்
தடையின்றிப் பத்தியொடு துதிசெய்யு மடியரிடர்
தாப சோபங்கள்மாற்றி
நலியாமல் காசினியி லாயிரம் பிறைகண்டு
நமனருகிற் சாராமலே
நாலாம் பதங்களாஞ் சாயுச்சிய வீடதனில்
நண்ணுவர்களுன தருளினல்
இலிபன்மனு வாதியோ ராண்டவிப் புடவியிற்
சிறந்த கடலூரின் வட பால்
தேசு பா லாற்றருகில் வாசமுறு கின்ற செக
நீசமேற் காவ லுமையே. (௰௧)

(கு-பு.)—

இது, பாலாற்றங் கரையிலுள்ள கடலூர் மேற்காவலம்மையின் தோத்திரமாக வமைந்தது. பையனூர் சாமிநாத பிள்ளை என்பவர் இந்நூலை இயற்றினதாக இறுதியிலுள்ள செய்யுளால் தெரிகிறது. செய்யுள்நடை சாதாரணமானது. இந்தப் பிரதியில் இது முற்றும் உள்ளது.

No. 1753. மேற்காவலம்மை பதிகம்.
MĒṞKĀVALAMMAI PADIKAM.

Pages, 20. Lines, 4 on a page.

Begins on fol. 43*a* of the MS. described under No. 1732.

Complete.

Similar to the work described above.

Beginning:

சீர்கொண்ட முகிலனைய வளகவழ குமபிறைத்
திருநுதற் சுட்டி யழகுந்
திலதமரு புண்டரக் கீற்றினழ கு(ம்) மருட்
டிரியம்ப கத்தின ழகு(ம்)
வார்கொண்ட திலத சத கோடி சூ ரியரொளிகொள்
வசிகரபுரத்தினழகும்
வைரமர கதவடை ய வரதவத்தத்தழகும்
வலிஞான வடிப ர்துதியோ

டேர்கொண்ட குழல்கொள் முடங்குளைமடங்கன்மிசை
யேறியெனதெதிரில் வந்தாள்
இசைசாரி யருள்வாரி சிவபாரி சுகவீரி
யிலகுசெகமணி கௌமாரி
வீர்கொண்ட புட்கரத் தோங்கு பூங் காவனம்
வீறு கடலூரில் வளரும்
மீக்காவ னப்பெண்மணி காக்காவெனக் குண்மணி
மேற்காவ னைக் கண்மணியே. (க)

End:

இயல் கலந் தும்பெரிய விசை கலந் துந்தூய
வினிய நல் மொழிகலந்தும்
இன்பமிகு தின்பாத சீர்கலந் துங் கனித
விதைய வடிதொடை கலந்து
பயில் பாவி னங்கலந் தீரைந்து கவிதையாய்ப்
பாடினே னின் சீரினிற்
பண்பாயு னைப் போற்று மடியர் பா டலையொப்பப்
பகரவறியேனெளியனேன்
துயில்தானவங் குசப்பாலனித்த டியேற்கு(ச்)
சொற்கவிதை பாடவருளாய்
சுயசோதி சதுர்வேதி சிவபாதி வரநீதி
சொலித சொர்க்கவனுதி ?
வெயில் கிரண விரவிதேர்ப்பரிசெலுத்துங் கொடிகள்
வீறு கடலூரில் வளரும்
மீக்காவனப் பெண்மணி காக்காவெனக் குண்மணி
மேற்காவனைக் கண்மணியே. (௧0)

Colophon:

பத்தும் பதிக முற்றும்.

(தா.பு.)—

இதுவும் மேற்சொன்ன மேற்காவலம்மை விஷயமான பதிகம்; இதையும் பையனூர் சாமிநாத பிள்ளையே இயற்றினாரென்று தெரிகிறது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது. முன் பிரதியினும் இது வேறானது. பிழைகள் மிகுதியாகவுள்ளன.

No. 1754. வடிவுடையம்மை நவரத்தினம்.

VAḌIVUḌAIYAMMAI NAVARATTINAM.

Pages, 27. Lines, 6 on a page.

Begins on fol. 106*a* of the MS. described under No. 1125.

Complete.

A eulogy in nine stanzas on Vaḍivuḍayammai, a manifestation of Goddess Śakti, as worshipped in Tiruvoṟṟiyūr.

Beginning :

வடிவுடையம்[மன்](பிகை) பேரில் நவரத்தின விருத்தம்.

செல்வமிகு மொற்றிநகர் தேவிவடி வாம்பிகைமேற்
சொல்லுநவ ரத்[தி]னவிருத் தஞ்சூட்ட—நல்லமு[ர்]த
வாக்கு நடக்கும் படியிசைய மாமுகனே
காக்குமயில் வாகனனே காப்பு.

இங்கிதஞ்சே ரொற்றிநக ரெங்கள் வடிவுடைமேற்
றங்கநவ ரத்[தி]னவிருத் தம்பாட(ச்)—செங்கமல
மாதுபுகழ் வெண்டா மரையதனின் மேவிவளர்
சோதிகலை வாணி துணை.

சீரிலங்கும் மேகநிறமிலங்குங்கூந்தல் செயமிலங்கும்ரத்தினச்
சிகழிகையிலங்[கு](கி)வளர் நெற்றியிற் சிந்துரத் திலதமுமிலங்குபுருவச்
சிலையிலங்குங் குமிழிநாசியுமிலங்கு செவ்வரியிலங்குங் கண்களின்
செயலிலங்குந் திவ்விய செவியிலங்கும் வெள்ளை செய்யவாயிதழிலங்குந்,
தாரிலங்குங் கமுக நேரிலங் தஞ்சுகந் ௲ர் இலங்குங்கந்தரந்
தானிலங்கும்புயத்தின்மேலணிந்த முத்தார பூஷணமிலங்குஞ்
சரியிலங்கும் முன்கை வரியிலங்கு மோதிர மிலங்குங்கைகளின்
தண்கரும்பும் புஷ்பபாணமுமிலங்குநற்றத்தைகளிலங்கிவளரும்
வாரிலங்குந்தனமில[ங்]கு[ம்] வடபத்திரமணியிலங்கும் விகசித
வலம்புரியிலங்குசுழியுந்தியு மிலங்குமந்தரமிலங்குமேகலை
வடிவமுமிலங்கு தாமரையிலங்கும் முனதுமலர்ப்பதமிலங்கவடியா
ரகமிலங்கும்படி நடம்புரிந்தனுதினம் வழுத்தவரமேயருள்செய்வாய்,
ஆரிலங்கும் பூதியணியிலங்கும் ருத்திராக்கமுமிலங்குபுலியி
னதளிலங்கும்பணியிலங்கு பூஷணத்தியாகமிலங்கும் மயிர்தமே
யயனிலங்குந்தேவர் துதியிலங்கு மொற்றியம் பதியிலங்குகௌரி
யன்னநடையெனுமெல்லி மின்னுகொடி யிடைநல்லியன்னை வடிவுடை
[வல்லியே. (க)

End :

சித்திரவடிவான நவரத்தினவடிவே யுசித சின்மயானந்தவடிவே
திகழும்வடிவே தேவர் புகழும்வடிவே புவிசெழிக்கும்வடிவே யளவிலாச்
சீலவடிவே வெற்றிநீலவடிவே கிருபைசெய்யும்வடிவே யொருமையாஞ்
செம்புவடிவே முழுதும் நம்புமடியார்கள் வினைதீர்க்கும்வடிவே பெரு
[மைசேர்
முத்திவடிவே பரிசுத்தவடிவே மும்மூர்த்திகள் வணங்கும்வடிவே
மூலவடிவே யருட்பாலவடிவே மேலுமுப்புரமெரித்தவடிவே
மோனவடிவே மெய்ஞ்ஞானவடிவே முத்திமுதலாயிருந்தவடிவே
மோட்சவடிவே மிகுகா(ட்சி)வடிவே மறைமொழிந்த கலை[க்கி](ஞா)ன
[வடிவே
சத்தவொளியாகமபுராணவடிவே நித்தியச்சசிதானந்தவடிவே
சரியை கிரியை யோகஞானவடிவே நீதிதழைக்கும் வேதாந்தவடிவே
தவத்தின்வடிவே யஞ்சுகத்தின்வடிவே யெங்குந்தானாய்நிறைந்த வடி
[வே

தங்கவடிவே மூலலிங்கவடிவே யென்சொல் தமிழுக்கிரங்கும்வடிவே
அத்திமுகன் முருகனைப்பெற்றவடிவே யுனதருமைதனையாளும்வடிவே
ஆதிவடிவே பெருஞ்சோதிவடிவே தியாகராக மகிழாநந்தவடிவே
அயனிலங்குந்தேவர் துதியிலங்கு மொற்றியம் பதியிலங்கு கெவுரி
அன்னநடையெனு மெல்லி மின்னுகொடியிடைநல்லியன்னை வடிவுடை
[வல்லியே. (௯)

Colophon:

வடிவுடையம்[மன்](மை) நவரத்தினம் முடிந்தது. முற்றும்.

(கு-பு.)—

இது, திருவொற்றியூர் வடிவுடையம்பிகை விஷயமானது. செய்தவர் பெயர் முதலியன விளங்கவில்லை, ஒன்பது செய்யுட்களாலானது. இந்தப் பிரதியில் இது பூர்த்தியாக இருக்கிறது.

No. 1755. வடிவுடையம்மை நவரத்தினம.
VADIVUDAIYAMMAI NAVARATTINAM.

Pages, 37. Lines, 4 on a page.

Begins on fol. 20*a*. of the MS. described under No. 1719.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1756. ஆதிமூலப்பத்து.
ĀDIMŪLAPPATTU.

Substance, palm-leaf. Size, 16¼ × 1⅛ inches. Pages, 6. Lines, 5 on page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 18*a*. The other works herein are, Avināśippattu 1*a*, Gaṇapatiyaśiriyaviruttam 4*a*, Vīrarāgavartudi 5*a*, Vaḍivudayammaitudi 9*a*, Sarasvatituḍi 10*a*, Gaṇapatitudi 11*a*, Mayilviruttam 12*a*, Subramaṇyartudi 13*a*, Māriyammanviruttam 14*a*, Ārumugakkaḍavuḷtudi 15*a*, Naraśingapattu 20*a*, Murugantudi 23*a*, Subramaṇyar Tiruniṟruppattu 24*a*, Vēṅkaṭēśar Tiruvanantal 25*a*, Vēṅkatēśar-tōttiram 29*a*.

A eulogy on God Viṣṇu, each stanza of which ends with the foot Ādimūlamē, Ādimūlamē.

Complete in twelve stanzas.

Beginning:

முடிவுமன்றியே முதலுமாகியே
முதலுமன்றியே வடிவுமாயினுய்
வடிவுமன்றியே வண்ணமாயினுய்
வண்ணமன்றியே யெண்ணமாயினுய்-

படியையுண்ட செம்பவளவாயிலே
பாலையுண்டுநீ பாவைதன் கையால்
அடி . . க்குலத்தழுவ தென்சொலாய்
ஆதிமூலமே ஆதிமூலமே. (௪)

End:

பெற்றதாயுநீ பெரியசெல்வநீ
உற்றதந்தைநீ யுரியஞானநீ
(* * * *
கற்றவித்தைநீ கண்கொளாதநீ
காலியாகனே காளமேகமே
அற்றபோதவந் தஞ்சலென்றிடாய்
ஆதிமூலமே ஆதிமூலமே. (௰௨)

Colophon:

முற்றும்.

(கு-பு.)—

இது திருமால் விஷயமான தோத்திரம். ஒவ்வொரு பாடலும் "ஆதி மூலமே ஆதிமூலமே" என்ற விளியை ஈற்றிலுடையது. ஸர்வேஸ்வரனாகிய நீ என்னை நல்வழிப்படுத்திக் காக்கவேண்டுமென வேண்டிக்கொள்வது. செய்யுள்நடை சாதாரணமானது. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

No. 1757. எம்பிரான் சதகம்.
EMBIRĀN ŚATAKAM.

Pages, 19. Lines, 5–6 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 347.

Incomplete.

A eulogy in 100 stanzas on God Viṣṇu by Gōpalakṛṣṇa. Each stanza ends with the expression (எம்பிரானே) Embirānē and so the work is called Embirān Śatakam.

Beginning:

எம்பிரான் சதகம், தோத்திரம்.

என்றுந் திருமாலுக் காளாவே னெ[ன்](ம்)பெருமா[ன்]
னென்று மெனக்கே பிரானவன்—என்றும்
பிறவாத பேராளன் பேரா யிரமும்
மறவாமல் வாழ்த்துகவென் வாய்.

ஸ்ரீதேவராச சுவாமி ரெக்ஷிக்கவேண்டியது.

(* * * *)

ஆழ்வார்கள் பன்னிருவர் பாடல் போ[த்து](ற்று)
மரிபத்தன் கோபால கிருஷ்ணனன்பிற்
கே[ழ்](ள்)வியாற் றனதறிவின் மிகுதியாலுங்
கிருபைகூர் குருகிருபா கடாட்சத்தாலுந்
தாழ்விலா வெம்பெருமான் சதக[ம்] நூறுஞ்
சாற்றினன் போற்றியன்ப ரேத்தும் வண்ணங்
கே[ழ்](ள்)வியா லனுதினமுங் கீர்த்திப் பாதங்
களர்விஷ்ணு வைகுந்தத் துள்ளாய் வாழ்வார். (க)

* * * *

மாதவநீ திருமங்கைக் குபதே சித்து
மந்திரஞ்சே னுபதிமெ(ய்)ச் சடகோ பஞ்சீர்
நாதமுனி யுடனுய்யக் கொண்டார் மிக்க
ஞானமணக் கால்நம்பி யாள வந்தார்
நீதிபுனே பெரியநம்பி யுலகம் போ[த்து](ற்று)ம்
நிகரில்ரா மானுசன்று னுபதேசம் பெற்றேன்
ஏதமற வெழுபத்து நாலு பேர்க்கு
மெதிராச னுரைக்கவைத்தா யெம்பி ரானே. (க.)

End:

திருக்கச்சி நம்பியுனே நம்பிச் செம்பொன்
திருவால வட்டஞ்சே வித்துப் போற்றிப்
பெருக்கமகிழ்ந் தேதிருவாய் மலர்ந்து . . . .
. . . . திஷ்டமாயிருக்க வோர்நாள்
கருக்கலுற வருளாள நிலவிற் றூங்கு
. . . . ளாவென்றால் நில்லா
திரக்கமுடன் கைவிளக்குத் தான்பி டித்[தி](து)
மீடேற்றுஞ் சீரரியே யெம்பிரானே. (கக)

(கு-பு.)—

இது திருமால் விஷயமானது. ஒவ்வொரு பாட்டும் 'எம்பிரானே' என்னும் இறுதியை யுடைமையின் 'எம்பிரான் சதகம்' எனப் பெயர்பெற்றது. திருமாலுடைய குணங்களும் ஆற்றலும் இதில் நன்கு புகழப்பட்டுள்ளன. இது நூறுபாடல்களாலாயது. இந்தப் பிரதியில் 33 பாடல்களே இருக்கின்றன. இதனைச் செய்தவர் கோபாலகிருஷ்ணன் என்னும் பெயருடைய ஒருவரென்று இதன் முதற் பாடலாற் றெரிகின்றது. பாடல்கள் மிகப் பிழையாக எழுதப்பட்டுள. பிரதி மிகச் சிதிலம்.

No. 1758. தசாவதாரப்பத்து.

DAŚĀVATĀRAPPATTU.

Pages, 10. Lines, 4 on a page.

Begins on fol. 73*a* of the MS, described under No. 495.

Complete.

A eulogy in ten stanzas on the ten incarnations of God Viṣṇu.

Beginning:

தாமரைமலர்மீ துறையும் விதியின்
சதுர்வேதந் திருடி(த்)
தத்துதரங்க மிரங்கி நெருங்குஞ்
சாகரமதின் மறையுஞ்
சோமுகவசுரன் றன்னை வதைக்க(த்)
துங்கமிகுங் கங்கை(த்)
துறைசேர்வை வச்சுத மனுவர்க்கிய(ந்)
தோயக் கரமதனில்

மாமணிநேர்பெறு செங்கட் பிறைவாய்
மச்சத் திருவுருவாய்
வந்தொரு நொடியினி லிந்திரனிமையோர்
வாழ்வுதருந் தேவே
வீமணிலங்கிய பொற்புய மீதில்
விளங்கிய கருமுகிலே
மீன்றிகழ் வானள வோங்கியசீர்வட
வேங்கட மாதவனே.

End:

கள்ளத் தனமிகு வோபர்க் கிசையு(ங்)
கசடறவே நன்னூ(ல்)
கற்றா ராய்ந் துயர் மேலோர்க் கிழிவுங்
காசுக் காசைதரும்
வள்ளத் தனமே கதியென வீணர்
மதித்துக் கனபோக
வலையிற் சிக்கிய நாலாம் யுகமென
வருகலி யுகமுடிவிற்
றள்ளற் கரிய பெரும்புகழ் சேருந்
தாமிர பொருனைமிகுந்
தமிழ்நா டதனிடை யந்தண னொருவன்
றனைய னெனப் பரவும்
வெள்ளைப் பரியுரு வெனவரு மாவே
வேதாந் தப் பொருளே
மீன்றிகழ் வானள வோங்கியசீர்வட
வேங்கட மாதவனே. (௰)

(கு-பு.)—

இது திருமாலின் பத்து அவதாரங்களின் வரலாற்றையும் பத்துச் செய யுட்களிற் கூறித் துதிப்பது. செய்யுள் நடை நன்றாயிருக்கிறது. இயற்றிய வர் பெயர் முதலியன தெரியவில்லை. இந்தப் பிரதியிற் பத்துச் செய்யுட் களும் இருக்கின்றன.

No. 1759. நமப்பத்து.

NAMAPPATTU.

Pages, 8. Lines, 7 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 314.

Complete.

This is the original of the work described under R. No. 302(*a*) of the Triennial catalogue of MSS. Vol. I of the Tamil Part.

(கு-பு.)—

இது, மூவருடத்திய காட்லாக்கின் 302 (a) நம்பர் பிரதிக்கு மூலப் பிரதி இதில் இது முற்றுமிருக்கிறது.

No. 1760. நரசிங்கப்பத்து.
NARASIṄGAPPATTU.

Pages, 5. Lines, 5 on a page.

Begins on fol. 20*a* of the MS. described under No. 1756.

Complete.

A eulogy in ten stanzas on Nṛsiṁha; the man-lion incarnation of God Viṣṇu. From the last stanza it is made out that the author is Ñānasambandar of Śīkāḻi.

Beginning:

எச்சுற்ற மெத்தந்தை யெத்தாய ரெப்பெண்டிர்
என்மக்க ளென்பூத மேதுந்தனித்தே
அச்சுற்ற போதென்றன் முன்வந்து நிற்பாய்
அப்போது நீயல்லா லாராகி லுண்டோ
பச்சைப் பசுந்தண்டுழாய் மாலை மார்பா
பரந்தாமனே பற்பநாதா விநாசா
நச்சுப் படத்[த்தை](தில்) நடிக்கும் பிரானே
நரசிங்க ரூபா நமஸ்தே நமஸ்தே. (க)

End:

தண்டாத வுலகேழு முண்டே யுமிழ்ந்தாய்
ஒருபாத மேகொண் டுலகே ழளந்தாய்
[உ](க)ன்றால் விளாவின் கனியை யெறிந்தாய்
கடலைக் கடந்தன்று கவிராச னொடுபோய்
வென்றா யரக்கர் குலமேழு மாள
வேதங்கள் கூத்தாட விண்ணோர்கள் போற்ற
நன்றாக சீ[யா](கா)ழி ஞான சம்பந்தன்
நரசிங்கப் பத்தோத நரகம்புகாரே. (௰)

Colophon:

முற்றும்.

(கு-பு.)—

இது நரசிங்க மூர்த்தியின் விஷயமான தோத்திரம். "நரசிங்கரூபா நமஸ்தே நமஸ்தே" என்ற இறுதியுடைய 10 பாடல்களாலாயது. இயற்றியவர் சீகாழி ஞானசம்பந்தரென்று இறுதிச் செய்யுளிற் குறிக்கப்பெற்றிருக்கிறது. இந்தப் பிரதியில் நூல் முற்றுமிருக்கிறது.

No. 1761. மகரநெடுங்குழைக்காதர்தோத்திரம்.
MAKARANEḌUNKUḺAIKKĀḌARTŌTTIRAM.

Pages, 2. Lines, 8 on a page.

Begins on fol. 28*a* of the MS. described under No. 314.

Same work as that described under R. No. 302(*i*) of the Triennial Catalogue of MSS. of which this is only a copy.

(த-பு.)—

இது, மூவருடத்திய காட்லாக்கின் 302 (i) நம்பர் பிரதியின் மூலப்பிரதி. இதில் அதிலுள்ள அளவேயிருக்கிறது.

No. 1762. வீரராகவர்துதி.
VĪRARĀGAVARTUDI.

Pages, 8. Lines, 5, 6 on a page.

Begins on fol. 5a of the MS. described under No. 1756.
Complete.

Same work as that described under No. 1086 ante.

(த-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கின் 1086-வது நம்பர் பிரதிபோன்றதே. இந்தப் பிரதியில் இது முற்றும் இருக்கிறது.

No. 1763. வேங்கடேசர்திருவனந்தல்.
VĒṄKAṬĒŚARTIRUVANANTAL.

Pages, 10. Lines, 5 on a page.

Begins on fol. 25a of the MS. described under No. 1756.
Complete.

A eulogy on God Vēṅkaṭēśa as worshipped in Tirupati. These stanzas are intended to awaken God Vēṅkaṭēśa from His sleep.

Beginning:

செண்பகமு . . பவழ முத்துங் கொணர்ந்தனர்
தீபமும் வெளிதி வருகுது
திங்களும் பிரபை மாறி வெள்ளியுதையம் பெருகுது
திமிரத திவமுந் தெளியுது
பண்புறு சிலம்புது கங்கையு மெழுந்தனள்
பளபளத் தொளிரு தகிலம்
பகல் விளக்கென்னவே யுடுக்கண் மலர் முரசபட
படாதன மிங்கெழுகுது
உம்பர் தொழு[து](வு)தையகிரி செக்கச்செவேலென்
றொளியுணர்த்திற்றருணன்
உயரவே சூரியன் செங்கோலமர்ந்தது
உ(ல)கமது விளங்கு சமையம்
அம்புய மலர்ந்திடும் கண்ணனே சேஷகிரி [மாயவா]
அச்சுதா பள்ளி உணராய்
அலர்மேலு மங்கையுறை ஸ்ரீவெங்கடாசல
அரிகரி பள்ளியுணராய். (க)

End:

இந்துளு ? முழங்குது யிரவிடு வொளியாகுது
இலகு கோழிகள் கூவுது
எட்டுத்திக்குப் பாலகர் ரிஷி[கள்] முனிவோர்களு
மிமையோரும் வந்து தொழுகிறார்
கொந்தலவு குழல்மாதர் பரதர் வியாச
ரிட்டமுடன் வந்துநிற்கிறார்
கோடிமறை வேதியர்கள் துளபமாலை கொண்டுனது
கோபுரவாசலில் வந்துநிற்கிறார்
. . ந்தமுடன் சங்காழிவென துகிலின்
மீது வினையுடன் காண முன்வந்து நிற்பாய்
வீறான நூற்றெட்டுத் திருப்பதியிலெந்நாளும்
மேவிவாழ் நாராயணா
அந்தியென்னு நதியில் வந்தருளும் சேஷகிரி [மாயவா]
அச்சுதா பள்ளியுணராய்
அல(ர்)மே லுமங்கையுறை ஸ்ரீவெங்கடாசல
அரிகரி பள்ளியுணராய். (௧௦)

(கு-பு.)—

இது திருப்பதி வெங்கடேசர் விஷயமானது. பள்ளியெழுச்சியைக் குறித்துப் பாடப்பெற்றுளது. செய்யுள்நடை தாழ்ந்தது. மிகப்பிழையாயிருக்கின்றது. செய்தவர் பெயர் முதலியன தெரியவில்லை.

No. 1764. வேங்கடேசர்தோத்திரம்.
VĒṄKAṬĒŚARTŌTTIRAM.

Pages, 4. Lines, 5 on a page.

Begins on fol. 30*a* of the MS. described under No. 1756.

Complete in eleven stanzas.

A eulogy exhorting God Vēṅkaṭēśa to protect the supplicant.

Beginning;

கண்ணா முகுந்தா கருணா கராமேக
வண்ணா வுலகளந்த மாயவா—என்றறியப்
பீதாம் பரந்தரித்த பொருளா . . . . .
. . . . பிறியாய் விடை.

பூதல நிரைத்த தோளா புவிதனை யளந்த தாளா
வேதநா ரணனே மூர்த்தி வித்தகா விண்ணோர் போற்றுஞ்
சீதர முகுந்தா வுன்றன் திருப்பதி மலைமே . . . மும்
மாதவா வேங்கடேசா வந்தெனை ரட்சிப்பாயே. (௧)

End :

தருவு யரல(ர்)மேல்மங்கைத்தாயுளமகிழும் பெம்மான்
மருவுறு துளவமாய[வ]ன் வடமலை வேங்கடேசன்
. . . . . . ஞுதன்மீது செந்தமிழ் விளங்கச் சொன்னேன்
வருதுயர் தீர்த்து வென்முன் வந்தென்னை ரட்சிப்பாயே. (கக)

(கு-பு.)—

இது திருப்பதி வேங்கடேசர்மீது, ஒருவர் தன்னை யாட்கொண்டிரட்சிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துப் பாடியுள்ள பதினொறு அறுசீர்க்கழிநெடிலடிவிருத்தத்தாலாய ஒரு சிறு நூல். செய்யுள்நடை சாதாரணமானது. இந்தப் பிரதியில் பூர்த்தியாக இருக்கிறது.

No. 1765. வேண்டும்பத்து.
VENDUMPATTU.

Pages, 4. Lines, 8 on a page.

Begins on fol. 29*a* of the MS. described under No. 314.

Incomplete.

The work described under R. No. 302 (*j*) has been copied from this one.

(கு-பு.)—

இது, மூவருடத்திய காட்லாக்கின் 302 (j) நம்பர் பிரதியின் மூலப்பிரதி. அதிலுள்ள அளவே இதிலுமிருக்கிறது.

No. 1766. வைகுந்தசதகம் உரையுடன்.
VAIKUNDASATAKAM WITH COMMENTARY.

Pages, 56. Lines, 25 on a page.

Begins on fol. 19*a* of the MS. described under No. 490.

Complete.

A eulogy on God Viṣṇu conceived as the Lord of Vaikuṇṭha. The author seems to be Payyanūr Varadaraja Piḻḻai.

Beginning

வைகுந்த சதகம். சடகோபர்விஷயம்.

பொன்னூர்மிளிர் வைகுந்தநற் புரியிற் றிரு மகள்பூமகள்
மின்னூரிரு வரும் வைகவே வேட்புற்றிருக் கும்வாமனன்
தன்னூர் சத கஞ் சொல்லச் செஞ் சடகோபனு ரடி வாரிசம்
என்னுளு மென் னிதயத்திலி ருத்தித் துதி செய்வாமரோ.

இதன் பொருள்.—அழகும் பிரகாசமும் பொருந்திய ஸ்ரீவைகுந்த நகரத்திலே . . . . தோத்திரஞ்செய்வேனென்றவாறு.

திருமேவு வெண் சங்காழி விற் றிறலார் கதை வடிநாந்தகம்
தருமேவு செங் கரமின்னவே தமியேன் முன்வந் தருள் செய்குவாய்
குருமேவு சாந்திபருக்கு(ச்) சேய்குணமாய் நெரு நன்னல்கிய
மருமேவு தண்டுளவாரனே வைகுந்தனே வைகுந்தனே. (க)

இதன் பொருள்.—சுவாமி அழகும் வெண்மையும்பொருந்திய பாஞ்சசன்னியமும் . . . . துளபமாலையணிந்த வைகுந்தவாசனே வைகுந்தவாசனே என்றவாறு.

End:

சீர்மேவு நற் பூதேவியுஞ் சீதேவியு நனிவாழிவன்
னேர்மேவுவைனன் வாழிதண்ணேய் குல்லைமாமறு வாழி நீள்
கூர்மேவு மைம்படை வாழி வைகுந்தச் சதகம் வாழியுள்
தேர்மேவு பாடலையன்பில் வாசித்தோரெழுதினர் வாழியே.

இதன் பொருள்.—சிறப்புப் பொருந்திய நல்ல பூமிப்பிராட்டியும் சீதேவியாகிய மகாலட்சுமியும் மிகுதிவாக வாழி. வலிமையும் அழகுமுள்ளவைனதேகிய கெருடாழ்வான் வாழி. குளிர்ந்த துளபமாலையும் பெருமைபொருந்திய க[வ](வு)ஸ்துவாபரணமும் வாழி. நீண்ட கூர்மையுள்ள பஞ்சாயுதமும் வாழி. வைகுந்தநாதன்பேரில் சொல்லிய சதகமாகிய நூறுபாடல்களும் வாழி. மனதில் தெளிவு உண்டாக்கும் இந்த(ப்) பாடலை அன்புடன் வாசித்தவர் எழுதினவர் [வாழி] வாழக்கடவது என்றவாறு. (ாக)

ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்.

பையனூர் சீர்கருணிகன் வரதராஜ பிள்ளை எழுதியது.

(கு-பு.)—

இந்நூல், வைகுந்தநாதனாகிய திருமால்விஷயமானது. பையனூர் வரதராஜப் பிள்ளை யியற்றியதெனத் தோற்றுகிறது. செய்யுள்நடை சாதாரணமானது. இந்தப் பிரதியில் முற்றும் இருக்கிறது.

No. 1767. சனீசுவரன் தோத்திரம்.
ŚANĪŚVARAN TŌTTIRAM.

Pages, 3. Lines, 8 on a page.

Begins on fol. 49*a* of the MS. described under No. 185.

Complete in twelve stanzas.

A eulogy on the planet Saturn wherein the supplicant offers his worship to Śani, the presiding deity of the planets and requests him not to annoy him with evils.

The work has not been printed. The name of the author is not given.

Beginning:

தேவரெண் டிக்கதிபர் சித்தரொடு கிம்புருடர்
மூவர் முனிவர் முதலோரை—பே வியுறுந்
தாரணிந்த மார்பன் சனிபகவான் சீர்புகலக்
காரணிந்த யானைமுகன் காப்பு.

ஆதிவே தாந்தமுத லறியா ஞான
 வைந்தெழுத்தி னுட்பொருளை யயன்மால் தேடும்
சோதிசிற் றம்பலத்தி லாடி நின்ற
 சுடரொளியை நீபிடித்த தோஷத் தாலே
பாதிமதி சடைக்கணிய வரவம் பூணப்
 பதியிழக்கச் சுடலைதனிற் பாடி யாடச்
சாதியில்லா வேடனெச்சிற் றின்ன வைத்தாய்
 சனியனே காகமேறுந் தம்பி ரானே. (க)

End:

அப்பர்தமைக் கருங்கல்லோ டலையிற் சேர்த்தா
 யரனடியின் முயலகனை யடக்கஞ் செய்தாய்
செப்புமா ணிக்கர்தமைச் சிறையி லிட்டாய்
 சீதரனை மாவுருவெ டுக்கச் செய்தாய்
ஒப்பிலனு மான்வாலி லொளிதீ யிட்டா
 யொலிகடலி னஞ்சையர னுண்ண வைத்தாய்
தப்பிலா துனைத்தொழுதே னெனைத்தொடாதே
 சனியனே காகமேறுந் தம்பி ரானே.
நீரினையுண் டெழுமேகக் கண்ணாய் போற்றி
 நெடுந்தடத்தி லுறுங்கமலக் கண்ணா போற்றி
சூரியன்றன் றவத்திலவந்த பாலா போற்றி
 துலங்குநவ கிரகத்துண் மேலா போற்றி
காரியெனும் பேர்கொளும் ப காரா போற்றி
 காசிதனிற் பிரகீர்த்திபெற்ற தீரா போற்றி
மூரிகொளு நோய் முகவா முடவா போற்றி
 முதுமணிகள் முண்டகத்தாள் போற்றி போற்றி.

Colophon:

முற்றும்.

(கு-பு.)—

இது, நவக்கிரகங்களுள் ஒன்றாகிய சனிபகவானது தோத்திரம். "யாவரையும் பிடித்துத் துன்புறுத்த வல்லோய் நின்னைத் தொழுகின்றேன் என்னைத் தொடாதொழிவாயாக" என்று வேண்டி, "சனியனே காகமேறுந்தம்பிரானே" என்பதை மகுடமாக வைத்து அழகாகப் பாடப் பெற்றுள்ள பதினொரு ஆசிரிய விருத்தத்தாலாகியது. காப்புள்படச் செய்யுள் பன்னிரண்டு. இந்தப் பிரதியில் இது முற்றுமுள்ளது. இது இன்னும் அச்சிடப்படவில்லை. இயற்றியவர் பெயர் முதலியன தெரியவில்லை.

No. 1768. சூரியன் தோத்திரம்.
SŪRIYAN TŌTTIRAM.

Pages, 2. Lines, 10 on a page.

Begins on fol. 16*a* of the MS. described under No. 374.

Contains six stanzas, including the Veṇba stanza in the end.

A eulogy on Sūrya, the Sun, conceived as God Śiva. The name of the author is not given and the composition of the stanzas is very commonplace.

Beginning:

நயனத்தில் மணியான வொளியே சிவாயநம
நாளுகி நீயாகிநின்றாய் சிவாயநம
பயனுற்ற பொருளான வருளே சிவாயநம
பணிவார்கள் பிணிதீர வருவாய் சிவாயநம
அயனச்சு தன் சிவனு மானாய் சிவாயநம
ஆறாறு சமயங்க ளானாய் சிவாயநம
செயமுற்ற தேரேறு மழகே சிவாயநம
சிவசூரியாயநம சிவனே சிவாயநம. (க)

End:

அவ்வாகி யஞ்செழுத் தானாய சிவாயநம
அடியார்கள் பிணிதீர வருள்வாய் சிவாயநம
யுவ்வாகியவ்வாகி யானாய்(ச்) சிவாயநம
வுணர்பிங்க ளாதிக்கு ளுறைவாய் சிவாயநம
பொய்வார மில்லாத முதலே சிவாயநம
பொன்னான திருமேனி யுடையாய் சிவாயநம
செய்வார் தவப்பேறு நீயே சிவாயநம
சிவசூரி யாயநம சிவனே சிவாயநம. (௬)
அருமணன்மணித் தேர்நடத்த வாரணங்கள் போற்றத்
தருணமணி மாலை தயங்க—[யி](வி)ருளகலப்
பாரியா முன்னமே பச்சைப் பரிநடத்துஞ்
சூரியா நீயே துணை.

(கு-பு.)—

இது சூரியபகவான் விஷயமான தோத்திரம். இதில், சூரியனைச் சிவனுகவே பாவித்துத் துதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதியில் ஐந்து விருத்தங்களும் இறுதியில் ஒரு வெண்பாவுமுள்ளன. செய்யுள் நடை சிறந்ததன்று. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை.

No. 1769. நவக்கிரகத்தோத்திரம்.
NAVAKKIRAHATTŌTTIRAM.

Pages, 6. Lines, 7 on a page.

Begins on fol. 60*a* of the MS. described under No. 250.

Complete in ten stanzas.

A eulogy on the nine planets in nine stanzas, each stanza having been written in praise of a planet. The efficacy of the worship of the planet is given in a separate stanza at the end.

Beginning:

சரவணபவன் ர[ஷ்ஷி](க்ஷி)க்க.

நவக்கி[ற](ர)க(த்)தோத்திரம்.

காசினி யிருளை நீக்கிக் கதிரொளி யாகி யெங்கும்
பூசுர ருல கோர் போற்றப் பொசிப்புடன் சுகத்தை நல்கும்
வாசியே ழுடைய தேர்மேல் மகாகிரி வலமாய் வந்த
தேசிகா வெனைரட் சிப்பாய் செங்கதிரவனே போற்றி.

End:

மாதுசேர் நெடுமால் முன்னம் வானவ[ற்](ர்க்) கமுத மீயும்
போது நீ நடுவிருக்க(ப்) புன்சிரந் துள்ள வெய்யத்
தீதில்சேர் கதிர்வி ளங்க(ச்) சிவன்கையிற் சிரமே பெற்ற
கேதுவே யுனைத் துதிப்பேன் கீ[ற்](ர்த்)தியாய் ரட்சிப் பாயே (௯)

சூரியன் சோமன் செவ்வாய் சொற்புதன் வியாழம் வெள்ளி
காரிய னிராகு கேது கடவுளொ ன்பதுபேர் நாம
தாரியன் சக்க ரத்தைத் தரித்திரன் பூசித் தாலு(ம்)
பாரிற் புத் திரரு மஷ்ட பாக்கியம்பெறுவார் தாமே. (௰)

ஸ்ரீராமசெயம்.

(கு-பு.)--

இது நவக்கிரகங்களின் விஷயமான துதி. இதில் ஒவ்வொரு கிரகத்தையும் தனித்தனி ஒவ்வொரு பாடலிற் றுதித்தது, இறுதியில் பலன் ஒரு பாடலிற் கூறப்பட்டுளளது. ஆக இதிலுள்ள பாடல்கள் பத்து. செய்யுள் நடை நன்றாகவிருக்கிறது. இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை.

No. 1770. கச்சியப்பமுனிவர்துதி.

KACCIYAPPAMUNIVARTUDI.

Pages, 6. Lines, 8 on a page.

Begins on fol. 174*a* of the MS. described under No. 83.

Complete.

A eulogy in ten stanzas on Kacciyappamunivar, the pupil of Śivañānamuni of Tiruvāvaḍuturai Mutt and the author of famous works, such as Taṇikaippurāṇam and Vināyakapurānam. It is written in Antadi form of composition and is not yet printed. At the end there are two stanzas on Sivañānamunivar.

Beginning:

மாவடுவுண் கண்மாதர் மயன் மூழ்கி
மயங்கிமதன் கருப்பு வில்விற்
பூவடு வேறுண்டயரும் புலையனேன்
றனையழைத்தோர் பொருளாக்கொண்டெ
ணுவடு வேறத்துதிப்பித் தொருசொல்லா
னவைமுழுது நலிவித்தாண்டா
ளுவடு தண்டுறை சைவளர் கச்சியப்ப
தேசிகன் மெய்யன்பர் வாழ்வே. (க)

End:

கதிர்த்தவருட் டுறைசைவளர் கச்சியப்ப
குருக்கடவுள் கடவுளென்று
மதித்திரங்கு மடியருக்குக் கன்மமீது
மாயையிது மாயேயமீ
தெதிர்த்தருடி ரோதமிது மலமிதரு
ளிது விதுநீ நானீதென்று
மதித்தருளிப் பேரானந்தம் வழங்கி
யவாமயன்மா வடுதீர்த்தானே. (ம)

(கு-பு.)—

இது திருவாவடுதுறைச் சிவஞானமுனிவரது மாணாக்கரும், தணிகைப் புராணம், விநாயக புராண முதலிய நூல்களை இயற்றிய சிறந்த புலவருமான கச்சியப்ப முனிவர்மீது பாடப் பெற்றது. அந்தாதியாகவுள்ள 10 பாடல்களாலாகியது. செய்யுள் நடை சிறந்தது. இஃது இன்னும் அச்சிடப் படவில்லை.

இதன்பின் சிவஞான முனிவர் விஷயமான 2 பாடல்கள் ஓரேட்டில் எழுதப் பெற்றுள்ளன.

No. 1771. கச்சியப்பமுனிவர் துதி.
KACCIYAPPAMUNIVARTUDI.

Pages, 8. Lines, 10 on a page.

Begins on fol. 67*a* of the MS. described under No. 270.

Complete.

Same work as that described above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இந்தப்பிரதியின் 71-வது ஏட்டிலும் முன்பிரதியிலுள்ள சிவஞான முனிவரைக்குறித்த இரண்டு பாடல்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

No. 1772. கச்சியப்பமுனிவர் துதி.
KACCIYAPPAMUNIVARTUDI.

Pages, 5. Lines, 8 on a page.

Begins on fol. 431*a* of the MS. described under No. 1272.

Complete.

Same work as the above

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இந்தப் பிரதியில் பத்து விருத்தங்களும் உள்ளன.

No. 1773. கச்சியப்பமுனிவர் துதி.
KACCIYAPPAMUNIVARTUDI.

Pages, 4. Lines, 6 on a page.

Begins on fol. 10 of the MS. described under No. 1185.

Contains only the first seven stanzas.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இதில், முதலேழுபாடல்கள் மட்டுமே உள்ளன. ஏடுகளிரண்டும் பாதி ஒடிந்துள்ளன.

No. 1774. சரவணதேசிகர் தோத்திரம்.
ṢARAVAṆADEŚĪKAR TŌTTĪRAM.

Pages, 4. Lines, 11 on a page.

Begins on fol. 101*a* of the MS. described under No. 270.

Contains five stanzas.

A eulogy by Kumārabhārati of Puduvainagar on Saravaṇadēsikar, a Śaiva devotee and Guru who lived in Kāñcīpuram.

Beginning:

புதுவை நகர்க்குமாரபாரதியார் செய்த குருத்தோத்திரம்.

சச்சிதா னந்தநித்த நிட்களநின் மலப்பொருளாந்
    தா னுவேயிங்
குச்சிமேற் கரங்குவித்து(ப்)போற்றமெய் யன் பீய்ந்தண்மை
    யுரைத்தென் றுள்வாய்
வச்சிரா யுதன்பிரமன் திருநெடுமால் முதலினரும்
    வணங்கு மேன்மைக்
கச்சிமா நகரில்வந்த சரவணசற் குரவவென்மேற்
    கருணை பாரே.

(க)

End:

தெள்ளுதமிழ்க் குறுமுனிமுன் சங்கத்தார்க் கிலக்கணத்தைச
செப்பி னாற்போல்
வள்ளலே யுனதருளாற் றெக்கணா மூர்த்திகுரு
வந்து நாயேன்
உள்ளமிகத் தெளியச் சொற் பொருளுரைத்தத(னை)கமையி(னா)
லுய்ந்தேன் மேலுங்
கள்ளிருக்கும் பொழிற்கச்சிச் சரவணசற் குரவவென்மேற்
கருணை பாரே.

(கு-பு.)—

இந்நூல், கச்சிமாநகரிலிருந்த சரவணதேசிகர்மீது, புதுவைநகர்க் குமார பாரதியென்பவரால் இயற்றப்பட்டது. இந்தப் பிரதியில் ஐந்து விருத்தங்களே உள்ளன. "சரவணசற்குரவவென்மேற் கருணை பாரே" என்பதை மகுடமாக வமைத்துப்பாடப்பெற்றுள்ளது. செய்யுள் நடை நன்றாகவிருக்கிறது.

No. 1775. சரவணதேசிகர் கலித்துறை.
ŚARAVAṆADĒŚIKAR KALITTUR̤AI.

Pages, 4. Lines, 10 on a page.

Begins on fol. 116*a* of the MS. described under No. 270.

Contains six stanzas.

Similar to the above. The author appears to be Cidambara Svāmigaḷ, the pupil of Śaravaṇadēśikar. The work is in the form of a message sent to Śaravaṇadēśikar through a parrot, a swan, etc., by a person seeking the accomplishment of his spiritual desires.

Beginning:

மோனந்தரு கச்சியப்ப முனிசொல்லு மூதுரைகொ
ளானந்தருத்திர ரம்புயத்தாணிதி (யள்ளி,யள்ளித்
தானந்தரு மெஞ்சரவண ஞானிதன் றாள்வணங்கி
யீனந்தரு மென்னிடுக்க ெ[ன](ண)ல்லா முரையின்கிளியே. (க)

End:

திருமேவு கச்சிச்சரவண தேவனைச் சே[ர்]வைசெய்து
ஒருநாள் பழகினு மோருரை கேட்பினு மோங்குமின்ப
மிருநாழிப் பாலையுரியாகக் கா(ய்)ச்சி யிறக்கிவைத்திட்
டொருநாழிசீனி யிட்டுண்பதுபோ லினிப்புற்றிடுமே.

(கு-பு.)—

இது கச்சிச் சரவணதேசிகர் விஷயமானது. கிளி, அன்னப்பறவை முதலியவற்றைச் சரவணதேசிகரிடம் தூதுசென்று தங்குறை முடிக்கும்வண்ணம் ஒருவர் வேண்டுவதாகப் பாடப்பட்டுள்ளது.

இயற்றியவர் இவரது மாணுக்கராகிய சிதம்பர சுவாமிகளெனத் தோற்றுகிறது. இதிலுள்ள செய்யுட்கள் ஆறு. நடை நன்ருக விருக்கிறது.

இதில் ஐந்தாம் பாடலாகவுள்ள "எண்ணரிய பிறவிதொறும்" என்னும் அறுசீரடியாசிரியவிருத்தம் குருத் துதியாக நூலின் முதலில் இருக்கவேண்டுமெனத்தோற்றுகிறது. அல்லது, வேறு நூறசெய்யுளாக விருத்தல்வேண்டும். ஆதலின் இது கவனிக்கத்தக்கது.

No. 1776. சரவணதேசிகர் தோத்திரம்.

ŚARAVAṆADĒŚIKAR TŌTTIRAM.

Page, 4. Lines, 9 on a page.

Begins on fol. 76*a* of the MS. described under R. No. 271.

Contains three stanzas.

This work has been copied from the MS. described under R. No. 293(*l*) of the Triennial Catalogue of MSS., Vol. II, Part 2.

(து-பு.)—

இது, மூவருடத்திய காட்லாக்கின் 293 (1) நம்பர் பிரதியின் மூலப்பிரதி. அதிலுள்ள அளவே இதிலும் இருக்கின்றது.

No. 1777. சரவணதேசிகர் தோத்திரம்.

ŚARAVAṆADĒŚIKAR TŌTTIRAM.

Pages, 3. Lines, 10 on a page.

Begins on fol. 119*a* of the MS. described under No. 270.

Contains only three stanzas.

Same work as that described above.

(து-பு.)—

இது முன்பிரதி போன்றது. இதில் அம்மூன்று பாடல்களும் உள்ளன.

No. 1778. சரவணதேசிகர் வெண்பா.

ŚARAVAṆADĒŚIKAR VEṆBĀ.

Pages, 2. Lines, 10 on a page.

Begins on fol. 118*a* of the MS. described under No. 270.

Contains three stanzas.

Similar to the work described above.

Beginning:

ஆழியெலாம் வெந்நீரே யாறு லைதவிளவச்
சூழ்புனல்வே றுண்டோவித் தொல்புவியி—லேழையேன்
றன்னையினி நீமுனிந்தாற் றஞ்சமெனக் காருயிர்க்கு
மன்னு சரவணதே வா. (க)

End:

தவப்பிரகா சையனிரு தாடலைமேற் கொண்டு
சிவப்பிரகா சம்புணர்ந்த தேவே—யவத்தனுக்கிப்
போதே பெருகருளாற் பொற்றூ மரையனதின்
றூடா சரவணநா தா. (ரு)

(கு-பு.)—

இது, கச்சிச் சரவணதேசிகர்மீது, அவர் மாணுக்கருள் ஒருவராற் பாடப் பெற்றது. இந்தப் பிரதியில் மூன்று வெண்பாக்களே யுள்ளன.

No. 1779. சற்குருமாலை.

SARKURUMĀLAI.

Pages, 5. Lines, 10 on a page.

Begins on fol. 103*a* of the MS. described under No. 270.

Complete.

A eulogy on Śaravaṇadēśikar of Conjeeveram. In a note made in the margin of the work it is stated that the author is Cidambarasvāmigaḷ.

Beginning:

சிதம்பர சுவாமிகள் செய்த சற்குருமாலை.

சீரணியானந்த ருத்திரர் சன்னிதிசேர் பிறங்க
வாரண வாகம மாதிய யாருமளந்தறிய
வூருணி நீரென யாவர்க்கு மூதி[ப](ய)ம் வாய்ப்ப வெள்ளிர்
தாரணி மீமிசை வந்தாய் சரவண சற்குருவே. (க)

தொந்தப் பிறவியனேக மெடுத்துச் சுழன்றலுத்தே
னந்தப் பிறவியிலின்ப மொன்றில்லை யணுவளவு
மிந்தப் பிறவியிலின்ப நின்னுவிவணெய்தப் பெற்றேன்
றந்தையின் மிக்க . . . . வெ சரவண சற்குருவே. (உ)

End:

தீக்கையி லக்கினித் தேவரறியத் திரவியமு
மாக்கையு மாவியு மங்(கை)யில் வாங்கினை யாங்கதற்பின்
போக்குவரவுசெய் தாக்கையிற் போகம் பொசிப்பவர்யார்
தாக்கிய சங்கையைத் தீர்ப்பாய் சரவண சற்குருவே. (க)

கரணங்கொ டென்னை நினைக்கப்புகிலவண் காணப்படாய்
மரணப்படிலவை கேவலம்வந்து மருவுமெனக்
கரணமபுகல் கச்சியானந்த ருத்திர மம்புயப்பொற்
சரணம் பிரியாதிருக்குஞ் சரவண சற்குருவே. (ம)

Colophon:

சற்குருமாலை முற்றும்.

(கு-பு.)—

இது, காஞ்சீபுரம் சரவணதேசிகர் விஷயமாகச் செய்யப்பட்டது. சிதம்பர சுவாமிகளென்பவர் இதை இயற்றினதாக முதலிலுள்ள வாக்கியத்தால் தெரிகின்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1780. சிதம்பரசாமிகள் துதி.

CIDAMBARASĀMIGAḶ TUDI.

Pages, 3. Lines, 10 on a page.

Begins on fol. 72*a* of the MS. described under No. 27.

Contains four stanzas.

A eulogy on Cidambarasvāmigaḷ, disciple of Kumāradēvar and the author of Tirupporūrsannidhimuṛai.

Beginning:

கானெனு மொரு மானெனும் பேருங்
    கரிசில்வெண் புள்ளிசே ருருவுங்,
காட்டிடு மறிவையக் காட்டியோர் மறியைக்
    கவர்பவன் போலெனைக் கவர
மாணிலத் தாரும் பெருமோ ருருவு
    மருவிடான் மருவியம் மூன்று
மதித்(துள) வெனைப்போற் (ற)ரணிவந் (த)ருளி
    மருவிரு பொருளிரண் டிடத்துத்,
தானுறத் தரிப்பித் தொருபொரு ளிடையே
    தவிருமுத் (தேச)மா திகளுந்
தருவிருப் பாகி மாயையுங் காட்டித்
    தவிர்த்தொரு பொருளோ நா டுதன்மூன்
றுனநின் னிலையே தென்றனன் போரி
    யமர்சிதம் பரகுரு தேவ
னழிவினின் சொரூப நா(மு)மென் றடிதர
    மூளவிலென் றனைக்கவர்ந் தனனே. (க)

End:

இருந்த படியிருந்தா லேதுகுறை யுண்டென்
    றிருந்தபடி யென்னை யிருத்திப்—பொருந்தியுடன்
சாரு மிருவினையுஞ் சாராமற் றனே[த்கா](ற்று)ன்
    போரி(ச்) சித(ம்)பரதே வன்.

(கு-பு.)—

இது, குமாரதேவரிடத்து உபதேசம் பெற்றவரும், "திருப்போரூர்ச் சந்நிதிமுறை" யியற்றியவருமாகிய சிதம்பரசுவாமிகள் மீது இயற்றப்பட்ட துதி. இதிலுள்ள செய்யுட்கள் நான்கு. இயற்றியவர் பெயர் முதலியன தெரியவில்லை. இது முற்றுப் பெறவில்லையெனத் தோன்றுகிறது.

No. 1781. சிதம்பரசாமிகள் துதி.

CIDAMBARASĀMIGAḶ TUDI.

Pages, 3. Lines, 7 on a page.

Begins on fol. 440*b* of the MS. described under No. 1272.

Contains five stanzas.

Similar to the above. Cidambarasāmi is said to have been the head of the Vīraśaiva Mutt at Tiruppōrūr.

Beginning:

பொய்ப்போதந் துளங்கின்மனம் மனந்
துளங்கிற் சகம்பிறங்கும் டொலிவினோர்ந்திங்
கெப்போது சகமனதின் மனம்போதத்
திருத்திடுவை யெழில்சேர் முத்தி
யப்போதுண் டென்வோதி யளவில்பவந்
துடைத்தெனையாண் டடிசேர்வித்தான்
சிற்போதன் முத்திவித்தாந் திருப்போரிச்
சிதம்பரமெய்த் தேவன் றானே. (க)

End:

எங்குமாய் விரிசத் தாதியே பாச
மிதனையோர் வதுபசு விதனுக்
கங்கறி வளிப்ப தருட்பதி யாகு
மாயமூப் பொருளுமோர் விடயந்
தங்குறிற் றோன்றுந் தவிர்ந்தொரு விடயந்
தாவுமுன் னிடையினிற் சொருப
மங்கண்முன் னிகழு மென்றனன் போரி
யருட்சிதம் பரகுரு தேவன். (௫)

(கு-பு.)—

இது திருப்போரூரிலிருந்த வீரசைவமடாதிபதியாகிய சிதம்பரசுவாமிகளது தோத்திரம். இந்தப் பிரதியிலுள்ள செய்யுட்கள் 5. இது தனி நூலன்று. முன் பிரதியின் முதலிலு மீற்றிலுமுள்ள "காமெனு மூரும்" "இருந்தடி" என்னும் பாடல்கள் இதில் இடையேயிருக்கின்றன. இந்நூல் அபூர்ணமென்று தோற்றுகிறது.

No. 1782. சிவஞானமுனிவர்துதி.

ŚIVAÑĀNAMUNIVARTUDI.

Pages, 2. Lines, 6 on a page.

Begins on fol. 440*a* of the MS. described under No. 1272.

Two stanzas in praise of Śivañānamunivar of Tiruvāvaḍuturai Mutt, who is wellknown as the author of Śivañānabhṣāyam, Kāñcippurāṇam, etc. See also R. No. 334(*e*) of the Triennial catalogue of Tamil MSS. for another copy of this work.

Beginning:

ஓவியங் காணச் சுவரிலை சுவரை
யுற்றறிந் திடிலவை யிலபோன்
மேவுசத் தாதி காணுறிற் சிவமும்
விளங்குறு விளங்குறுச் சிவத்தைப்
பாவிநீ சிவம லாதிலை யெனவே
பரம பூரணம்விளங் குறுமென்
றுவடு துறைசை யமர்சிவ ஞான
தேசிக னறைந்தன னன்றே. (க)

End:

கண்ணிறைற் காணிற் சித்திரங் கையாற்
றடவுறிற் சுவரல திலையே
எண்ணுபொய்ப் புலஞற் காணுறிற் சகமாய்
நணுகுமப் புலன்வழி யொழ்கா
துண்ணிறை யருளா லுற்றறிந் திடிலவ்
வுறுசுக மகன்றுபூ ரணமே
[ன](ந)ண்ணுமென் றுரைத்தா ஞவடு துறைவாழ்
நஞ்சிவ ஞானதே சிகனே. (உ)

(௬-பு.)—

இது, திருவாவடுதுறையில் இருந்தவரும் சிவஞான பாஷ்யம், காஞ்சிப் புராணம் முதலிய நூற்களை இயற்றியவருமாகிய சிவஞான முனிவரது துதி. இதில் உள்ள செய்யுட்கள் இரண்டு. செய்யுள் நடைசிறந்தது. அச்சிடப் படவில்லை.

No. 1783. சிவஞானமுனிவர்துதி.

ŚIVAÑĀNAMUNIVARTUDI.

Page, 1. Lines, 8 on a page.

Begins on fol. 71*a* of the MS. described under No. 270.

Contains two stanzas.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இந்தப் பிரதியில் இரண்டு பாடல்களும் உள்ளன.

No. 1784. சிவஞானமுனிவர்துதி.

ŚIVAÑĀNAMUNIVARTUDI.

Pages, 2. Lines, 6 in a page.

Begins on fol. 176*a* of the MS. described under No. 83.

Contains the same two stanzas.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இதிலும் அவ்விரண்டு பாடல்களேயுள்ளன.

No. 1785. சிவஞானமுனிவர்துதி.

ŚIVAÑĀNAMUNIVARTUDI.

Pages, 2. Lines, 11 on a page.

Begins on fol. 69*a* of the MS. described under No. 12:9.

Same work as the above.

The MS. described under R. No. 334 (*e*) of the Triennial Catalogue of MSS., Vol. II, Part 2 has been copied from this MS.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 334 (e) நம்பர் பிரதியின் மூலப்பிரதி. இதில் இரண்டு பாடல்களும் இருக்கின்றன.

No. 1786. சிவப்பிரகாசர் ஊஞ்சல்.

ŚIVAPPIRAKĀŚAR ŪÑJAL.

Pages, 4. Lines, 6 on a page.

Begins on fol. 53*a* of the MS. described under No. 82.

Complete in ten stanzas.

In praise of Śivappirakāśar, a learned Śaiva devotee of Tiruvaṇṇāmalai, who is here considered to be resting on a swing. The name of the author is not known; but he refers in the last stanza to a prince named Vēṅkaṭācala who probably patronised him.

Beginning :

முந்துமறைப் பொருளாகி யெவையு மாகி
முதலீறு மிலவாகி முதன்மை யாகிப்
பந்தமறுத் துயிர்க்குரல மளிப்பான் ஞானப்
பரமகுரு வடிவாகிப் பரிவு கூர்ந்து
வந்தசிவப் பிரகாசச் சாமி பாத
மலரடியைச் சொலுமூஞ்சன் மாலை பாடக்
கந்தனுக்கு முன்னவனுஞ் சிவப்பிர காசக்
கற்பகத்தின் பற்பதங் காப்புத் தானே. (க)

செம்பவளக் காணிறுவி டொளிகொள் வச்சிரந்
திரட்டுவிட்டம் போட்டுமணிப் பலகை சேர்த்துப்
பம்புமொளி மரகதத்தாற் கொடுங்கை பூட்டிப்
படருமொளி மாணிக்கத் தவிசு பாய்ச்சி
யும்பர்புக ழாணிமுத்தின் வடங்கள் பூட்டி
யொருகுமெத்தை யலங்கார வூஞ்சன் மீதி
லம்புவியோர் புகழருணை மேவு மெங்க
ளருட்சிவப்பிர காசகுரு வாடி ரூஞ்சல். (உ)

End :

பார்வாழி விண்வாழி யுயிர்கள் வாழி
பரமசிவ னடியார்கள் பலரும் வாழி
பேர்வாழி வேங்கடா சலம கீப
னெ[ன்னு](ந்நா)ளும் பூவுலகி லிருந்து வாழி
கார்வாழி மறைகளா கமங்கள் வாழி
கண்டிகைநீ றெழுபெஞ்சாக் கரமும் வாழி
சீர்வாழி சன்னிதிச்சங் கமர்கள் வாழி
சிவப்பிரகா சையன்சே வடிகள் வாழி. (கo)

(கு-பு.)—

இது திருவண்ணுமலையிலிருந்த 'சிவப்பிரகாசர்' என்னும் பெரியாரது துதி ரூபமானதொரு ஊசற்பிரபந்தம். காப்பு, வாழ்த்தும் உள்படப் பத்துச் செய்யுளாலாயது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது. செய்யுள் நடை சிறந்தது. அச்சிடப்படவில்லை.

இறுதியிலுள்ள வாழ்த்துச் செய்யுளால் வேங்கடாசல மென்னும் பெயரையுடைய ஒரு பிரபு இந்நூலாசிரியர்க்கு உதவி புரிந்தவனென்று ஊகிக்கக் கிடக்கிறது.

No. 1787. ஞானப்பிரகாசர் தோத்திரம்.
ÑĀNAPPIRAKĀŚAR TŌTTIRAM.

Pages, 55. Lines, 7 on a page.

Begins on fol. 9a of the MS. described under No. 1294.
Complete in one hundred and two stanzas.

A eulogy on Ñānapprakāśar, the head of the Śaiva Mutt at Triuvalore. He is conceived as Śiva himself and the means of attaining salvation by the worship of Śiva are described herein.

Beginning:

சித்தி தருநாதன் தெனக[யி](ம)லை வாழ்நாதன்
பத்திதரு நாதன் பரநாதன்—முக்திப்
பெருநாதன் ஞானப் பிரகாச னுண்மை
தருநாதன் சற்குருநா தன்.

பரம ரகசியத்தைப் பாழான வாயா
லிரவுபக லெந்நே ரமின்றிக்—குரலெரியக்
கூப்பிட்டுங் காணுமோ கோழைமட நெஞ்சேமால்
பூப்பிட்டுங் காணாப் பொருள் (க)

End:

ஐந்தறிவார் கண்டாலு மாரேனுஞ் சொற்றாலு
மெந்த விருப்புவெறுப் பேய்ந்தாலும்—சிந்தையே
பார விசாரத்தைப் பண்ணாதே யேதேனுந்
தீர விசாரித்துச் செய். (கக)

தில்லைவனங் காசி திருவாரூர் மாயூர
முல்லைவனங் கூடல் முதுகுன்ற—நெல்லைவனங்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென முத்தி வரும். (௱)

நன்கருத்தே தென்கமலை ஞானப் பிரகாசனே
யென்கருத்தை யுன்கருத்தென்றே . . . மே—லென்கருத்தை
யென்கருத்தென் றெண்ணி யான்பட்ட துன்பமெலா
மூன் . . . . வறியும். (௱க)

Colophon:

சாதாரண ௵ வையாசி ௴ 20௳ எழுதி நிறைந்தது.
மு[த்து](ற்று)ம்.

(கு.பு.)—

இந்நூல், திருவாரூர் ஞானப்பிரகாசர் விஷயமானது. அவரைச் சிவபெருமானாகவே பாவித்துத் துதிக்கப்பெற்றதுடன், சிவபெருமானை வழிபட்டு உய்யுமுறைமையையுங்கூறுவது. காப்புச் செய்யுளுடன் நூற்றிரண்டு வெண்பாக்களையுடையது. இயற்றியவர் ஞானப்பிரகாசரின் சிஷ்யர்களுளொருவரெனத் தோற்றுகிறது. செய்யுள் நடை நன்றாகவிருக்கிறது. இந்தப்பிரதியில் முற்றுமுள்ளது.

No. 1788. தவப்பிரகாசர்துதி.

TAVAPPIRAKĀŚARTUDI.

Pages, 8. Lines, 10 on a page.

Begins on fol. 81*a* of the MS. described under No. 270.

Complete.

Same work as that described under R. No. 293*d* of the Triennial Catalogue of MSS. Vol. II.

After the end of this work, there are three additional stanzas in praise of Tavappirakāśar.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 293(d) நம்பர் பிரதி போன்றது. இதில் இந்நூல் முற்றும் இருக்கிறது.

இது பூர்த்தியானவுடன் ஷெயார் பேரில் பாடல் மூன்றுள்ளன.

No. 1789. திருஞானசம்பந்தர் துதி.
TIRUÑĀNASAMBANDARTUDI.

Substance, palm-leaf. Size, 11¼ × 1 inches. Pages, 37. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 13a. The other works herein are: Aṅgālamman padikam 1a. Tiruñānasambandar Tōttira Kīrttanai 7a. Kapālīśvarar Kīrttanai 18a.

Complete in ten stanzas.

A eulogy describing the leading incidents in the life of Tiruñānasambandar of Śīrkāḻi, one of the 63 Tamil Śaiva devotees and the author of a portion of the Tēvāram.

Beginning:

திருஞானசம்பந்தசுவாமிகள்பேரில் துதி.

ஆசிரியவிருத்தம்.

சீர்வளருங் காழியில்வாழ் கவுணிய கோத்திரச்
சிவபாத விருதயருஞ் சிறப்பின் மிக்க
வேர்வளரும் பகவதியார் தாமுஞ் செய்த
வெண்ணரிய தவப்பேற்ரு லின்புற் றிந்தப்
பார்வளர வாதிரை நாளவதரித்துப்
பருவமூன் றதனி லுமை பாலுண் டோங்கும்
பேர்வளரு ஞானசம் பந்த ரென்னும்
பிள்ளையார் கழலிணையைப் பேணி வாழ்வாம். (க)

End:

திருநல்லூர்ப் பெருமணம்வாழ் நம்பாண் டார் முற்
செனஞந் தரங்கடொறுஞ் செயுந்த வத்தாற்
றரும்புதல்வி தனைமணந்தக் கோலத் கோடுந்
தந்தைதாய் மனைவிசுற்றஞ் சாரு மன்பர்
விரும்பியுடன் வந்திடவப் பெருமணத்தார்
மெய்ச்சோதி யுடன்கலந்து விளங்கு மெங்கள்
பெருவாழ்வாம் ஞானசம் பந்த ரென்னும்
பிள்ளையார் கழலிணையைப் பேணி வாழ்வாம். (ம)

(கு-பு.)—

இது சைவசமயாசாரியருள் ஒருவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் விஷயமானது. அவர் பிறந்தது முதல் முத்திபெற்றதிறுதியாகவுள்ள வரலாற்றையும் இடையே அவர் செய்த பல அற்புதச் செயல்களையும் சுருக்கிக் கூறும் பத்து ஆசிரியவிருத்தங்களாலாயது. செய்யுள் நடை சாதாரணமானது. இயற்றியவரின்னாரென்த் தெரியவில்லை. இந்நூல் இந்தப் பிரதியில் பூர்ணமாகவுளது.

No. 1790. திருஞானசம்பந்தர் தோத்திரக்கீர்த்தனை.
TIRUÑĀNASAMBANDAR TŌTTIRAKKĪRTTANAI.

Pages, 10. Lines, 4 on a page.

Begins on fol. *7a* of the MS. described under No. 1789.

Complete.

Similar to the above. The mind is addressed herein with a view to worship Tiruñānasambandar.

Beginning:

திருஞான சம்பந்த[ர்]சுவாமிகள சரித்திர தோதகிரம் விருத்தம்.

இருநிலத்தி லுறுமளவு மெண்ணரிய பெருஞ்செல்வ மெய்திப்பின்னர்
அருமறைகள் புகழ்கயிலை யத்தனடி நீழலின்கண் ணமரச்செய்யும்
திருவளருங் காழியில்வாழ் திருஞான சம்பந்தர் சீரைப்பாடி
யுருகியவன்புட னன்னோர்பொற் கழலையேத் துவையேலுன்னு னெஞ்சே.

கீர்த்தனை.

இராகம் - க்லியாணி - ஆதிதாளம்.

பல்லவி.

ஞானசம்பந்தர் திருவடிபூசித்தால், நன்மைபெற்
றுய்யலாம்—நெஞ்சே.

அனுபல்லவி.

வானளாவியசோலை மாடமாளிகைசூழும்
வளமும்பன்னிருபேரு மருவும்சீகாழிவாழும் (ஞான)

ச[ற](ர)ணங்கள்.

பார்புகழ் மறையோரீர் கவுணியகோத்திரச் சிவ
பாதவிருதயரும் அவர் பத்தினியாம்பக வதியாருஞ் ,
செய்தவப் பயனுலண்டத்தவரும்,
ஆர்வமுறவாதிரை நாளிலுதித்தந்த ஆண்டுமுதல்
மூவாண்டில் அன்னையுமையாள்தந்த, பேர்வளர்
ஞானப்பா லருந்திச்சிவானந்தப் பெருமான்பாற்
கோலக்காவிற் பொற்றாளம் பெற்றுவந்த (ஞானசப்பந்தர்)

End:

திருமயிலையிற்சிவ நேசச்செட்டியார்முன்
செய்தவக்கொடியொன்று சர்ப்பந்தீண்டவவரங்கத்தை
மீண்டும்பூம்பாவையாச் செய்தப்பதியையகன்று
பெருமணநல்லூரில் நம்பாண்டாரெனுமொரு
பெரியோர்பெண்ணைமணம் புரிந்தபின்னதில்வந
மிருவினையாகாதென் றவரோடின்பந்தரு
மெந்தைசபாநாதரிணையடி சேர்திரு ஞானசம்பந்தர்
திருவடிபூசித்தால் நன்மைபெற்றுய்யலாநெஞ்சே.

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இது சைவசமயாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் விஷயமானது. அவர் பிறந்தது முதல் முத்திபெற்ற வரையுள்ள சரித்திரத்தைச் சுருக்கமாக அமைத்து, 'அவரைப் பூசித்தால் நன்மை பெறுவாய்' என்று மனத்தைப் பார்த்து ஒருவர் சொல்வதாகச் செய்யப்பட்டுள்ளது. 'கீர்த்தனை' என்னும் இசைப்பாட்டாலாயது. கீர்த்தனை தொடங்குமுன், அவரைத் துதிப்பதால் வரும்பயனை யுணர்த்தும் ஆசிரியவிருத்தமொன்றுளது. இந்தப் பிரதி பூர்த்தியுடையது.

No. 1791. திருத்தொண்டர் திருநாமக்கோவை.

TIRUTTONDAR TIRUNĀMAKKŌVAI.

Pages, 3. Lines, 8 on a page.

Begins on fol. 184*a* of the MS. described under No. 304.

Complete.

A stanza embodying the names of the 63 Tamil Śaiva devotees by Śivañānamunivar of Tiruvāvaduturai. The work has been printed.

Beginning :

(காப்பு).

மெய்யன்பர் நா(ம)மெல்லாம் வெவ்வேறு போற்றிடவைங்
கையன் றிருவடியே காப்பு.

(நூல்).

தில்லைவாழந்தணர்கள் சீர்நீல கண்டனா
ரில்லை யளித்த வியற்பகையார்—தொல்லை
யிளையான் குடிமாறன் மெய்ப்பொருளார்க்கென் று
மிளையா விறன்மிண்டரென்ப—வளவுமமர்
நீதி யெறிபத்தர் நீண்டபுக ழேனாதி
நாதர்திருக் கண்ணப்பர்நன்கலையர்—மேதக்க

End :

சிந்தனைசெய்திந்தத் திருநாமக் கோவைதனை
மந்திரமாக்கொண்டு மயிர்சிலிர்ப்ப—நைந்துருகி
மெய்யன்பா லென்றும் விளம்பப்பெறுவார்கள்
கைதவமும் புல்லறிவுங்கற்பனையு—மையலுந்தீர்த்
தத்துவிதா னந்த வகண்டபரிபூரணத்து
ணித்தியமா வாழ்வார் நிசம்.

Colophon :

குருபாதமே துணை.
திருச்சிற்றம்பலம்.
மார்கழிமீ உஉ முற்றும்.

(கு-பு.)—

இஃது, சிவனடியார்களாகிய நாயன்மார்களனைவர் பெயரையும் வரிசையாகக் கூறும் ஒரு கலி வெண்பா. இதனை யியற்றியவர் திருவாவடுதுறைச் சிவஞான முனிவர். அச்சிடப்பட்டிருக்கிறது. இந்தப் பிரதி பூர்த்தியுடையது.

No. 1792. இட்டகாமியமாலை.
ITTAKĀMIYAMĀLAI.

Substance, palm-leaf. Size, 12 × 1 inches. Pages, 32. Lines, 5 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Incomplete.

Same work as that described under R. No. 328*a*, which is only a copy made from this one.

(கு-பு.)—

இது மூவருடத்துக் காட்லாக்கின் 328*a* நம்பர் பிரதியின் மூலப்பிரதி. இந்நூல் அதிலுள்ள அளவே இதிலும் உள்ளது.

No. 1793. குருமொழிவெண்பா.
GURUMOLIVENBĀ.

Pages, 6. Lines, 6 on a page.

Begins on fol. 171*a* of the MS. described under No. 250.

Complete.

A treatise bearing on Advaita Vēdāntā containing 13 stanzas in Venbā metre, in which a Guru imparts spiritual wisdom to his disciple. Two stanzas of Pattinattu Pillai are incorporated in this work.

Beginning :

குருமொழிவெண்பா.

முப்பாழும் பாழாய் முதற்பாழ் வெறும்பாழா
யப்பாழு மாதியந் தம்பாழா—டப்பாமேழ
சும்மா [யி](வி)ருக்கச் சுகந்தா(?)யேகுருவே
யம்மா [யி](வி)னிப்பிறவா மல். (க)

நானிருந்த பாழ்மனையை [ஞ](நா)ளளவே கைக்கொண்டாய்
நீயிருந்த பாழ்மனையை நீதந்தாய்—நேரே
கடக்க(க்) குதிக்கக் காலமாண் டடையக்
[கு](கொ)டுக்கப் பிறப்பான் குரு. (உ)

End :

காசித் துறையைக் கரைகடந்து காணுமல்
வாசியைக் கொண்டாட மாட்டாமல்—பேசித்
தலைவள(ர்)த்துக் கூத்தாடி(த்) தாவடங்கள் பூண்டு
அலைவதிஞ வென்னு மடா. (மங)

(கு-பு.)—

இது, அத்வைத மதத்தைச் சார்ந்ததெனத் தோற்றுகிறது. இதில், குரு, தன்னுடைய சிடனுக்கு ஞானமார்க்கத்தை உபதேசித்து நல்வழிப்படுத்துவதாகக் கூறப்பட்டுள்ளது. பதின்மூன்று வெண்பாக்களடங்கியது. இதி

லுள்ள "ஆரூராரிங்கிருக்க" "ஆவியொடு காய" மென்னும் வெண்டாக்களிரண்டும் பட்டினத்தார் பிரபந்தத்தைச் சேர்ந்தன." நடை நன்றாகவுள்ளது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை.

No. 1794. கோயில்நான்மணிமாலை.

KOILNANMANIMALAI.

Pages, 72. Lines, 10 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1143 ante.

Complete.

A eulogy on God Śiva worshipped under the name Naṭarāja in the shrine at Cidambaram: by Paṭṭinattu Piḷḷai. The work has been printed.

Beginning:

திருச்சிற்றம்பலம். சிதம்பர நான்மணிமாலை.

பூமே லயனறியா மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டுவாம்—பாமேவு
மேத்துகந்தான் றில்லை யிடத்துகந்தா னம்பலத்தே
கூத்துகந்தான் கொற்றக் குடை. (க)

End:

சதுமுகன் றந்தைக்குக் கதிர்விடு கடவு
ளா[ளி](ழி)கொடுத்த பேரருள் போற்றி
முயற்சிகொடு பணிந்த வியக்கர்தங் கோனுக்கு
மாநிதி யிரண்டு மாணுப் பெருவளத்
தளகை யொன்றுந் தளர்வின்றி நிறுவிய
செல்வங் கொடுத்த செல்வம் போற்றி
(* * * *)
தில்லை மாநகர் போற்றி தில்லையுட்
செம்பொ னம்பலம் போற்றி யம்பலத்
தாடு நாடகம் போற்றி யென்றுங்
கென்றும் போற்றினு மென்றனக் கிறைவ
[யா] (வா)ற்றுசி(ல்)லேன் போற்றி யாயினும்
போற்றிபோற்றி [பு](பொ)வம்பூ வடிக்கே. (௪0)

Colophon:

நான்மணிமாலை கனகாசலம் எழுதி முடிந்தது முற்றும்.

(த-பு)—

இது சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் நடராசப்பெருமான் விஷயமானது. பட்டினத்துப் பிள்ளையார் இயற்றியது. மிக அழகானது. அச்சிடப்பட்டிருக்கிறது. இந்தப் பிரதியில் பூர்ணமாக இருக்கிறது.

No. 1795 சச்சிதானந்தவிளக்கம்.

ŚACCIDĀNANDAVILAKKAM

Pages, 10. Lines, 6 on a page.

Begins on fol. 151*a* of the MS. described under No. 250.

Complete.

A treatise laying down that due meditation accompanied with a certain posture is conducive to the realization of Brahman. The name of the author is not known.

Beginning:

சச்சிதானந்தவிளக்கம்.

ஓங்கார மாவதென வென்று கே[ழ்க்](ட்)கி
  லுகாரமொன றகாரமொன்று மகாரமொன்று
பாங்காக நின்றிடு[ம்]மே பி[ற](ர)ணவ மாச்சு
  பாரிருந்த கருவல்லோ வாசான்சொல்லான்
வாங்காத வகாரமது காரத்திற் சேர்ந்து
  மன்னிநின்ற [யி](வி)டமல்லோ மகாரமாச்சு
தாங்காதே நின்றுரைக்க(க்) கேசரியைக் காட்டுஞ்
  சச்சிதானந்த மென்ற மவுனந்தானே. (க)

End;

முறையாகத் தானென்ற [ய](வ)ாசை போக்கி
  மூதண்ட வேதாந்த சாத்திரத்தை(ப்)பார்த்து
நிறையாக மனமொன்று வறிவிற் சேர்ந்து
  நி[ற்](ர்க்)குணத்தின் வீதியிலே நொந்துகூடி
மறையாக நின்றதொரு கேசரியைக் கண்டு-
  மனமொட்டிக் கலந்ததிலே தானேதானாய்த்
துறையான விரவுபகல[த்தா](ற்று) லல்லோ
  சொல்லவா ஞானியெனச் சொல்லலாமே. (ய)

(கு-பு.)—

இந்நூல் ஞானவிஷயமானது. கேசரி யென்னும் முத்திரையைக்கூடி மவுனமாக இருப்பின் சச்சிதாநந்த ஸ்வரூபமாகவுள்ள பிரமத்தை எளிதில் அறியலாம் என்று கூறுவது. பத்துப் பாடல்களாலாகியது. இயற்றியவரின்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

No. 1796. சட்டைமுனிநாயனார் ஞானம்வெண்பா ஆத்திசூடி.

SAṬṬAIMUNINĀYANĀR ÑĀNAMVEṆBĀ ĀTTISŪDI.

Pages, 8. Lines, 6 on a page.

Begins on fol. 52*a* of the MS. described under No. 802.

Incomplete; contains 28 stanzas only.

Same work as Āttisūdiveṇbā described under R. No. 175(*m*) and 280(*e*) of the Triennial Catalogue of MSS.

(கு-பு.)—

இந்நூல் மூவருடத்திய காட்லாக் 175(*m*), 280(*e*) நம்பர்களில் "ஆத்தி சூடி வெண்பா" என்னும் பெயருடன் வந்துள்ளதே. இதன் தலைப்பில் சட்டைமுனி நாயனுர் ஞானம் வெண்பா—ஆத்திசூடி யென்று குறித்திருப்ப தால் அப்பெயரால் வெளியிடப்பட்டது. இந்தப் பிரதியில் 28 வெண்பாக்கள் உள. ஆதலின் முற்றுப்பெறவில்லை.

No. 1797. சித்திரவெண்பா.

CITTIRAVEṆBĀ.

Pages, 13. Lines, 6 on a page.

Begins on fol. 164*a* of the MS. described under No. 250.

Complete in 29 stanzas of Veṇbā metre. A treatise bearing on Śaiva Vēdānta. The name of the author is not given.

Beginning:

அத்தி முகனே யறுமுக வன்துணைவா
வெ[த்தி](ற்றி) விநாயகனே விண்ணப்பம்—நித்[தியமாய்](தம்)
பரத்தி லடையாமல் பாழ்போன [ஞ](நா)னு
மறித்தெட்டு சேரவே வை. (க)

வைப்பா யி[று](ரு)தயத்தில் மாறாத் தியானமது
செப்பாப் பொருளாந் திருவடியை—முப்பாழ்
கடந்த பொருள்மூலங் காரணமா[மாய்]க் கினமேல்
அடர்ந்துநடங் கண்டிருநீ யங்[கே](கு). (உ)

End:

மெய்யாய்ப் பிரணவத்தை மேவிப் புணர்வோர்க்கு
அய்யமறுத் தானந்த மாக்குமே—உய்ய
மனஞ்சென் றடைந்து(?) மாறாத் தியானமா
யினஞ்சேர்ந்து நின்ற [யி](வி)டம். (உஅ)

[யி](இ)டமான மூலத் தெழுந்தசுட ராகி(க்)
குடவயிர ணின்ற குறைகே[ளு](ள்)—அடைய
விழுங்கி வரும்பிறவி வேரறுத்து விட்டான்
அழுங்காத வத்தி முகன். (உகூ)

குருவே துணை.

(கு-பு.)—

இந்நூல் சைவ வேதாந்த விஷயமானது. அந்தாதித் தொடையிலமை ந்த இருபத்தொன்பது வெண்பாக்களை யுடையது. நூலாசிரியர் இன்னரெ னத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது. சிற்சில விடத்துப் பிழையுமுண்டு.

No. 1798. ஞானவம்மானை.
ÑĀNAVAMMĀNAI.

Pages, 7. Lines, 8, 9 to a page.

Begins on fol. 16*a* of the MS. described under No. 1061.

Complete in 32 stanzas.

A treatise on Śaiva religion setting forth that the body and such other things are unreal and that spiritual knowledge alone is real. The name of the author is not given.

Beginning:

குஞ்சரக் கன்றினைக் குட்பிட்டே னம்மானை
கொள்ளைப் பிறப்பைக் குலைத்திட்டே னம்மானை
யஞ்சினேன் வஞ்சப் பிறப்பினுக் கம்மானை
யாகம்போய்க் கூற்றுவ னானதே யம்மானை. (க)

*   *   *   *

*   *   *   *

தன்பாதஞ் சென்னிமேற் றந்தான்கா ணம்மானை
தான்மேலிட் டெல்லாமுந் தானானா னம்மானை
என்போதங் கீழிட் டிறப்பித்தா னம்மானை
யான்போன தென்னிலே யேகாந்தி யம்மானை. (எ)

End:

சேரச் சிவமாகி வேறற்றே னம்மானை
சித்தாகி வெற்றுட லானேன்கா ணம்மானை
பாரப் பிர[வ](ப)ஞ்ச நீ[ற்றே](த்தே)ன்கா ணம்மானை
பரானந்த வெள்ளம் படிந்தேன்கா ணம்மானை. (௩௧)

தேசிகன் றித்திரிப் போதொரு தம்மானை
தேசிக னம்மானை யான்கண்ட தெய்வமும்
மாசிலா மெய்கண்ட தேவன்கா ணம்மானை
யம்மானை யம்மானை யம்மானை யம்மானை. (௩௨)

Colophon:

ஞானவம்மானை முற்றும்.

கச்சியப்ப தேவனடி யுச்சியுளம் வைப்பாம்.

(கு-பு.)—

இது சைவசமயத்தைச் சார்ந்தது. உடல் முதலியன பொய்ப்பொருளென்றும், உணர் வொன்றே உண்மைப் பொருளென்றும், அறிவுடை யொருவன் தன்னனுபவத்தாலுணர்ந்து, ஏனையோர்க்குக் கூறுவதாக இந்நூலமைந்துள்ளது. காப்பு உட்பட முப்பத்திரண்டு பாடல்களை யுடையது. நூலாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் இது முற்று மிருக்கிறது.

No. 1799. திருமயிலைக் கபாலீசர்தோத்திரக்கீர்த்தனை.

TIRUMAYILAI KAPĀLĪSARTŌTTIRAKKĪRTTANAI.

Substance, palm-leaf. Size, 11¼ × 1 inches. Pages, 3. Lines, 4 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Begins on fol. 18*a*. The other works herein are Aṅgālammai-padikam 1*a*. Tiruñānasambandartōttirakkīrttanai 7*a*. Tiruñānasambandartudi 13*a*.

Complete.

A eulogy on Kapālēśvara, a form of Śiva, worshipped in the shrine at Mylāpore. In the eulogy the grace of Śiva as shown to the four Śaiva devotees is indicated.

Beginning:

திருமயிலைக்கபாலீசர்பேரில் கீர்த்தனை.

இராகம்—ஆனந்தபைரவி.

(பல்லவி.)

சூலபாணியர்கபாலீசர் - இவர் - தொண்டர்களுக்கு மகா நேசர்.

(அநுபல்லவி.)

ஞாலமெல்லாம்புகழுந் திருமயிலாபுரி

நண்ணுங்கற்பகவல்லி—நாயகராந்திரி சூலபாணியர்.

(சரணங்கள்.)

மெய்யன்பரெனும்வாதவூரருக்காய் - மேவைருள்ளங்களிகூரச்

செய்யுந்திருவிளையாட்டெல்லாமறிவீர்களே

பொய்யலவிவரால்மெய்ப் போதம் பெறுவீர்களே சூலபாணியர்.

End:

திருஞானசம்பந்தமூர்த்தி - உள்ளந்

தெரிந்தவரெண்ணமெலாம்பூர்த்தி

பரிவாயியற்றிப்பூம் - பாவைக்கிரந்தாரே

பெருஞ்சீர்வாயிலார்முத்தி பெறவிடைமேல்வந்தாரே.

சூலபாணியர்கபாலீசர் - இவர் - தொண்டர்களுக்கு மகா நேசர்.

(கு-பு.)—

இது மயிலாப்பூரிற் கோயில்கொண்டிருக்கும் கபாலீசுவரமூர்த்தி விஷயமான தோத்திரம். ஈசுவரன், சைவசமய குரவர் நால்வருக்கும் அருளிய தன்மையை வியந்து தோத்திரஞ் செய்யப்பட்டுளது. கீர்த்தன மென்னும் இசைப்பாட்டாலாயது. இயற்றியவர் பெயர் முதலியன தெரியவில்லை. இந்நூல் இந்தப் பிரதியில் முற்றுமுள்ளது.

No. 1800. திருமூலர்தியானக்குறிப்பு.
TIRUMŪLARDHYĀNAKKUṞIPPU.

Pages, 14. Lines, 7 on a page.

Begins on fol. 130*a* of the MS. described under No. 250.

Describes the self-realization of Tirumūlar as the result of contemplation. Of the 2· stanzas, one stanza, viz., the first alone is found in the printed edition of Tirumandiram of Tirumūlar; the other stanzas are not found therein.

Complete.

Beginning:

நாட்டமிரண்டும் நடுமூக்கில்வைத்திட
வர்ட்டமுமில்லை மனக்குமழிவில்லை
யோட்டமுமில்லை யுணர்வில்லைத்தா[நி](னி)ல்லை
தேட்டமுமில்லை சிவ[நி](னி)வனுமே. (க)

நாமே கண்(ண்)[டெ]ரண்டு நாசிநு[னி](னி)வைத்துப்
போமேயறிவைப்புரு(ை)ம[ய்]யந் தாபித்து
ஓமேயிருக்க வுலகெல்லாந் தன்னுள்ளாந்
தாமேசிவமல்லால் தனித்தசிவமில்லையே. (உ)

End:

வைத்த திருவடிவாழு மென்னுச்சிமேல்
நித்தலுமங்கே நி[ன](னே)வைக்கொளுவிட(ச்)
சித்தந்தெ(ழி)[ளி]ந்து சிவமயமாய்நின்றங்
கத்தனை(க)கண்டேனுங் காரமாண்டு[டு](ட)தே. (உஎ)

ஆங்காரமாண்[டு](ட)து புத்திமனமொன்ருய்(ச்)
சாங்காலநாய்வீட்டில் சடைக்குற்றெறும்புபோல்
ஓங்கார மூலம்விட்டுச்சியினுட்கொண்டு
நீங்காமற்கொண்டுநிற்[க்]கும் நயனமே. (உஅ)

Colophon:

திருமூலர்தியானக்குறிப்பு திருமந்திர முற்றும்.

(கு-பு.) —

இந்நூலுக்கு, திருமூலநாயனார் தியானக்குறிப்பு என்று பெயரிடப்பட்டுள்ளது. ஆயினும் இதன முதலிலுள்ள நாட்டமிரண்டு மென்னும் செய்யுள் ஒன்றே திருமந்திரத்தில் (அச்சிட்டநூலில்) காணப்படுகிறது. மற்றை இருபத்தேழு செய்யுட்களும் காணப்படவில்லை. ஆயினும் செய்யுளை நன்கு ஆராய்ந்தால் திருமூலநாயனார் வாக்கென்றே சொல்லவிடமுண்டு. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது

No. 1801. நெல்லைக்குமாரசுவாமிதோத்திரம்.
NELLAIKKUMĀRASUVĀMITŌTTIRAM.

Pages, 10. Lines, 7 on a page.

Begins on fol. 94*a* of the MS. described under No. 83.

A eulogy on Nellaikkumārasuvāmi, a Śaivā Guru who presided over the Iśāna Mutt (attached to Tiruvāvaduturai Mutt) in Tinnevelly. The name of the author is not given.

Complete in 13 stanzas.

Beginning:

சீர்தங்கு நின்னடித் தொழும்புசெய் தகண்டமாய்ச்
செறிந்தபர வெளியி னூடு
தெ[வு](வி)ட்டாத பேரின்பம் வாய்மடுத் தருந்தியே
தேக்கிட் டிருக்குமடியார்
ஏர்தங்கு செல்வக் குழாத்தோ டிருந்துநா
னிருவினைக் கட்ட றுத்து
னேகாந்த ஞானநி ராலம்ப வாரியை
யினிதுண் டிருப்ப தென்றோ
வார்தங்கு கொங்கை கௌ[வு]சிமுன் பசுவான
வடி வந் தவிர்த்தணைத்த
மாசிலா மணியெங்கண் ஞானதே சிகனுறை[ர](ற)யு
மருமலர்ச் சோலைவேலி
நீர்தங்கு கழனிசூ ழாவடு துறைக்குள்வளர்
நெல்லைக் குமாரசுவாமி
நித்தபரி பூரண வகண்டவடி வாய்நின்ற
நி[ற](ன்)மலா நந்தகுருவே. (க)

End:

உன்பெருங் கருணையை மறந்துமல மயமாகி
யொளியிழந் தறிவுமாழ்கி
யுமிழுமு நெல்லெனக் கனிம்புதோய் செம்பென்ன
வுவருடை பளக்க ரென்ன
வன்பெரும் பாந்தள்வாய் மணியெனத் தீயுண்ட
வல்லிரும் பென்ன நாளு
மறைவுண்ட வென்னையுங் கருணையாற் சகலத்தில்
வருவித்து வினைவயத்தால்
இன்பதுன் பங்களைத் துய்ப்பித்து மலபாக
மெய்துமா றறிந்து குருவா
யெழுந்தருளி வந்துதிரு வடிசூட்டி ஞானநிலை
யிதுவென்று காட்டியாண்ட
நின்பெருங் கருணையினை யென்னென்று சொல்லுகேன்
நெல்லைக் குமாரசுவாமி
நித்தபரி பூரண வகண்டவடி வாய்நின்ற
நி[ற](ன்) மலா நந்தகுருவே. (ய)

மருண்மூடிக் கதியிழந்து ச[ம]யநூலின்
வழிபிதற்றித் திரிந்துழலு முயிர்களெல்லா
மிருணீங்கிக் கண்விழிப்பச்சைவ வாய்மை
யெழில்பெருகத் தென்றுறைசை நமச்சிவாயன்

பொருணீடும் புகழ்விளங்கப்புலவர் போற்ற(ப்)
பூவுலகி லவதரித்த ஞானபானு
தெருணீடும் புகழ்நெல்லைக் குமாரசுவாமி
செய்யதளிர்(ச்) சீறடியென்சிரமேற் கொள்வாம். (க)

*   *   *   *

செங்கனிவாய்க் குறுங்கையு நதிருமுகமண்
டலத்தழகுஞ் சிவந்த தாளும்
பொங்கியருள் பழுத்தனைய நயமொழியுஞ்
சிவவேடப் பொலிவு மாகி(க்)
கொங்கலர்பூம் பொழில்புடைசூழ் துறைசைநகர்
வருநெல்லைக் குமாரசுவாமி
மங்கலமா யிருந்தருளுந் திருக்கோல
மறந்தாலு மறக்கொணுதே. (௩)

குருவே துணை.

(கு-பு.)—

இந்நூல் 'நெல்லைக் குமாரசுவாமி' என்பவரது தோத்திரரூபமாக அமைந்தது. 'நெல்லைக்குமாரசுவாமி, நித்தபரிபூரண வகண்டவடிவாய் நின்ற நின்மலானந்த குருவே' என்பதை மகுடமாக உடைய பத்துப் பாடல்களும், வேறு மூன்று பாடல்களுமாகிய பதின்மூன்று பாடல்களாலாகியது. இவர் திருநெல்வேலியில் (திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த) ஈசானமடத்தில் இருந்தவரென்று தெரிகிறது. இந்நூலாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

No. 1802 பல தேவர்கள் துதி.
PALA DĒVARKAḺ TUDI.

Pages, 7. Lines, 10 on a page.

Begins on fol. 74*a* of the MS. described under No. 270.

Contains 10 stanzas.

A eulogy on Dakṣiṇāmūrti, Tirumūladēvar and Subrahmaṇya.

The work may more appropriately be called Mūvartudi.

Beginning :

மணிகண்டா நின்னை மருவடியேன் பாசப்
பிணிகண்டா வாவென்று பேராய்—நணிநின்ற
பூரண னென்னுமம் பொருந்தாதவைக் குளவாம்
பேரறிவும் போமே பிரிந்து. (க)

End :

பணிகைக்குக் கங்கணமாக்கொண்ட சங்கரன் பாலுதித்தோன்
றணிக்கைக்கு நாயகனுகிய சண்முகன்றன்னை நெஞ்சே
யெணிகைக்குவித்திரந் தேத்திநின்றாடி யிறைஞ் சுவையேல்
மணிகைக்கு வந்ததெனக்காட்டும் பேரின்பை வாழ்குதுமே. (ம)

(கு-பு.)—

இந்நூல், தக்ஷிணுமூர்த்தி, திருமூலதேவர், சண்முகன் ஆகிய மூவர்களின் தோத்திர ரூபமான பத்துப் பாடல்களையுடையது. பலதேவர்துதி யென்றதை மூவர் துதி யென்றலே பொருத்தமாகவுள்ளது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

No. 1803. பாலையானந்தசுவாமிகள்ஞானக்கும்மி.

PĀLAYĀNANDASVĀMIGAḶJÑĀNAKKUMMI.

Pages, 53. Lines, 7 on a page.

Begins on fol. 30*a* of the MS. described under No. 250.

Complete in 185 stanzas.

Kummi songs of a philosophical nature. The name of the author appears to be Pālayānandasvāmi.

Beginning:

பாலையானந்த சுவாமியார் ஞானக்கும்மி பாடல்.
சீர்மேவு ஞானவடிவான பரதேசிகன் சற்குரு தன்னருளால்
பார்மீதில் ஞானக்கும்மிபாட(ச்) சிவபாலன் கணபதி காப்பாமே. (க)
அம்பிகைவாலை பதம்போற்றி யருளானந்தக் கும்மித் தமிழ்பாட(த்)
தும்பிமுகனுக் கிளையவனுஞ் சிவசுப்பிரமணியனுங் காப்பாமே (உ)
நாலாபேதமு மோராறும் வெகு[ஞ](நா)னுபேதமு நின்றுனை
மேலாய் போற்றி(க்) கு(ம்)மிப்பாட(ச்) செந்தில்வேலவர் தன்பதங்
[காப்பாமே (ங)
தாரிலுயர் மதுராபுரியில் வாலைதாசன் சொலுங்கும் மிப்பாடலுக்கு
மேருவதனடி மூலமுக்கோண விநாயகனார் பதங் காப்பாமே (ச)
ஆதியுமந்தமு மொன்றாகி வளரண்ட பிண்டமுமிரண்டாகிச்
சாதிபலபலவேறாகி நின்ற தத்துவங்கேளடி ஞானப்பெண்ணே (ரு)
தேகமானமலப் பாண்டமதில் சிற்பரம்வந்திடு முற்பனத்தை
யோகமென்றுந் தமி[ள்](ழ்)ப்பாடமன முகந்து கேளடி ஞானப்பெண்
[ணே (சா)
வகவெளிப்பெரும் பட்டணமாமதிலேதோ சித்தனொருவனுண்டாம்.

End:

சொல்லினுங்கல்லினு நில்லாதே பிரமஞ் சோதியை யாதியை(த்)தூ[ய்]
[வெளியை
வல்லமைதத[ற்ப்](த்)பிரகாசமவுனத்தின் வகையறிந்து[க்]கொள் ஞானப்பெ
[ண்ணே (ாஅரு)
அறிந்து[க்]கொண்ட பெரியோர்கள் பதம[ற்](ர்ச்)சனை செய்து[க்]கும்மித்த
[மிழைப்
பிறிந்திடாமல்[ஞூத்தெ](நூற்றெ)ண்பத்தைஞ்சு கண்ணி பேசினை சற்குரு
[தான்வாழி (ாஅரு)
சற்குருபாதமிகவாழி வாலை சுவாமிதமிழ் நிதந்தான்வாழி
நற்குண ஞானக்கும்மித்தமிழ்க[த்த](ற்ற)வர்ஞான நெறி[யை](யும்) மிக
[வாழி (ாஅசு)

(கு-பு.)—

இந்நூல் வேதாந்த விஷயமானது. கும்மியென்னு மொருவகையிசைப் பாட்டாலாயது. ஆசிரியர் பாலையாநந்தசுவாமிகள் எனத் தெரிகிறது. 185 கண்ணிகளையுடையது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

No. 1804. மச்சேந்திரய்யர்ஞானக்கலிப்பா.

MACCĒNDIRAIYARÑĀNAKKALIPPĀ.

Pages, 15. Lines, 8 on a page.

Begins on fol. 156a of the MS. described under No. 250.

Complete in 20 stanzas.

Similar to the work described under No. 1795 ante; the author appears to be Maccēndrar.

Beginning:

நெட்டுக்கொண்ட சடத்துக்குள்ளாரென்று
    நின்றவன்னி ரவிசோம(நெ)(னெ)ன்றல்லவோ
கட்டிக்கொண்டடி வாயுவைப்பூரித்து(க்)
    கலங்கிநின்று தவிப்பாருலகத்தோர்
பட்டு(ப்)பட்டுத் தி[ரு](ரி)ந்தாலுமென்பலன்
    பா[ற்](ர்)க்கப பா[ற்](ர்)க்கமனமானமாய்கையால்
தெட்டுப் பண்ணி மயக்குந் திரோதகை
    [சி](செ)கத்துக்காலயஞ்சிந்தையில் கண்டியே   (க)

சிந்தைகூர்ந்து திரோதாயிமாயத்தைச்
    சே(ர்)ந்தறிந்து செகமித்தையென்று நீ.
தந்தைதாயையறிந்தே புருமய்யச்
    சார்வில்நின்று நீசாதகமாய்ச் சென்று
விந்தையான குருபதமேல் நின்று
    வீட்டில்வன்னிரவி சோமன்கூடிய
மந்தைவீதியில் சொலிக்குஞ்சிகாமணி
    மருவுங்கேசரி கண்டு கொள்மா[ற்](ர்க்)கமே.   (உ)

End:

[யி](இ ல்லையில்லையிறப்பும் பிறப்புந்தா
    னேதிஞலிப்படியாச்சு தென்[ரு](ற)க்கால்
அல்லையென்ற திரோதாயிமாயத்தை
    யக[த்தி](ற்றி)நின்று அதீதமவுனத்தில்
எல்லைகண்டு இருந்திடங்கேசரி
    யெளிசுவார்த்தை தா[ன்]யேத்த[(னேற்ற)]ங்கடினங்காண்
இல்லையெல்லைப் டதிதாண்டி நினறது
    சென்றபேர்க்கு இறப்ப[த்த](ற்று)நின்றதே.   (உ0)

(த-பு.)—

இந்நூல் வேதாந்த விஷயமானது. கேசரி முதலிய முத்திரையுடன் யோகஞ் செய்யில் முத்தியடையலாமென்று கூறுவது. இயற்றியவர் மச்சேந்திரர் என்று இந்நூலின் தலைப்பில் குறிப்பிடப்பட்டதன்றி வேறு ஒன்றிலும் விளங்கவில்லை. இந்தப் பிரதியில் இருபது பாடல்கள் உள்ளன.

No. 1805. மார்க்கசகாயர் துதி.

MĀRGASAHĀYARTUDI.

Pages, 10. Lines, 6 on a page.

Begins on fol. 4*a* of the MS. described under No. 1294.

Complete.

A eulogy in 11 stanzas on Mārgasahāyar a Śaiva guru, who lived in Virinchipuram. The composition seems good and the name of the author is not given. At the end there are a few words of a stanza which cannot be completely identified.

Beginning:

பதிபசு பாசமூன் றும் பரவு சீரடியார்க்கெல்லாம்
விதிவிதியாகக்காட்டி மெத்தவச்சிவா னுபோகக்
கதிதரவேண்டிப்பாரிற் கருணையோர் வடிவாய்வந்த
சதுரனே வி[ரு](ரி)ஞ்சை மார்க்கசகாய சற்குருவே போற்றி. (க)

ஐந்துமாமுகமுநீத்[து அ](தே)யங்கைமாமழுவுநீத்துக்
கந்தரக்கடுவு நீத்துக்கயிலைமால் வரையுநீத்துப்
பந்தபாசங்கள் நீக்கப்பரன் குருவடிவாய்வந்த
சந்ததம்விரிஞ்சை மார்க்கசகாய சற்குருவே போற்றி. (உ)

End:

உருவெடுத்தின்னுள் தொட்டு முழன்றிடுமடியர்க்கன்பாய்த்
திருவருட்கருணைசெய்தே செவியில் மந்திரநவின்று
பரவுமைங்கலைகள் சுத்திபண்ணி மெய்ப்படிவங்காட்டிச்
சரணந்தந்தாளு மார்க்கசகாய சற்குருவே போற்றி. (யக)

சீர்பெற்ற வடியவர்கள் முகவனசமலர்வித்துத் திரோதையந்திமிர நீக்கிச் சிற்சமையமென்கின்ற கூகைகூட(டை)யவரு நிகழ்ஞானபானுவாகி

ஏர்பெற்ற நால்வேத வாறங்கமுபநிடத மினியசிவ சைவாகம மெண்கலைத் திரள்களுந் தெரிந்துதத்துவவிதமீ தெனக்கண்டு கொண்டே

பேர்பெற்ற சுத்த சித்தாந்த பரிபூரணப் பேரின்பவாரி யதனைப் பேசியடியார்களுக் கங்கையா[கமல](மலக)மெனப் பிரியாது காட்டிநிதமும்

சீர்பெற்ற வனதானஞ் . . . .

* * * *

குறிப்பு)—

இது விரிஞ்சிபுரத்திலிருந்த சைவகுருவாகிய மார்க்கசகாயரென்பவர் விஷயமானது. பதினொரு பாடல்களாலாயது. செய்யுட்கள் நல்ல நடையுடையன. இயற்றியவரின்னாரெனத் தெரியவில்லை.

இந்நூலின் பின்னர்க்குறிக்கப்பட்டுள்ள "சீர்பெற்ற" என்ற செய்யுளும் அன்னோர் விஷயமானதென்றே தோற்றுகிறது. அபூர்த்தியாயிருக்கின்றமையிற் றுணியக்கூடவில்லை.

No. 1806. மாணிக்கசுவாமி வெண்பா.
MAṆIKKASVĀMI VEṆBĀ.

Substance, palm leaf. Size, 8¾ × 1½ inches. Pages, 20. Lines, 9 on page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Complete

A treatise on Śaiva religion by Māṇikkasvāmi. It lays down that salvation is attainable only through spiritual knowledge and in no other way.

Beginning:

தன்னை யறிவித்தான் தானேதா னைபிரான்
என்னை யறிய வியம்புவித்தான்—பின்னை யொரு
தேவாரங் கண்டிலேன் தென்னன் பெருந்துறையான்
லாவாவென் றுண்டவமக்கு(?) (க)
மெய்க்குருவைத் தேடும் வெறித்த வெளிகாட்டும்
பொய்க்குருவைத் தேடிநீ போகாதே—நெய்க்குருகு
நாணுமல் நாடுங்கால் நடுவெளியிலேநிற்கும்
தோணுமற் கோணுங் குறி. (உ)
நானிருந்த வா[ள](ழ்)மனையை நாள[ழ](டை)வேலைக்கொண்
தானிருந்த பா[ள்](ழ்)மனையைத் தானீ[ய்]ந்தான்—ஊனில் [டான்
கடுத்துக் கொதித்தெழுந்து கால் மண்டையைக்(?)
கொடுத்தப் பா(ர்)ப்பான (ங்)குரு. (ங)
என்றுன் செனன மெடுத்தீ ரெடுத்தக்கால்
வான்காணு மீசனையே வாழ்த்துகிலீர்—ஊன்காயந்
தோடும் பொருளை யுணர்கிலீ ரோரெழுத்தைத்
தேடும் பிறவியிற் சென்று. (ச)
ஆரா ரடுக்கு(?)மன்பத்தோ ரட்சரமும்
போராகச் செய்யும் பெருந்தவமே—கூறாய் (?)
ஏகவெளி யாய் நிற்கு(?)மிதய கம லத்[தே](திலே)
ஆகமுமா மஞ்செழுத்து மாம். (ரு)

End:

நானென்றும் நீயென்றும் நாடின தொன்றொன்றும்
ஏனென்ற தொன்று மியம்பக்கேள்—தானின்று
சொல்லுறது மாகிச் சுகமு மவனாகிப்
பல்விதங்க ளாகும் பரம். (௱௰க)
அண்டரண் டங்க[ளுக்கு] ட்கணுவாகி நின்றபிரான்
தொண்டரெவர்க்குஞ் சுகமாகிக்—கண்டுக்கோ
அந்தக் கரண மடக்கி யதின் மூழ்கி(ப்)
பந்தம் பிரிந்திருப்பார் பார். (௱உ௰)
மாத்திரனா மாணிக்கவாசகனா ரன்பர்கெதி
எத்திவெண்பா [னூத்தி](நூற்றி)ருப துமே—போற்றினோர்
நாலாம் பதம்பெறுவர் ஞானகுரு தானவனுன்
மேலாம் பதம் பிறவி மெய். (கஉக)

Colophon:

மாணிக்கசுவாமி வெண்பா எழுதி முற்றும். செய௵ ஆனிமீ௴ ௰௫௨ சுக்கிரவார நாள் எழுதினது. சுப்பராயன்.

(கு-பு.)—

இது சைவசமயத்தைச் சார்ந்தது. மாணிக்கசுவாமி என்ற பெயருள்ள ஒருவர் இயற்றினதாகத் தெரிகிறது. ஞானத்தாலன்றி சரியை முதலிய மூன்றாலும் மோட்சமடைய முடியாதென்பதை விளங்கக் கூறுவது. இவ்வெண்பாக்களில் சிற்சில விடத்துத் தளைதட்டுகின்றது. இந்தப் பிரதியில் இது பூர்த்தியாக உள்ளது.

No. 1807. மாணிக்கவாசகர் ஞானத்தாழிசை.
MĀṆIKKAVĀCAKAR ÑĀNATTAḺIŚAI.

Pages, 8. Lines, 8, 9 on a page.

Begins on Fol. 57*a* of the MS. described under No. 1214.

Same work as that described under R. No. 280(*h*/1) of the Triennial Catalogue of MSS., Vol. II, Part 2.

(கு-பு.)—

இந்நூல் மூவருடத்திய காட்லாக் 280 (h/1) நம்பரில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

No. 1808. மாணிக்கவாசகர் ஞானத்தாழிசை.
MĀṆIKKAVĀCAKAR ÑĀNATTAḺIŚAI.

Substance, palm leaf. Size $9\frac{7}{8} \times 1\frac{1}{8}$ inches. Pages 4. Lines, 6, 7 on a page. Character, Tamil. Condition, fair. Appearance old.

Begins on Fol. 4*a*. The other work herein is Ahattiyar Bōdakam 1*a*.

Contains the first five stanzas.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இதில் முதல் 5 செய்யுட்களே உள்ளன.

No. 1809. மாணிக்கவாசகர் பதம்.
MĀṆIKKAVĀCAKAR PADAM.

Pages, 7. Lines, 6 on a page.

Begins on Fol. 188*a* of the MS. described under No. 802.

A note is made in the beginning of this Manuscript to the effect that the work is by Māṇikkavācakar, though the style of the composition does not warrant such a statement. The work is of inferior order and is philosophical in nature.

Beginning :

மாணிக்கவாசக[ா]ர் பாடின பதம்.

சிவன் துணை.

மனங்கலங்க(க்) கப்பல்[த்] திசைதப்பிப் போகாமல் வைத்துப் பிடித்திடுவ [கோன்

கரையோரம் வைத்துப் பிடித்திடுங்கள்

உங்க[ள்ளெ](ளெ)ண் கலத்தினிக[ளு](மு)மக[ா]ர[ா]ஞ் சேராமல்

எமக்கள்ளக் கப்பற்கா[ற](ர)ன் போ[ரு](ரா)டாமல்

End :

மாவிளங் கனிய[முற்](மிர்)தமாரித்துளிகள் சொரியுமே

மாணிக்கமான வேல்[ப்]போலொருகைதான் ஒருகையாய்த்தெரியுமே

கூவிளவந்தேனெ[ங்](ண)குமே ய[முற்](மிர்த)க்

குமி[ளி](ழி)[ச்]கொண்டுகொண்[டியோ]டோங்குமேமனஞ்

சேவித்தாரிடத்தவரு(?)மே சின்னக்

குழந்தைவேலைப்போலெகுமிருக்குமே

அருண்மூலிகையொன்று காட்டிலிதா[ற](ரே)ன்ஙொரும்

அடியார்க்கெல்லாம் நல்லவயித்தியமே.

(கு-பு.)—

இந்நூலின் தலைப்பில் "மாணிககவாசகர் பாடிய பதம்"—எனக் குறிக்கப்பட்டிருப்பினும், இது மாணிக்கவாசகர் வாக்கென்று தோற்றவில்லை. எளிய நடையாயிருத்தலோடு பிழைகளும் பொதிந்துள்ளன. இது இசைப் பாட்டுக்களுள் ஒன்றான கீர்த்தனை வகையிற் சேர்ந்தது. வேதாந்த விஷயமானது.

No. 1810. மாணிக்கவாசகர் பாடல்.

MĀṆIKKAVĀCAKAR PĀḌAL.

Page, 9. Lines, 5, 6 on a page.

Begins on Fol. 153*a* of the MS. described under No. 802.

Contains 15 stanzas.

A eulogy on God Śiva. Although a note in the beginning atributes the work to Māṇikkavācakar, the style of the composition does not warrant such a statement.

Beginning:

மாணிக்கவாசகர் பாடல்.

காயாமரத்தின் கனியாகி(க்) கனியிற்[க்] கொட்டையுள்ளாகி(த்)
தாயாயீரேழுலகுக்குந் தந்தையுமான த[ாய்](யா)பரனே
[அ](ஆ)யாமரை[ணு](னு)ஃதனை வகுத்தவரனே யுன்றனடைக்கலங்காண்
பேயாவெங்கள் பெருமானே பித்தாவென்னையாளாயே. (க)

End:

நெருப்போவு[ந்த](ன்ற)ன் றிருமேனி
நீறே[ர](ற)பூசித் திரிவதெல்லாம்
பொருப்போவு[ந்த](ன்ற)னிருப்பிடந்தான்
புவியீரேழு புவனமெல்லாந்
தருப்போல்கிளைத்த(த்) தழைத்துநின்றேன்
சகலசிவத்துருவுள்ளா[ற்]?
இருப்போவென்று வெளைக்கா[ற்]க்க[யீ]
வீசாவென்னையாளாயோ. (௰௪)

சமைத்த சடலத்தை மெய்யென்று
சாகப்பயந்து தடுமாறி
யி(ை)மத்துவிழித்து[யி](வி)ருப்போனே
யென்னை[யி](வி)(ை)டஞ்சலு[த்தோ](ற்றோ)னே
சுமத்தெண்டெறைக்களமான(?)கனி
தேன் சூலா[யி](ய்)(?)தனேயாலமுண்ட
அ(ை)மத்தாயெ[ந்தன](ன்ற)னங்கய[க்](ற்)கண்
ணம்மாவு[ந்க](ன்ற)னடைக்கலங்காண். (௰௫)

(கு-பு)—

இது மாணிக்கவாசகர் பாடலென நூலின்முதலிற் குறிக்கப்பட்டிருக்கினும் அவர் வாக்கென்று சொல்லவிடமில்லை. எளிய நடையாயும் பிழை பொதிந்து மிருப்பதால் வேறொருவரால் பாடப்பட்டிருத்தல் வேண்டும். இப்பாடல்கள் பதினைந்தும் சிவபிரானுடைய தோத்திரரூபமாகவமைந்துள்ளன.

No. 1811. மூவரம்மானை.

MŪVARAMMĀNAI.

Pages, 49, Lines, 6 on a page.

Begins on Fol. 80*a* of the MS. described under No. 1125.

Complete.

A work containing stanzas in praise of God Viṣṇu, Vināyaka Śiva, Muruhakkaḍavuḷ and Pārvati. The work is however styled Mūvarammānai, both in the beginning and end. The first stanza of this work is found also in some other works.

Beginning:

காப்பு.

வேகமாய் நெறிசேரும் வினைகளும்
தாகபோகம் விடாத தளர்ச்சியுந்
சோகவாரியிலுள் வருந் துன்பமும்
போகயானை முகத்தனைப் போற்றுவாம்.

புத்திவணங்குழும் பொருவில்லாப் பிள்ளையார்
தந்திமுகன் குடவயி[ற்]றன் சப்பாணியம்மானை
தந்திமுகன்குடவயி[ற்]றன் சப்பாணியாமாகில்
இந்தவயிற்றுக்கிரையெங்கேயம்மானை
இன்றென்றேயீசனிரக்கவுற்றானம்மானை. (க)

தெள்ளுதமிழ்பெருகுந் திருமுட்டத்தெம்பெருமா
னுள்ளதிலமெல்லா முழுதுண்டானம்மானை
உள்ளதிலமெல்லா முழுதுண்டானாமாகில்
[கள்ளன்]கள்ளனிவனென்று கட்டுவதென்னம்மானை
கட்டாரோயோரிற் கதிரொளித்தாலம்மானை. (உ)

திருச்சிரமாபுரவீசன் செட்டிமகட்காய்வேடந்
[துரு]'தரி)த்துமருத்துவத்தின் றுயானாம்மானை
தரித்துமருத்துவத்தின் றுயானாமாகில்
மருத்தெண்ணெய்ச்சிக்கன் திமணமிவர்க்கேதம்மானை
மட்டுவார்குழலிருக்க மணமரிதேராலம்மானை. (ங)

End:

சற்குருவிஞ்சனத்திற் சரியாகவேயிருந்து
தர்க்கமிடுமூடருக்குத் தவம்வருமோவம்மானை
தர்க்கமிடுமூடருக்குத் தவம்வருமேயாமாகில்
இப்புவியிலேநரக மெய்துவதேனம்மானை
எழுநரகில் வீழேயிருந்தார்காணம்மானை. (கச)

அந்தப் பசும்பொற்கிரி வாழாதிசத்தி நாதரவர்
வந்தபுலித்தோலுரித்த வல்லாளரம்மானை
வந்தபுலித்தோலுரித்தவல்லாளராமாகி
விந்தமலைமேலிருப்பதென் [ன](னையோ)வம்மானை
இருந்தார் மலையின்மகளின்பத்தாலம்மானை. (கரு)

Colophon:

மூவரம்மானை முற்றிற்று.

(ரு-பு.)—

இது சிவபெருமான், விநாயகர், முருகக்கடவுள், திருமால், அம்பிகை ஆகிய இவர்கள் விஷயமான நூல். இதை இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை, இந்தப்பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது. நூலின் தலைப்பிலும், இறுதியிலும் 'மூவரம்மானை' என்று இதற்குப் பெயர் குறிக்கப்பட்டிருப்பினும், இது மேற்குறித்த ஐவர் விஷயமாகவுள்ளது. இதன் முதலிலுள்ள "வேகமாய்நெறி" என்னுங் காப்புச்செய்யுள் வேறு நூல்களில் காணப்படுகிறது.

No. 1812. மூவரம்மானை.
MŪVARAMMĀNAI.

Pages, 15. Lines, 5 on a page

Begins on Fol. 1*a* of the MS. described under No. 1719.

Incomplete.

Same work as that described above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இதில் 39 செய்யுட்களே உள. இவற்றின் பின் 2 ஏடுகளில் இந்நூலின் செய்யுட்களிற் சில, தொடர்பில்லாமல் எழுதப் பட்டுள்ளன. இடையே ஒரு பக்கம் எழுதாதுவிடப்பட்டிருத்தலின் 24—72 வரை உள்ள 4 பாடல்களும் இதில் இல்லை. பிரதி சிதிலமாகவிருக்கிறது.

No. 1813. மெய்ச்சுருக்கம் ஐம்பது.
MEICCURUKKAM AIMBADU.

Pages, 46. Lines, 7 on a page.

Begins on Fol. 184*a* of the MS. described under No. 250.

Complete.

Fifty-one stanzas of a philosophical nature. The work is attributed to Dakṣiṇāmūrti.

Beginning :

[தெ]த[ஷ்](ட்)சணாமூர்த்தியாரருளிச்செய்த
மெய்ச்சுருக்கம் [அன்] (ஐம்)பது.

குறுமுனியென் நந்தி குருபாத மு[ளக்](ட்)கொண்
டுறுதிபெற மெய்ச்சுருக்க மோதக்—குறுமுனியைக்
கொண்டாடிக் கொண்[டருளிக்](டு) குறிப்பறிந்து முப்பொருளைக்
கண்டார்க்குப் பூரணமே காப்பு.

அண்டமுதல் பிண்டமென்ற தெட்டினாலே
யாத்தானுமப்பனு(ம்)மெரண் டெட்டினாலே,
கண்டதொழிலாடுவது மெட்டினாலே
கனகாண வாட்டமெல்லா மெட்டினாலே,
தொண்டுசெயும் வழிமுறைக[ள்]ளெட்டினாலே
சொல்லாத வுபதேச மெட்டினாலே,
பண்டுறுதி விதியமைப்பு மெட்டினாலே
பாரமாய் வெளியான தெட்டுந்தானே. (க)

எட்[டு ரெ](டிர)ண்டுங் கூட்டியல்லோ வயசு பத்தா
யிருந்தாளே யென்னுத்தாளழியாக் கன்னி,
கட்டழகியவள் வயசுபத்துக்குள்ளே
கற்பகம்போ லெனையீன்றானந் தவேளை,
திட்டமுடன் யான்பிறந்தேன் ராசிகன்னி
சிவசிவா ந[ஷ்ஷ](ட்ச)த்திரஞ் சோதிசோதி,
விட்டகுறைபூருவ மாந்[தி](த)சமி நாளில்
மெய்யான காரணனு மையன்பேரே. (உ)

End:

அறியலாம் பரப்பிரம சத்திரூப
மானந்தமறியமு[ற்](ர்)த பதியுந்தோ[ண](ன்ற),
அறியலாதே[ய](ம)கதி ராமயத்தின் சூ[ஷ்ச](க்ஷ்ம)
மப்பாலுமப்பாமுக்கப்பால் நீயுங்,
குறியலாம் நி[ற்](ர்க)குணத்தின் குறியைக் காணக்
குறியறிய(ச்) சற்குணமா யுலகத்தோரே,
யறியலா மவரவர்கள் பேதாபேத
மறிந்த குருவுபதேச மருளுவாரே. (௯0)

அருளானவருள் பெறவுங்குருவு மாவாய்
அட்டசித்தும் புரியட்டமெட்டிற் காண(ப்),
பொ[ரு](ரு)ளானதொன்றுக்கு ளெட்[டெட்]டே யாடி(ப்)
போக்குவரத்துள் சூட்[ச](சும)மா(ய்)ச்சி பாதம்,
பொருளானதகுகண்டு காட்சி கண்டு
பொய்யாமல் மெய்ச்சுருக்க மையன் சொன்ன,
பொருளான பொருள்பெறவுமருளும் பெ[த்த](ற்ற)
போதறிவாயிருப்பார்கள் மெய்ச் சுருக்கமுறறே. (௯0க)

(கு-பு.)—

இந்நூல் ஞானவிஷயமானது. தட்சிணாமூர்த்தியியற்றியதாகக் கூறப்படுகிறது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

No. 1814. சச்சிதானந்தமாலை.

SACCIDĀNANDAMĀLAI.

Pages 36. Lines, 5 on a page.

Begins on fol. 129 *a* of the MS. described under No. 802.

Complete.

A treatise extolling the greatness of Śiva conceived of as Sat, Cit and Ānanda. The work is written after the model of the stanzas of Tāyumānavar but the author is not known.

Beginning:

சச்[சு](சி)தானந்தம்.

கடகரியோன் திருத்தாளே(க்) கருணைதர(த்)துதிசெய்து
விகடதடவியனுலகில் விளம்புவதற்கினிதான
சகடநெடுமால்மருகன் தகுதிமிகுவிநாயகனே
விகடமிலாமலேதுதிக்க வேறுவினையகலுந்தானே. (க)

முச்சுடராகியொன்றாய் மூலத்திடுஞ்சோதிபாத
மச்சுதனயனுங்காணு வகண்டமாயளவிலாத
சச்[சு](சி)தானந்தமான சற்குருபரனைப்பாட
மெ(ய்)ச்சுடருதயமான மேன்மையையுண்மைசெய்வாம். (உ)

கண்ணினில்மணியாய்நின்ற காரணகுருவைப்போ[த்தி](ற்றி)
வி[ன்றி](ண்ணி)னிலொளியே பார்த்துமெ(ய்க்)[யி]குருபரனைப்பாட
ம[ன்றினி](ண்ணி)னில்யார்க்கு ஞானவழிதனையுணர்ந்தோர்க்கெல்லா
மொன்றினிலொன்றாய்நின்ற வுண்மையையுணர்ந்துபாரீர். (ரு)

(வேறு).

முத்தமாநின்றபர[ஞ](நா)தவொலிகீதமது
முச்சந்திவீதிநடுவில்
மும்மலமகற்றியொரு நி[ற்](ன்)மலசொரூபமாய்
முச்சுடரினுச்சிமுகப்பில்,
உத்தமர்தெரிபரிசுத்தமா வஷ்டதிசை
யூடாடிவெட்டவெளியி
லொளியாகிவிரிசுட[ரு](ரி)னுதையகிரியணையிலே
யொருநாலுமிருநாலுடன்,
நித்தமாய்நின்றபரிபூரணசதாசிவ
நிலைகொண்டசோதிமயமே
நின்மகிமைகண்டுளே தெண்டனிடுதொண்டர்தம்
நினைவுசற்றயராதவா,
சத்தமாநின்றமணிரத்நமுடிமகுடமே
தரவேணுமிதுசமயமே
தர்பராநந்தசபை நிஷ்களாநந்தசிவ
சச்சிதானந்தகுருவே. (ச)

End:

பரமுமிதுபொருளுமிது வழியுமிதுதெளிவுமிது
பதினாலுலோகமதிலே
பாசவினையாலறிவு மோசமேமோசமிது
பாழறிவு பரமானதே
உரமுமிருகாலொ(ளி)யிரவுபகலின்றியே
(யிஷ்டா)ட்சரமுமதிலே
யொளி(வெளி)யிலொளியாகியிடநிடதநடனமா
வூழிவிதியாளியெனவே
சிரமகுடமுடியிலே கனக மன் . சையிலே
சிவஞானதீபமது பார்
திருமருவுசிவசோதிமதி பெருகுகருவீடு
தெரி[சி](ச)னைகளாகமுடியுஞ்,
சரமுமிதுகதிசேர்வைசகலகலையனுராக
சாயுச்சியப[ா]தமரு[ள்](ளு)வாய்
தற்பராநந்தசபை நிட்களாநந்தசிவ
சச்சிதானந்தகுருவே.

குருசாமி துணை.

(கு-பு.)—

இது சச்சிதானந்தமயமான சிவத்தின் தோத்திரமாகவமைந்துள்ளது இதில் முப்பது பாடல்களேயிருக்கின்றன. இவை, தாயுமானவர் பாடல்க

ளில் போக்கைத் தழுவியிருக்கின்றன. இயற்றியவரின்னாரெனத் தெரியவில்லை.

No. 1815. சச்சிதானந்தமாலை.

SACCIDĀNANDAMĀLAI.

Pages, 34. Lines, 6 on a page.

Begins on fol. 48 *a* of the MS. described under No. 1159.

Complete.

Same work as the above, but without the first stanza therein given.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. அதிலுள்ள கடகரியோனென்று தொடங்குஞ் செய்யுள் இதிலில்லை. முற்றுமுள்ளது.

No. 1816. அகத்தியர் தீட்சை விதி.

AKATTIYAYR DĪKṢAI VIDHI.

Substance, Palm-leaf. Size, 10¼ × 1 inches. Pages 110. Lines, 7 on a page. Character, Tamil. Condition, Fair. Appearance, old.

Begins on fol. 121 *a*. The other works herein are Akattiyarpurāṇasūttiram 1*a*, Akattiyarpūjāvidhi 59 (*a*).

Complete.

Same work as that described under R. No. 9 (*c*) of the Triennial Catalogue of Tamil MSS., Vol. I.

(கு-பு.)—

இந்நூல் மூவருடத்துக்காட்லாக்கின் 9 (*c*) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

No. 1817. அகத்தியர் தீட்சை விதி.

AKATTIYAR DĪKṢAI VIDHI.

Pages, 13, Lines, 6 on a page.

Begins on fol. 80 *a* of the MS. described under No. 1518.

Incomplete.

Same work as that described above.

(கு-பு.)—

இந்தப் பிரதி முன் பிரதியைப் போன்றது. இதில் 1—15 பாடல்களே உள்ளன. ஏடுகள் சிதைந்திருக்கின்றன.

No. 1818. அகத்தியர் தீட்சை விதி.
AKATTIYAR DĪKṢAI VIDHI.

Pages 14. Lines, 6 on a page.

Begins on fol. 92 *a* of the MS. described under No. 1490.

Incomplete.

Same work as the above.

(த-பு.)—

இது முன் பிரதிபோன்றது. முற்றுப்பெறவில்லை.

No. 1819. அகத்தியர் பூஜைவிதி.
AKATTIYAR PŪJAIVIDHI.

Pages, 124. Lines, 6 on a page.

Begins on fol. 59*a* of the MS. described under No. 1816.

Complete.

Same work as that described under R. No. 9 (*b*) of the Triennial Catalogue of Mss , Vol. I, Part II.

(த-பு.)—

இது மூவருடத்துக்காட்லாக்கின் 9 (b) நம்பரில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் இந்நூல் முற்று மிருக்கிறது.

No. 1820. அகத்தியர் யோகம், ஆறு.
AKATTIYAR YŌGAM, ĀṞU.

Substance, Palm-leaf. Size, 9 $\frac{7}{8}$ × 1$\frac{1}{4}$ inches. Pages, 5. Lines, 6 on a page. Character, Tamil. Condition, Fair. Appearance, old.

Begins on fol. 1*a*. The other work herein is Māṇikkavācakar ñānattaḻiśai 4*a*.

Contains only 6 stanzas.

Apparently deals with the realization of the Supreme Being through Yōga. The work is attributed to Akattiyar but there is no authority for it excepting that it is so written in the beginning of the manuscript.

Beginning :

சொல்லு [கு வே] (கிறே)ன் சூ [ஷ்ஷ] (ட்சம)த்தின் மகிமைகேளு
 சுருதிவெளிக் கெட்டாத சூட்சுமமப்பா,
வெல்லுவையோ சொல்வதற்கு விள்ளாய் விள்ளாய்
 வேதாந்தம் சித்தாந்தம் பரனுக்குள்ளே,
அல்லுபகலற்ற மகமேருவுச்சி
 யாதித்தன் சந்திரனின்ற வெளியில் நில்லு,
டல்லுகிறேன் மயிர்ப்பாலுமுண்டு நேராய்
 மறிப்பார்க்கு அகாரநடு கொம்புதானே. (க)

End :

நிலைத்துநின்று சுழிமுனையைக் கட்டி நின்றால்
நேராகத்துவாரத்தின் பளிச்சென்றாற்போ
விலைக் குமட்டாலெரித்தூற்றுந் தங்கம்போல(க்)
கம்பியெழும் பளிச்சென்று பிரகாசம் பொங்கும்,
துலைக்குழியால் நிலைக்குவந்து அமிர்த[ம்] முண்ணுஞ்,
சோதியாம் பராபரத்தின் செயலேதென்றால்,
அலைத்துவிட்டு ஆதியந்தமி[ல்] லாதிடத்தில்
அருந் [து] (தி) நிற்கக்கட்டினன்தனிடந்தான்காணே. (சு)

(கு-பு.)—

இது யோகாநுபவத்தைக்கூறுவது. தனிநூலாகத்தோற்றவில்லை. இதில் ஆறு செய்யுட்களேயுள்ளன. அகத்தியர் செய்ததாக நூலின் முதலிற் குறிக்கப்பட்டுள்ளதைத்தவிர வேறு ஆதாரமொன்றுந் தெரியவில்லை. செய்யுளிற் பிழைகளதிகம்.

No. 1821 கூர்மானந்தர் சூத்திரம், ஐம்பத்தொன்று.
KŪRMĀNANDAR SŪTTIRAM, AIMPATTONṞU.

Substance, Palm-leaf. Size, 10½ × 1¼ inches. Pages, 12. Lines, 7 on a page. Character, Tamil. Condition, Good. Appearance, old.

Begins on fol. 35*a*. The other work herein is Koṅgaṇanāyanār daṇḍakam 1*a*.

Complete.

Same work as that described under R. No. 267 (*o*) of the Triennial Catalogue of Mss., Vol I, Part 2.

கு-பு.)—

இந்நூல் மூவருடத்துக்காட்லாக்கின் 267 (0) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் இது முற்று மிருக்கிறது.

No. 1822. கொங்கணர் வாக்கியம்.
KOṄGAṆAR VĀKKIYAM.

Pages, 22. Lines, 5 on a page.

Begins on fol. 118*a* of the MS. described under No. 802.
Contains 27 stanzas.

A work on the attainment of Jñana (knowledge of the Supreme Brahman) through Yōga. Explains the Pañcākṣara also.

Beginning :

ஒத்து நின்ற ஓ [ம்] (மதுதான்மண்)ணை யுண்ணு(ம்)
உருவியந்த மண்சென்று சலத்தையுண்ணும்,

ப[த்தி] (ற்றி) நின்று சலமதுதான் றீயை யுண்ணும்
பாங்கான தீசென்று காலையுண்ணும்,
வெற்றி நின்ற கால்சென்று விண்ணையுண்ணும்
விழுந்ததப்பா சடமென்றுவேதாந்தம் போச்சு,
முத்திநின்று கூடுவது எந்தக்காலம்
மூடரே மதலைவயுண்டு மேலே பாரீர். (க)

பாரப்பா வகாரமது உகாரத்தைக்கொள்ளும்
பாங்கானவுகாரமது மகாரத்தைக்கொள்ளும்,
நேரப்பா நகாரமது விந்துவைத்தான் கொள்ளும்
நேரான விந்துவது நாதத்தை [த்தான்]க் கொள்ளும்,
சேரப்பா நாதமொத்துச் சத்தியைத்தான் கொள்ளுஞ்
சேர்ந்து நின்ற சத்தியல்லோ சிவத்தைக்கொள்ளும்,
ஆரப்பாசிவன்றன்னை (ப்) பராபரந்தான் கொள்ளும்
பராபரத்தைக் கொண்டவித மறிகிலேனே. (உ)

End:

துறைவிட்டு (ச்) சூடு சுழன்றலைந்து காணுதவா திகோடி,
யறையொட்டி (ப்)பொத்தியதோர் போகிகோடி யம்மம்மா
மறையெட்டி யெட்டாத ஞானத்தோர்க்கு [பூசையில்லா,
மகத்தான சூதர் வித்தை மைந்தா கேளு
குறைபோட்ட விட்டகுறை வந்ததாலுல் கூருனரத்தினமுங் கூடுங்
காணே. (உஎ)

குருவேதுணை.

கொங்கணர்வாக்கியம் முற்றும்.

Colophon:

(௲-பு)—

இது யோகமார்க்கத்தால் ஞானமடையும்முறையையும், பஞ்சாட்சரத்தின் அமைதி முதலியவற்றையுங் கூறுவது. கொங்கணரியற்றியதாக நூலின் முதலிலு மிறுதியிலும் குறிக்கப்பட்டுள்ளது. இதில் இருபத்தேழு பாடல்களே யுள்ளன. நூல்முடிந்ததாகத் தோற்றவில்லை, வைத்திய நூல்கள் பல வியற்றியுள்ள கொங்கணரும் இங்கே குறித்துள்ள கொங்கணரும் ஒருவரோ, அன்றோ வென்பதும், இவர் பதினெண் சித்தருளொருவராவென்பதும் ஆராயத்தக்கன.

No. 1823. சிவயோக தீபிகை.

ŚIVAYŌGADĪPIKAI

Substance, Palm-leaf. Size, $3\frac{3}{4} \times 1\frac{5}{8}$ inches. Pages, 174. Lines, 10,11 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old. Complete.

A rendering in Tamil of the sanskrit work Śivayōgapradīpikā described under No. 4384 and 4385 of the D. C. S. MSS., Vol IX.

Beginning:

சிதம்பரசிவயோக தீபிகையான மூலமந்திரம்.

வெள்ளை வாரணப், பிள்ளையார்பத,
முள்ளுவார்மனக், கள்ளமாறுமே.
ஆனைமுகனுமு முகனம்பிகைபொன்னம்பலவன்
ஞானகுருவாணியையுண்ணுடு.

சிவயோகதீபிகை.

ஸ்ரீசதாசிவயோகீசுவர . . . , . க்கப் பட்டசிவயோக . . . . . ன் கின்ற யோக சாத்தி . . . . . தாயும் சாவதானமாகிற . . . . கிறு, ரதெப்படி யென்னிற் . . . . . . யோகீசுரர்க ளுடைய மனசாகிறது தாமரைப்புட்பத்துக்கு வண்டுபோலவும், காரணத் திரயஙகளுக்குக் காரணமாக . . . . . யமாகியுஞ், சகுணநிர்க் குணமாகி(ற) த(த்)துவ சொரூபமாகியுஞ், செனனமரணங்களில்லாத சதா சிவலிங்க சொருபமாகிய குருவைத்தன் (மனசி)லே ஈசனைப் . . . ணுகி ருமென்று குருவை ந . . . . பண்ணிய . . . சதாசிவ யோகீசுரரானவர் சிவயோக தீபிகை யாகிறகிரந்தத்தை . . . . . னை பண்ணுகிருர். (க)

End:

இந்த சிவயோக தீபிகை . . . . . மகார . . . . மாயிருக்கு மிதை யப்பியசிக்க வயி(ராக்)கியமுண்டானவனு யிந்திரிய நிக்கிரகம்பண்ணி னவனுஞ், சிவனிடத்திலேயுங் குருவினிடத்திலேயு(ம் அசஞ்)சலமான புத் தியுண்டான சற்புருடனுக்குக்[கு] (கொ)டுக்கத்தக்கது.

* * * *

Colophon:

இந்தத் திறமுடைய சிவயோக தீபிகை யென்கிற கிரந்தமான உ௱அ௰எ சுலோகங்களு நாலுவிதச் . . ர்த்தங்களோடே யஞ்சு படலங்க . . . . பட்டதென்று சொல்லி . . . . த . . தாவனுக் கிர கம் பண்ணிறு . . . . ' குருவேதுணை . . . . ப்படி சதாசிவ யோகீ சுரராலே . . . யோக விடையம் . . . . டகவித . . மானவஞ்சாம் படலமுற்றும்.

ஆகப் படலமஞ்சுக்கு, சுலோகம் உ௱அ௰எ.

கச்சியப்பதேசிகனை நச்சியுளம்வைப்பாம்.
சிவஞான தேசிகனைப் பவமா[ற்](றப்)பணிவாம்.

(கு-பு.)—

இது ஸம்ஸ்கிருத டிஸ்க்ரிப்டிவ் காட்லாக் 4384, 4385-ஆம் நம்பர்களில் வந்துள்ள "சிவயோகப்ர தீபிகா" என்பதன் மொழிபெயர்ப்பாகும். இந் நூல் வடமொழியில் ஐந்து படலங்களாலாயது. 280 சுலோகங்களுக்கு மேற கொண்டது. சதாசிவ யோகீசுரர் என்பவராற் செய்யப்பட்டது. தமி ழில் ஒவ்வொரு சுலோகத்தின் பொருளையும் நேரே மொழிபெயர்த்து, ஆங் காங்கு, சுலோகத்தின் எண்ணும் குறிக்கப்பட்டுளது. மொழி பெயர்த்தவ ரின்னுரெனத் தெரியவில்லை. இஃதொரு நல்ல நூல். இந்தப் பிரதி பூர்த்தி யுடையது. மிகச் சிதைவுற்றிருக்கிறது. அச்சிடப்பட்டிருக்கிறது.

No. 1824 சிவயோகம்.
SIVAYŌGAM.

Pages, 10. Lines, 5 on a page.

Begins on fol. 26*a* of the MS. described under 1543.

Deals with Yōga. The name of the author is not known.

Contains only 10 stanzas.

Beginning:

சிவயோகம்.

பாரப்பா பதியளப்ப[யி](வி)[ன்னூ](ந்நூ)ல் வேணும்
பரையோகமென் பதற்கு மவுனம் வேணும்,
காரப்பா சபம்வேணுஞ் சித்திவேணுங்
களங்கமற்ற சற்குருவைக் காணவேணும்,
சாரப்பா சமாதி[கள்] பஞ்ச சமாதிவேணும்
சதிராக நந்தியு(டை)டநாட்டம் வேணும்,
ஆரப்பா வறிவார்கள் ஞான மா[ற்](ர்க்)க
மப்பனே பூரணத்தை ய[புி](ழு)த்திப்பாரே. (க)

End:

ஓதப்பா வொளிபோலாமுன்றன்றேகம்
ஒன்றுமில்லை பிடித்த(வி)டம் பொய்யாய்ப்போகும்,
நாதப்பா வண்டபகிரண்டமெல்(லாம்)
நாடலாமோடலா மசேநகஞ்சித்தி,
நீதப்பா வாதாரமாறில் (வை)த்து(த்)
தப்பாத தேகமது க(ய்)போற்காணும்,

. . . .

(த-பு.)—

இந்நூல், யோக விஷயமானது என்று தெரிகின்றது. இப்பாடல்கள் எளிய நடையிலாயவை. இதில் பத்துப் பாடல்களேயுள்ளன. இந்நூலாசிரியர் சித்தர்களிலொருவராயிருக்கலாமெனத் தோன்றுகின்றது.

No. 1825 தற்செயலழிந்த தகைமை.
TARCEYALALINDA TAKAIMAI.

Page, 1. Lines, 10 on a page.

Begins on fol. 197*b* of the MS. described under No 1310.

Inculcates that everything is the work of God and nothing can be done by man.

Contains 10 stanzas.

Beginning:

ஆதரவாகி யருளினமிழ்ந்திடி
ஞாதரவாரறிவார்—மின்னே—ஆதரவாரறிவார். (க)
செஞ்சிலம்போசைகள் சிந்தவெழுந்திடில்
தஞ்செயலாரறிவார்—மின்னே—தஞ்செயலாரறிவார்.

. . . . (உ)

End:

வென்றிடுமைம்புலன வென்றபோழ்தினில்
வென்றவரெக்குறைவார்—மின்னே—வென்றவரெக
குறைவார். (௬)

உள்ளங் குளிர்ந்திட வுள்ளமலவாதைக்
கள்ளங் கடந்தவர்காண்—மின்னே—கள்ளங்கடந்தவர்-
காண். (௰)

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இது, "எல்லாமீசன்செயலே நம் செயலொன்றுமில்லே" என்னும் விஷயத்தைக் கூறுவது. "மின்னே" என்ற மகடூஉ முன்னிலையையுடைய பத்துக் கண்ணிகளாலாயது. இது—ஒரு நூலின் பகுதியெனத் தோற்றுகின்றது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை.

R. No. 1826. கபிலரகவல்.

KAPILARAKAVAL.

Substance Palm-leaf. Size 12½ × 1 inches. Pages, 17. Lines, 6 on a page. Character Tamil. Condition, Injured. Appearance, old.

Begins on fol. 10*b*. The other work herein is Ñānōpadēśam 1*a*. Complete.

A treatise written apparently in condemnation of caste and its distinctions. By Kapilar who is considered to be the brother of the well-known Tiruvalluvar.

Beginning:

குருபாதந் துணை
கபிலரகவல்.

நான்முக[த்தோ]ன்கூறிய நாலுவழிவகை
ஆ[ன](ன்ற)சிறப்பி லரும்பொருள் கூறுங்கால்
ஆண்முதிதோ பெண்முதிதோ
[ஞ](நா)ள்முதிதோ கோள்முதிதோ
நல்வினை மூப்போ தீவினை மூப்போ
செல்வஞ் சிறப்போ அறிவு சிறப்போ
தொல்லைமாஞாலம் படைப்போ தோற்றமோ
எலவா(ப)பிறப்பு மியல்[பாயது](போசெயற்) கையோ
நஞ்சுறு தீ(வி)னை துஞ்சுமோ துஞ்சாதோ
அஞ்சும்போ த[க]ப்பஞ்[சயி]சேந்திரியங்கள்
எ[ரு](ன்)செயாதிற்குமோ எவ்விடத்தேகுமோ.

End:

குலமுமொன்றே குடியுமொன்றே
வா . . . . . . நாலு சாதியில்
புந்தியு(ம்)திருவும் பொன்னும் வேறதுவோ
புலையுங் கொலையுங்களவு[ந](ஞ்)சினமும்

திலேயுறக்களைந்து திற்[ப]பதையறிந்தவர்க்கு
ஆணும்பெ[ர]ண்ணுமல்லது வே(ே)ற
குலமுமில்லை குடியுமில்லையிதைப்
பேணி நடப்பது பிழையெனப் படுமே(ர)
சிறப்புறு செல்வமுங் கல்வியுமல்லது
பிறப்பு நலந்தருமோ பேதையீரே. [பேதையீரே]

(கு.-டி.)—

இது, உலகத்தியற்கையைக் கூறி, ஜாதி வித்தியாசம் கூடாதென்று கூறுவது. திருவள்ளுவரோடு பிறந்த எழுவரில் ஒருவராகச் சொல்லப்படும் கபிலர் பாடியது. அச்சுப்பிரதிக்கும் இதற்கும் பாடபேதமிருக்கிறது. இந்தப் பிரதியில் முற்றுமுளது. இதன் 11-ஆவது ஏட்டில் இவரும், ஔவையும் பாடிய இரண்டு தனிப்பாடல்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

No. 1827. தத்துவநூல்.

TATTUVANŪL.

Substance, palm-leaf. Size, 11 × 1 inches. Pages, 130. Lines, 5 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, Old. Begins on fol. 42*a*. The other works herein are Ñānakkummi 1*a*. Ñānavettiyān 30*a*. Anusthānavidhi 51*a*. Jōtidappādal 59*a*. Incomplete.

A treatise of a philosophical nature, explaining the transcient nature of this world.

Beginning:

திறங்கெட்டா [னெ](னி)னங்கெட்டா ஞு(னக)ங்காரத்தா(ற்)
சே(ர்ந்திருந்)தோர் வாழ்ந்திருந்தோர் செகத்தின்மீதே,
அறங்கெட்டான் [பி](பு)றங்கெட்டா னருளுங்கெட்டா
னவரவர்[கள்] சொல்வார்கள் தம்பிரான்களென்று,
முறங்கெட்டாய் பேய்மனமே ந . . . . . குள்ளே
யினிக்கெட்டாய் பணமிருந்து(ம்) பிணமா[யி](ய்ப்)போச்சே. (க)

பணந்தேடி யா[ர்யி](ரி)ருந்தார் பூலோகத்தில்
பாவி [தி](து)ரியோதனனுர் பாட்டனாரும்,
குணமானதுரோணன் கர்ணன் கி[று](ரு)பன்பூரி
கூறியதோர் [தே](செய)த்திரதன் சகுனி சல்லியன்,
பிணமானு ரர்ச்சுனன்கை யம்பினுலே
பெண்டிரும்பணங் காசும் பிறகேபோச்சோ,
மணமான வாழ்வுபொரு ளாமோ
ம[யி](ற்றி)தெல்லாமொருமா[ய்கை](யை) [ய_ர]மதித்துப்
பாரு[ம்]. (உ)

End:

இ[ண்ணை](ன்றை)க்குச் சதமென்றிருப் பதுவும் பொய்யே
யியலானமாடும் பொய் யாடும்பொய்யே,
என்றன்மக்கள் தந்தைதாய் மனைவிபொய்யே
வாகானபணமும் பொய் வாழ்வும்பொய்யே,

ஒ[ண் ணு](ன் று)ஞ் சதமில்லையப்பா சரீரம்பொய்யே
யூதாரி யாசையிலே யுழல்வதெல்லாம்,
நின்றிருக்கு நீர்தனிலே குமி[ளி](ழி)யைப்போல்
நிலையில்லாக் காயமிது நீநம்பாதே. (௰அ)

சுபமஸ்து.

(கு-பு.)—

இது உலகத்தின் நிலையாமையைக் கூறி ஞானமூட்டுவது. நூலாசிரியரின்னாரெனத் தெரியவில்லை. செய்யுள் நடை தாழ்ந்தது. இந்தப் பிரதியில் பதினெட்டுப் பாடல்களேயுள்ளன; ஆதலின் நூல் முற்றுப் பெறவில்லை. முதற் செய்யுளில் மூன்றடிகளேயுள்ளன. பிரதி சிதைந்துள்ளது.

No. 1828. போகநாயனார் யோகநூல்.
BHOGANĀYANĀR YŌGANŪL.

Substance, Palm-leaf. Size, 15¾ × 1½ inches. pages, 118. Lines, 7, 8 in a page. Character, Tamil. Condition, Fair. Appearance, Old. Complete.

A work on Yōga in 362 stanzas. It is stated in the beginning of the manuscript that the author is Bhōgar.

Beginning:

ஐந்துகரத்தனை யானைமுகத்தனை
யிந்துவிளமதி போலுமெயிற்றனை
[னை]நந்[து](தி)மகன்றனை ஞானக்கொழுந்தினை
புந்தியில்வைத்தடி போ[த்து](ற்று)கின்றேனே. (க)

* * * * *
* * * * *

மூலாதாரம்.

தானானவேமூலட்சஞ் சிவன்றான்சொன்ன
சாத்திரத்தின் கருவெல்லாந்தரிக்கப்பண்ணி,
கோனானகுறு[னூ](நூ)வா[ய்] யேழுகாண்டங்
கொட்டினேன்வாதமென்ற முறையள்தன்னை,
பானானபாட்டரைத்தான் கருக்கள்கேட்டு(ப்)
பயின்றெடுத்த மாயிசொல்லின்பண்புகேட்டு,
தேனானகாலாங்கியை யரையுங்கேட்டுச்
செப்பினே[ன் யே](னே)ழாயிரந்தான்காணே. (உ)

* * * *
* * * *

அகாரத்தின்மேலாகக் கணேச(ர்)நிற்[ப்]பார்
அதிலேயொருகோணத்தி லுகாரம்நிற்கும்,
உகாரத்தில்வல்லபையாஞ் சத்திநிற்[ப்]பாள்
ஒடுங்கியதோர்முனை யொன்றில[க்]கதலிப்வாயூய்,

புகாரமாய்முகங்கீழ்க் குண்டலியாஞ்சத்தி
பொன்பாம்புபோல்[ச்] சுருட்டிச்சீறிக்கொண்டு,
சுகாரமாய்ச்சுழிமுனை யோடுருவிநிற்பாள்
துரியாதீதமென்ற வவத்தைதானே. (௪)

End:

உண்ணவேயிவ்வ[ழ](ள)வும் யோகமா[ற்](ர்க்)கம்
உறுதியாய்ப்பா(ர்)த்தபடி யுண்மைசொன்னேன்,
கண்ணவே காலாங்கியையர்சொல்ல(க்)
கடாட்சித்த பாட்டரென்றமூலனையர்,
திண்ணவேயவர்பதத்தைச் சிரசில்வைத்து(ச்)
சிறந்தமனோமணித் தாயார்சொல்லக்கேட்டு,
விண்ணவேபதஞ்சலியார் வியாக்கிரபாதர்
[மும்]விலையுள்ளாரென்று சொல்விப்போதித்தாரே. (௩௱௬௨)
போதித்தார்பெரியோர்கள் ருஷிகள்சித்தர்
புத்தியுள்ளானென்று சொல்லியடியேனுக்கு,
வாதித்தருஷிசித்தர் சொன்னபுத்தி
மனதில்வைத்து வாசியு(ட)டவண்மைபார்த்து,
ஏதித்தே[ளா](ழா) யிரத்தில்சுருக்கமாக
வெடுத்துரைத்தே யெல்லோருமெனைப்போலாக,
சோதித்தயோகத்தின் மார்க்கந்தன்னை(ச்)
சொல்லிவிட்டேன் முந்நூற்றில்சொச்சந்தானே. (௩௱௬௩)

Colophon:

யோகசித்தி முற்றும். குருவே துணை.

விடு பாட்டு.

காந்தண் மலருங் கடலு முறவானு(ல்)
வந்துதனமிரண்டு[ம் வந்தெ](மெ)ய்யாதோ—காந்தண்தமலர்
காட்டிலேபூ[த்திரு]க்குங் கடலிலேகாய்காய்க்கும்
நாட்டிலேகேட்டிருப்போம் நாம்.

தேவி சகாயம்.

(கு-பு.)—

இது, யோகமார்க்கங்கள் பலவற்றை விரிவாக விளக்கிக் கூறுவது. 362 பாடல்களாலாயது. போகநாயனார் செய்ததாக நூல் முதலிற் குறிக்கப்பட்டுள்ளது. செய்யுள்நடை தாழ்ந்தது. பிழைகளதிகம். இந்தப் பிரதியில் நூல் பூர்ணமாகவுளது. இங்குள்ள காப்புச்செய்யுள் திருமந்திரத்தின் காப்புச் செய்யுளாகும்.

No. 1829. அகத்தியர் ஞானம், நூறு.
AKAṬTIYAR ÑĀNAM, NŪṞU.

Pages, 63. Lines, 6 on a page.

Begins on fol. 19*a* of the MS. described under No. 801.

Complete.

Same work as that described under R. No. 9(*a*) of the Triennial Catalogue of MSS. Vol. I, Part II.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்லாக் 9(*a*) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

No. 1830. அகத்தியர் ஞானம் நூறு.
AKATTIYAR ÑĀNAM NŪṞU.

Pages, 22. Lines, 35 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 332.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. முற்றுமிருக்கிறது.

No. 1831. அகப்பேய் சித்தர் பாடல்.
AKAPPĒI SIDDHAR PĀḌAL.

Pages, 24. Lines, 5 on a page.

Begins on fol. 59*a* of the MS. described under No. 802.

Complete.

A treatise of a philosophical nature attributed to Akappēi Siddhar. This work is printed.

Beginning:

நஞ்சுண்ண வேண்டாமே—அகப்பேய்
[ஞ](நா)யகன் தாள் பெறவே
நெஞ்சமலையாதே—அகப்பேய்
நீயொன்றுஞ் சொல்லாதே. (க)

பராபரமானதடி—அகப்பேய்
பாழாக வந்ததடி,
தராதல மேழ்புவியும்—அகப்பேய்
தானே படைத்ததடி. (உ)

End:

தோ[ணு](ன்று)ம் விதங்களெல்லாம்—அகப்பேய்
சூனியங்[கள்] கண்டாயே,
தோ[ண](ன்ற)மல் தோன்றிவிடும்—அகப்பேய்
சுத்த வெளிதனிலே.

பொய்யொன்றுஞ் சொல்லாதே—அகப்பேய்
போக்கும் வரத்தாகும்,
மெய்யென்று சொன்[ண](ன)க்கால்—அகப்பேய்
வீடே[பி](பெ)றலாமே,

Colophon:

அகப்பேய் சித்தர்பாடல் முற்றும்.

சிவமயம்.

(கு-பு.)—

இது ஞானவிஷயமான நூல். எளிய நடையில் கும்மிப் பாடல்போன்ற ஒரு வகைப் பாடலாலாயது. இயற்றியவர் அகப்பேய் சித்தர். ஒவ்வொரு கண்ணியிலும் அகப்பேய் என்ற விளியமைத்துப் பாடியிருத்தலின், இவர் இப் பெயர் பெற்றனர்போலும். இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது. இந்தப் பிரதி யில் இது முற்றுமிருக்கிறது.

No. 1832. அகப்பேய் சித்தர் பாடல்.
AKAPPĒI SIDDHAR PĀḌAL.

Pages, 5. Lines, 5 on a page.

Begins on fol. 32*b* of the MS. described under No. 1036.

Incomplete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இதில் பதினெட்டுக் கண்ணிகளே இருக்கின் றன. பிரதி நன்றாகவுளது.

